85720.

Q23:38.21196TV
N18

481
291.535

85720

உ

சிவமயம்.

9-OCT 1918
MADRAS

# திருத்தவத்துறைப் புராணம்.

இஃது

பழமர்

குமாரசுவாமி முதலியாரவர்களால்

பாடப்பெற்றது

லால்குடி தேவஸ்தானம் மானேஜர்,

கந்தசுவாமியய்யரவர்கள

பேருதவியால்

திருத்தவத்துறை

ஆ. சுப்பிரமணிய முதலியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

TRICHINOPOLY:
WEDNESDAY REVIEW PRESS.
1918.

9-OCT 1918
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தவத்துறைப் புராணம்.

## கடவுள் வாழ்த்து.

(திருவாள விநாயகர்.)

திருவாருஞ்சசிமவுலித்திருவடிக்கன்பெனுமுண்மைசிறக்க
வேழத், தருவாருமொருமுகமுமிருசெவியுமுக்கண்ணுமுயர்நா
ற்றோளுந், தருவாருமைங்கரமுமறுகொம்புமெழுகொம்புந்தாங்
குஞ்சைவ, மருவாருந்தவத்துறைவாழ்திருவாளவிநாயகனைவண
க்கஞ்செய்வாம்

## பாயிரச் சிறப்பு.

(சபாநாயகர்.)

[illegible]ர்புஞ்சிவகங்கைத்தீரத்தோர்பாகத்துத்தேவிகாண
1. திருவ[illegible]மயக்கு[illegible]ருந்தன்முதலோரிறைப்பமுரசமார்
ப்[illegible]ரு குளருஞ்சகந்[illegible]ணத[illegible]யவென்றேத்தவெழுதவத்
[illegible]பத், தருவளருநான்மறையுஞ்சயக்[illegible]வமன்றினடம்புரிசிவன்று
[illegible]தார்வாழ்த்த, மருவளருந்திருத்தெய்[illegible] 1
ண்மலர்கள்போற்றி.

(சப்தரிஷி நாதர்.)

திருமருமநெடியோனுந்திசைமுகனுந்தேவர்களுந்தேவ
தேவே, அருமறையாகமமனைத்துந்தவத்துறையையடைந்தோர்
கட்கருள்வாயென்னும், பொருணிலைமையாயுறைவோயிந்நகரத்
தாசிருந்தபொற்பென்றேத்த, மருவியருளோடிருந்ததவத்து 2
றைபிற்சிவக்கொழுந்தைவணக்கஞ்செய்வாம்.

(பெருந் திருவாட்டியார்.)

வருந்திருச்சிவிகைகவிகைமாதங்கம் வயப்பரியுபயசாமரைகள், அருந்திறன்மடங்கலாசனமாயுளரசபிடேகமார்கல்வி, இருந்துளவினைப்போர்க்கிம்மையேயருளியம்மையுமுத்தியீந்திடலாற், பெருந்திருவாட்டியெனும்பெயர்நாட்டெம்பிராட்டிபொற்பதாம்புயம்போற்றி. 3

(கணேசர்.)

நிலங்கொண்டபரப்பனைத்துநிறையலைநீர்தீகால்வானிகழுங்காலம், புலங்கொண்டவானப்பாலாயினவெல்லாங்கயிலைப்பொருளென்றெண்ணிக், குலங்கொண்டவிமயவலிபடர்கோட்டுக்குழைத்தருவைக்குப்பிட்டேத்தி, வலங்கொண்டோர்பலங்கொண்டமதக்களிற்றின்றிருவடிகள்வணங்கிவாழ்வாம் 4

(சுப்பிரமணியர்.)

மெம்முளத்திடர்களகற்றிடென்றமரரிரந்திடப்புரந்தரனைத்த, விம்முளக்கருஞ்சூருடல்பிளந்தடல்கொள்வேற்கரத்தந்தணர்வேந்தை, மம்மர்கெட்டோடமலையமாமுனிக்குமறைமுதற்பொருள்வெளியாக்கும், செம்மணித்தண்டைநூபுரங்கழற்பூஞ்சேவடிச்சேவகற்றொழுவாம். 5

(நந்தி தேவர்.)

தத்துவக்குழுவைநீக்கித்தற்பொரு[illegible] திரையெனச்செங்கைமு[illegible]ருவடிவைக்காட்டு, முத் ன்முதலினோரைநாற்றிசை[illegible]மூபணிப்பிரப்பொன்றேந்தி, நத்தின நித்தலைவன்றூடாழ்ந்த[illegible]சிறுவிஞானச், சத்தன்முன்னுலாவுநந்[illegible]வாழ்வாம். 6

(மகாவிட்டுணு.)

இலகுநெடு[illegible]யனைத்திகிரிக்கரனுதரமுலகம்வளரெம்மான்பெம்மான்[illegible], அலைகடலிலரவணையிற்றுயிலினடங்கண்டபிரானகலாவின்பச், சலசநிறவதனநுதலரிவைதவந்தவத்துறையிற்றயவாய்நிற்கும், மலர்மகளைமருமமிசையிருத்திடுமால்றிருத்தாளென்மனத்துள்வைப்பாம். 7



(திருஞானசம்மந்தர்.)

பெருவானத்தமரரெலாம்பிரசமலர்மழைபொழியப்பெருநூல்சொன்ன, குருவானவியாதமுனிகையெடுத்தபொய்யினைநந்துட்குழைந்துதேற, வருமாநற்றிரைகிழியவைகயினிலேடேற்றிவாகைகொண்ட, திருஞானசம்மந்தப்பெருமானையென்னுளுஞ்சிந்தித்துய்வாம். 8

(அப்பர் சுந்தரர் மணிவாசகர் திருத்தொண்டர்கள்.)

பண்டெழுவர்தவத்துறையென்றடைவுந்திருத்தாண்டகத்திற்பகர்ந்தோன்போற்றி, தெண்டிரைமுந்நீர்முதலைமதலைதரச்செய்தவன்றாள்சிந்தித்தேத்தி, அண்டர்பிரான்பரியேறியருளேற்றவாசகஞ்சொலவன்றாள்போற்றி, புண்டரீறணிமற்றையறுபானுந்தொண்டரையும்போற்றல்செய்வாம். 9

(அரதத்தசிவாசாரியர்.)

இருக்கஞ்சாமறையானபுராணமிதிகாசத்தினிபல்லையோர்த்து, செருக்கஞ்சாத்தந்தைமுதலந்தணற்குத்திருமான்முன்னீநாற்காலி, உருக்கஞ்சத்தவிசாக்கியுமாபதிபேபரம்பொருளென்றுணர்த்துமுண்மைத்; திருக்கஞ்சனூர்ப்பெருமான்மருக்கஞ்சத்தாமரைத்தாள்சிந்தைசெய்வாம். 10

(மதுரைச் சம்மந்தர்.)

பரசமயக்குறும்பகற்றியுட்சமயமைந்தினையும்பரிந்துபார்த்துச், சிரபுரத்துச்சைவசிகாமணிதாணுப்ச்சைவத்தெந்தெய்வம்வைகி, வரமளிக்குங்கூடலினில்வேதாந்தசித்தாந்தவரம்புகண்ட, குரவனருள்திருஞானசம்பந்தன்செஞ்சரணங்குறித்துவாழ்வாம். 11

(சிவபக்தர்கள்.)

வானவர்கண்மாலயனுமுமைவேதியரும்வந்தித்தேத்த, ஞானவர்களேழ்முனிவர்க்கருள்புரிந்ததிருவடியைநம்பிவாழ்வோ, ரேணமினமானசிவகங்கைநகர்க்கரசனுக்கிங்கிதமாய்வாழ்ந், தானவர்கள்பரிகலத்தோர்தவத்துறையிற்பிறந்தோர்கள்சரணம்போற்றி. 12

முன்றவத்தால்வெண்ணீறுமுழுதணிந்துபசுபதியாமுதன்
மையோர்ந்து, என்றுமிறைக்கன்பாகியெத்தேசத்தெச்சாதியாவ
ரேனுங், கொன்றைமுடிக்கோவல்லாற்கனவினுமோர்பசுத்தெய்
வங்குறியாதோர்கள், வென்றிபுனைகனைகழற்றாள்விரைக்கமலத்
திருக்குமென்றன்விருப்புத்தானே. 13

(அவையடக்கம்.)

பிறகாசங்கரவென்றுபேசியடர்ந்திடகம்பேர்ப்பெற்றியென்
றே, மறைமுனிவனருள்புரிந்தவண்ணம்போலெழுத்தாதிவழுக்
குத்தீர்ந்த, நிறைகவிஞரென்கவிதைபுன்கவிதையானாலுநேயங்
கொள்வா, ரிறைவர்திருத்தவத்துறையினுறையுநிறைபரம்பொரு
ளினிசையீதென்றே. 14

(நூல்வரலாறு)

முன்னவன்மொழிந்தபுராணமீரொன்பானதிற்பதிதிகழு
முற்காந்தத், தென்னையாளுடையான்றென்கைலாயத்திறைத
வத்துறைக்கிருமூன்றாய்ச், சொன்னவத்யாயம்பிரமகைவர்த்த
ஞ்சூரியபுராணமித்தியாதி, மன்னியபுராணமதனில்ஈராறுசருக்க
மும்வருக்கமாயுறைப்பாம். 15

(அத்தியாய வரலாறு)

அஞ்செழுத்துண்மையெழுமுனிபூசையலர்மகளருச்சனை ம
ழுவன், சஞ்சிதமகற்றல்வயிரவிபணிதல்சங்கரிதனைமணம்புரிதல்,
பஞ்சவாயுதனார்பூசனைவசிட்டர்பாவுதல்முரண்டகன்சாபம்,
விஞ்சவேவருதலாங்கதுதவிர்த்தல்மேவியகுணாகரன்விளங்கல்.

சிவதருமத்தின்பெருமையுங்குபேரன்றீர்த்தயாத்திரைய
வன்றியான, நவமெனுமமுதலிங்கமாமகிமைநான்மறைப்பரா
சரன்பூசை, கவர்மனத்தசாதண்டகன்வீதல்கவின்மறைத்தரு
மசன்மாவுந், தவமெனப்பெறுதறவத்துறைப்புராணஞ்சருக்கமீ
ரொன்பதுந்தானே. 17



தலமெலாம்பரவுஞ்சிராமலைப்பெருமான்றண்ணளியாற்ற
டுத்தாண்டென், குலமெலாமீளாவடிமையாய்ச்சூலக்குறிபொறி
த்தாண்டகொள்கையினாற், புலமெலாம்பெற்றுமற்றொருவரையு
ம்புகழ்ந்திடாதவனையேபோற்று, நலமெலாம்வாழ்த்திவாழ்த்தி
யின்னூலுரவினுவனவன்பதிநலத்தால். 18

(நூலாசிரியர் நாமம் காலம்)

இருந்திடுஞ்சகாத்தமாயிரத்தைஞ்ஞூற்றெண்பதினுடனெ
ட்டுமிசையப், பொருந்தியவிசுவாவசுவருடத்தினபுசம்மதிமீன
முத்திரத்திற், றிருந்தியபுராணம்வடகலைதமிழாய்ச்செய்தன
ன்றிருத்தவத்துறைக்கே, வருந்தமிழ்க்குமாரசாமிபான்பழூர்
வந்தவன்றொண்டைமண்டலனே. 19

(பாயிரம் முற்றியது.)

(பஞ்சபுண்ணியஸ்தல மகிமைச் சருக்கம்.)

வெண்ணிலாக்கற்றைவீசிடும்பளிதவெற்பெனப்பற்பமார்
மெய்யன், அண்ணலாரணநூலமிழ்திடைப்பிறந்தவறம்புகல்ந
வினனறிபப், பண்ணுலாமகதிவீணையன்றகிர்தான்படர்ந்தென
மிடைந்தகோடீரன், உண்ணிலாவுண்மையுடையவனயனந்தொ
ளிர்மணிச்செபவடக்கரத்தோன். 1

செய்யதாமரைகளலர்ந்தெனக்கருணைதேக்கியநோக்கினன்
றிகழும், வய்யமீரேழும்வழங்குவகானும்வயங்கொளியாடிபோ
துளத்தன், பொய்யிலாச்சீலச்செபமுனிவோர்க்குப்புரவலன்
புண்ணியவடிவன், வெய்யவங்கியினிற்சுசிபன்வெண்சசிபோல்மி
குமுயிர்க்கிதஞ்செய்வேதியர்கோன். 2

வள்ளவாய்வெள்ளைவனசமீதிருக்கும்வாணிவாழ்திசைமு
கக்கடவுள், பிள்ளைமூவுலகும்பிதக்கணம்புரிவோன்பிறங்கிபவவ்
வனத்தமர்ந்தோர், கொள்ளைமாதவந்தான்வடிவெடுத்தறற்
போற்குலவியநாரதமுனிவன், தெள்ளுநான்மறையோர்நைமிச
வனத்திற்றிருவருட்செயலின்வந்தடைந்தான். 3

அடைந்தநாரதனைமிடைந்தெதிர்சவுனகாதியரன்பொடுவ
ணங்கிக், கடைந்தவானமுதங்கண்டவானவர்போற்களித்தவர்க்
காசனமளித்து, மடந்தையோர்பாகற்போற்றியமுனிக்குமலரரிக்
கியமுதலுதவித், தொடர்ந்தெழுஞ்சுரும்பார்சுகந்தநாண்மலர்
தூய்ச்சூழ்ந்துவீற்றிருந்தனர்துதித்தே. 4

பண்ணிசைபழுத்ததிவவியாழ்முனிவன்பழமறைமுனிவ
ரைப்பாரா, அண்ணலாருளானலத்திருந்தீரோவருந்தவந்தழை
த்துவாழ்ந்தனவோ, விண்ணுளார்முனிவர்பிதிர்க்களுக்களிக்கும்
வியன்றருத்தடங்கள்வாழ்ந்தனவோ, வண்ணவான்கரத்திற்பவி
த்திரங்கறிப்பமறித்திடாமான்கள்வாழ்ந்தனவோ. 5

நங்குலத்தெய்வக்கண்ணுதற்பூசைநலம்பெறநடந்துவாழி
யதோ, அங்கிவேட்டவியீந்தரனையேத்தினரோவதற்குறும்பொ
ருள்கள்வாழ்ந்தனவோ, எங்குமாம்பொருளுட்டங்குவோரிருக்
குமிடங்களுமவிப்புகைமணமும், தங்குமாச்சிரமந்தழைத்துவா
ழ்ந்தனவோசாற்றுமின்முனிவர்காளென்றான். 6

அறத்துறைதிகழ்ந்தவாரணக்கடலினளவுகண்டருந்தவத்
தற்றோய், மறைக்குலமுதல்வநின்னருளதனால்வாழ்ந்தனமியாவு
வாழ்ந்தனவான, முறுக்கவிழ்ந்தளவிற்கோடிவண்டாற்றமுருகு
கொப்பளிக்கு முண்டகத்தோன், திறத்துறும்புதல்வநினக்குப
சாரஞ்செப்பமற்றெமக்கிலைசெயலே. 7

என்றுதாழ்ந்துரைத்திட்டொன்றுகேட்குவமியாமிம்பரின்
முன்புவந்தனைநீ, அன்றெமையாண்டயாநிசிவிரதமம்பிகைவிரத
மைங்கரத்தோன், நன்றுறுவிரதமந்திரசித்திநலனுறுதலமெலா
நவின்றநீ, கொன்றுகூறினையைந்தெழுத்தினுக்கொப்பாயொன்
றிலையுண்மையீதென்றாய். 8

அரிக்குறும்பெரியுஞ்செழுத்துண்மையரும்பொருட்
கடையநல்வழியாம், பரற்கொருகேளிக்கிரகமாமென்றும்பகர்ந்
தனையிருடிசந்தச்சுந், திரத்துறுதேவுஞ்செப்பினைசித்திதலமு
முன்செப்பினைதிகைத்தோம், கரக்குறுமிருட்கோர்கதிரவனுகிக்
கழறுதியென்றுகைகுவித்தார். 9)



உண்ணிகமெழுத்தஞ்சென்னுமுன்முனிவற்குரோமமுஞ்
சிலிர்ப்பவானந்தக், கண்ணினீர்பொழியவாய்மொழிகுழறக்கண்
ணுதற்கடவுளைநினைத்தே, பண்ணுலாமொழியாள்முனிவரைப்
பார்த்துப்பலபலகற்பமிங்கிருந்தே, எண்ணிநாமுணரக்கமுடியு
மோவஞ்சாமெழுத்தினைழுத்துமான்மியமே. 10

அந்தமந்திரத்தின் சித்திதந்திடுமத்தலமு மத்தன்மையவர்
குஞ், சந்தவானவருட்சந்திரமௌலிதலைவனுந்தகைமையேபோ
லுஞ், சிந்தையானினைக்கப்படுவதன்றந்தச்சித்திநற்றலமுமைந்
துறுப்பாம், பந்தமாற்றிடுநீர்நதிவனப்புரம்புட்கரணிக்ஷேத்திர
மெனப்பகர்வார். 11

இந்தவைந்தியற்கைத்தலத்தினஞ்செழுத்துக்கிறையவன்
சித்திதந்தருள்வான், முந்தைமாமுனிவீரென்றிவைமொழிந்தா
ன்முக்குறும்பெறிந்தைந்துமடக்கி, அந்தமாதிசனுமற்றநற்பொ
ருளையகத்துள்வைத்தருமறைசொழித்த, நந்தலினன்னுணைகை
முகன்கருணைநல்குநாட்டத்துநாரதனே. 12

ஏற்றிருகொடிபோன்கூற்றினைக்கடிந்தவிருங்கதிர்க்கனைக
ழற்கமலம், போற்றிசைத்தேறலூற்றிருந்தொழுகுப்புகழ்புனைம
கதியாழ்முனிவன், சாற்றியமாற்றஞ்சவுனகர்கேட்டத்தலமிதெ
ன்றருளுகவென்ன, நாற்றிருமுகத்தோன்சனகனுக்குரைத்தா
ஞனுமன்றறிந்ததென்றுரைப்பான். 13

வேறு.

திருவாழ்ந்திருக்குஞ்செங்கமலப்போதொத்திடும்பூவுலகெ
ன்றே, அருமமுனிவருரைப்பாதனகட்டுப்பொகுட்டாடமே
ருத், தருநாவலன்றீவென்பரதிற்றென்பாற்சம்புதழைத்திலாற்,
மருமாலிமயமதன்றென்பால்வளங்களெல்லாமென்மேலும். 14

தருபப்பயிர்சடைத்துவளர்பாதகண்டந்தயங்குமதிற்,
கருமத்தளையையெறியுமலைக்கங்கைமுதலேணதியதனிற், றிரு
வைப்பொருளைக்கலைஞானத்திரளைச்செறிவித்தாடினர்க்குக்,
குரவத்தொழியாவானந்தங்கொடுக்குந்திருக்காவிரியென்பார்.

திருக்கதிர்சமலமுகமரக்கரம்பல்செய்யவாய்மையுறுகண்கள், மருக்கமழ்நீலமலைகள்செங்கரளுசைவலங்குழல்வளர்கேமிக், குருக்கிளர்பறவையெகின்வெண்புளினங்குலவியபுளினமாஞ்சகனங், தருக்கியவெண்பட்டொலிகலையொலியத்தாயளாங்காவிரிநதிக்கே. 15

பக்களுக்கிரங்கிக்காவிரிக்கரையின்மன்னுமோர் புண்ணிய வடிவத், தக்கமாலைகளும்பூதியுமணிவோராரணத்தந்தமாய்ந்திடுவோர், செக்கர்போன்மேனிச்சிவனலதறியாச்செம்மையோரும்மவனதியின், மிக்கசீர்விளம்பவரிததன்வடபால்விளங்குவவயிரவ்வனமே. 16

அடைந்தவர்பாவமகற்றலாற்பாவகரவனமென்னவுமறைவார், படர்ந்திடுங்கொடிகளடர்தருமிருகம்பறவைகளுறவுகொள்பற்றான், மிடைந்திடும்பகையில்சிவவனமெனவும்விளம்புவரிதுவனமெனப்பூ, மடந்தைசேர்நகரொன்றதனடுவயங்குமற்றதன்பெருமையார்வகுப்பார். 17

பொன்னிறைச் சுரும்பரின்னிசை பெழுப்பிப் புதுநறவருந்துமைந்தருக்கண், மன்னியவுலகந்துல்லியமென்னில்வசையலாதிசையதன்றம்ம,வுன்னியதருமமெல்லியும்பகலுமுறைநகர்நிறைபரம்பொருளைத், துன்னிடநினைவோர்க்கன்னகர்வழியாஞ்சொலிற்பெயர்திருத்தவத்துறையே. 18

இருவருமறியாவொருபரம்பொருளங்கிருத்தலாற்றென்கயிலாயம், மருவருமுண்மைச்சிவபுரமென்றும்வயங்குறுமியங்களினார்ப்பும், அருமறையார்ப்புமாகமத்தார்ப்புயங்கிவேட்பவர்கடமார்ப்புந், தெரிதருபூசைசெய்பவரார்ப்புந்திகழ்ந்தமுந்தேக்கிமேக்குறுமால். 19

ஆயிரங்கோடிஞாயிறொத்திலங்குமணிமணிக்கோபுரத்தழகும், பாயிருள்கிழித்துச்சேயொளிபரப்பும்பணிமணிமண்டபத்தழகுஞ், சேயுயர்கோயிற்றிருமதினழகுந்திருவிளையாடுநாவீதித், தூயசீரழகும்பழமறைநாவாற்சொல்லுவதன்றியாசொல்வார். 20



ஆணவக்கிழங்கையகழ்ந்[illegible]த்தெறிந்தவகத்தினர் மகத்துவமுனிவோர், மாண[illegible]முழாங்கட்காகமபுராணம்வகுத்துரைமிகுத்துவைகு[illegible], மீசணிலத்தமரர்தருக்களாய்த்தவங்கள்செய்கொண்டுசேர்வர், நீணிலத்தரியதருமங்கள்யாவுநிலவிடுதலுமற்றதுவே. 22

அன்னகர்சிவனார்வயிரவிபடவியயன்புரமனாதியங்கதுவாய், மன்னியமுத்திமாநகர்வயிராக்கியபுரமிந்திரைமணாளன், றன்னகர்பஞ்சபுண்ணியத்தலமத்தனபதிதவத்தினாற்பெற்ற, தென்னளகையாந்தெக்கணகாசிதிருத்தவத்துறையெனச்செப்பும். 23

அத்திருச்செல்வச்சிவபுரத்துறைவோரவர்முகம்யாவர்நோக்கிடினுங், குத்திரப்பாவக்குறும்பறுத்தமரர்குலத்தொடுநலத்தவராகிச், சத்தியப்பொருளைச் சார்குவரென்றாற்றவத்துறைக்குவமைசாற்றுவதார், இத்திருநகராஞ்சுயம்புபுட்காணியியற்கையுமிசைக்குவமினிதே. 24

குறியமுள்ளரைநுண்டொளைநெடுஞானக்கோகனகத்தினுமினிதாய்ப், பொறிமகளுறையுமன்னகர்நடுவெண்புனியதீர்த்தமொன்றுளவால்,அறிவினர்துதிக்கும்பெயர்சிவகங்கையானதிகுவனதின்பெருமை, சிறயாருயிர்கள்செப்புவதன்றத்தெய்வத்தீர்த்தமான்மியமே, 25

மாயிருஞாலப்பரப்புமந்தரமும்வானமுஞானநாயகனுக், காயவத்தீர்த்தப்பெருமையைவகுத்துமறல்வயிடூரியநிறமாஞ், சேயபூரணமேசிற்றுயிர்க்கிரங்கிச்சிவகங்கையாயுமங்கிருந்த, தூயநீரதனிற்சுராதிபர்படிந்துதுயரறுத்துயர்பதத்தடைந்தார்.

ஆரணர்ப்படுத்துமளவினோயுடையோர் யாவரேயெனினுமத்தீர்த்தத், தோர்முறையாடிற்பாவராசிகளோடொழிந்திடுமிழிந்துநோயெல்லாந், தீரமேன்முனிவர்சேவைசெய்துறைவார்சிவகங்கைசிவகங்கையென்றே, தூரமேயுறைவோர்நினைக்குறும்பலன்கள்சொரிந்திடுந்தெரிந்துசொற்றனமே 27

தூய்யவெண்டுவிச்செ...ர்ச்சூட்டுத்தோலடிப்பானிறத்தெகினஞ்,செய்யவாந்துண்டப்பை...ளியளிகள்செழும்புறநாகணந்திகிரி, மெய்யுறும்பறவைமிடைதலா...றந்துமென்னடைமாருதந்தவழ, வுய்யவந்தடைந்தோர்க்கருள்புரிந்...துமெ...பெருந்தீர்த்தமீதுரைத்தாம். 28

தண்ணிலா முத்தந்தோற்றலரிரைத்துத்தலைவளைத்தலைகள்வந்தெற்று, மெண்ணிலாச்சீர்த்தியத்திருத்தீர்த்தமிலகியபூருவத்திசையில், விண்ணுளாரயன்மால்வேதமாகமங்கள்விரவியின்றேத்திவாழ்த்தெடுப்ப, வண்ணலார்சோதிச்சுடரொளிச்சயம்புவாகிவீற்றிருத்தல்கேத்திரமே. 29

சச்சிதாநந்தத்துமாபதியனுதிசுயம்புவாய்த்தனையடைந்தோர்கட், கிச்சியாநிற்கும்பலன்களீந்துறையுமிச்சிவலிங்கநாயகனை, நச்சியேநினைக்கக்காணமுன்செவிக்கநாற்றமும்பேறவாழ்த்தெடுப்ப, மெச்சியாதரவோடவர்க்கருள்புரிவான்விமலனோர்சயம்புவாகினனே. 30

ஆங்கவன்றனேயஞ்செழுத்தினுக்குமதிதெய்வமந்தொழிலாக்கும், பூங்கழற்பெருமானழிவிலாப்பதமும்போற்றுவோர்க்கருளுமெய்புனித, னீங்கிவன்சுயம்புகேத்திரமாகவென்னமாதவம்புரிந்ததுவோ, தேங்கமழுந்தப்பூமிசெஞ்சூலத்திருக்கையாற்கிருக்கையானதுவே. 31

உலகெலாமுடையர்னத்திருநகருக்கோங்கரசாகியேகாப்பா, னலமெலாம்பரவுமத்திருநகர்க்குநாற்றிசையருத்தயோசனையி, னிலமெலாந்தென்பாற்காசியதாகும்நிறைந்திடுமுனிவர்தேவர்களும், புலமெலாமுதவும்புண்ணியம்விளையும்பூமியென்றுரைப்பர் புண்ணியரே. 32

மறந்திகழ்பாவங்குறைந்திடுமறங்கள்வளர்ந்திடுமத்தலம்வசிப்போற், கறைந்திடும்பஞ்சபாதகமகலுமாக்கியநன்றியையாக்குந், திறந்திகழ்பவத்தைச்செற்றிடுமியன்றதிரவியமத்தலத்தீந்தோர், புறந்திகழ்தலத்திற்கோடிபொன்னீந்தபுண்ணியம்நண்ணுவரன்றே. 33



பூம்பொழிலுடுத்ததவத்துறைமற்றும்புண்ணியந்தபஞ்செபந்தியானஞ்,சோம்பலாதியன்றமாத்திரஞ்செயினுஞ்சுற்றியமற்றயதவத்தில், நாம்புகல்நூலின்படிபுரிபலத்தின்கோடியொன்றிதற்கிணையவா, தாம்புகழ்பஞ்சாக்கரம்விளைபூமிதானலாற்பதிகள்வேறியாதோ. 34

அத்தலமதனிற்பூமிதானத்துக்களவிலைப்பெறும்பயனம்ம, சத்தமாமுனிவற்கீசனென்றொருபேர்தானுவுக்குண்டதுவன்றிச், சுத்தமாந்தீர்த்தந்தொழுஞ்சிவகங்கைதோய்ந்துமாயவன்றனைத்தோயச், சித்தமாந்தவத்திற்றிருவிருந்ததனாற்றிருத்தவத்துறையதன்னகரே. 35

நந்தவில்காயத்திரிகதிவடிவாய்நான்முகன்நகரெனுங்குறிப்பால், வநதுவுந்தவர்கள்வல்வினையொழித்துமனத்தினினைந்தவைவழங்கு, மைந்தெழுத்தாதிமந்திரமனைத்துமந்தணருருவுகொண்டருள்வேட், டிந்தமானகரத்தீசனைப்பூசித்தெழுமுனிவாருமேற்றினரே. 36

வம்பலர்படிதேன்பம்பிசையெழும்புவயிரவிவனத்துமாமுனிவ, ரும்பர்சூழ்சுயம்புக்கேத்திரமுங்கட்குண்மையாஞ்செபசித்தித்தலமே, யிம்பரில்வினவிக்கேட்டவையிசைத்தோமென்றனன்கொன்றைவேணியனைத், தம்பமாய்நினைந்துவருவினைதடிந்தத்வமுனிவரர்தொழுந்தலைவன். 37

பஞ்சபுண்ணியஸ்தலமகிமையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக பாயிரமுள்படச் செய்யுள் ௰௯.

---

## இரண்டாவது சப்த ரிஷிகள் பூஜித்தவத்தியாயம்.

மதியணிமவுலியான்றுதியமுதவாரியூற்றெடுத்துமாதிரங்கண்,முதியவான்முடியுமேக்குறவிசைக்குமுனிவரன்மொழியமுதுண்டப், புதுமைகூர்முனிவர்பூந்தவத்துறையெம்புனிதன்முன்னெழுமுனிவோர்கள், விதிமுறைபூசையுவந்தவற்கருளியன்றிருநாமமுற்றதுவும். 1

வெண்ணகைச்செவ்வாய்க்கருங்குழற்பசியபேவயனதோளி
குங்குமப்பொற், றண்ணுறுந்தனச்செங்கமலைநோற்றதுவுந்தவத்
துறைப்பெயருஞ் சாற்றென்ன, வண்ணலாரணத்தினரும்பொரு
ளுணர்ந்தோனுங்கவற்கமுதமூட்டுவபோல், வண்ணவான்பவள
வாய்மலர்திறந்துள்வரதனைநினைந்திவைவகுப்பான். 2

வேறு

முன்னமொருகாலமமரற்குமுதலானோன்,
மன்னுகதிர்பன்னிருவர்மாமதி வசுக்கள்,
தன்னிகரில்மற்றையிமையோர்தமர்களோடும்,
பொன்னின்மலரோனவைபுகுந்தடிபணிந்தார். 3

வேதமொருநான்குமதின்மேன்மைவழியாவும்,
ஓதினையெமக்குமுதலாயினையுயர்ந்தோய்,
நீதியிலாதபொய்பிசாசரர்வழுத்தச்
சாதியுறுதாருகனடற்கைதவிராயோ. 4

சிந்தைகவலுற்றுமிகநொந்துசெறிவுற்றோ
மெந்தையருளென்றலுமெமக்குமவரிக்கு
மந்தமறவோன்வலியடக்கவரிதாகிச்
சந்தமிடற்படுதுமென்றுரைசெய்தானால். 5

வேறு

இந்தவாசகங்கேட்பவர்கவலையுற்றிரங்கி
எந்தவாறிவைமாற்றுவதிலங்குநான்முகத்தெம்,
மெந்தையேயெனத்தன்னிகரின்றிமேலான
இந்துசேகரன்வீரியத்தாலிறுமென்றான். 6

எம்மனோர்க்கரிதாகியவேதநாயகன்பால்
அம்மநாமெலாஞ்சென்றுவீழ்ந்தாற்றுவமார
வம்மினீரெனமலரயனவரொடும்வணங்கிச்
செம்மைபோர்தொழுங்கைலைமால்வரையடிச்சென்றான். 7



தொழுதுமால்வரைசூழ்ந்திவர்ந்தாரருட்டொடர்பான்
முழுதுமொய்மணியொளிபழுத்துயர்ந்தவாலயமுன்
பெழுந்துகோபுரம்வணங்கியங்கேகியெங்குலத்துப்
பழுதிலாததேவாகியநந்தியெம்பரமன். 8

சூழ்ந்துபுண்டரங்கண்டிகைதுலங்குமெய்க்கணங்கள்
வாழ்ந்துபோற்றுறவாய்ந்தமர்ந்தோன்மலரடியிற்
றாழ்ந்துவந்தமைசாற்றிடத்தனைநிகரில்லா,
வேந்தல்வேலைபார்த்திரஞ்சிவந்தவைவிளம்பினனால். 9

அரியநான்மறையந்தமுமளவிடாவமலன்
பரிவினோடருள்புரிந்துசெம்பதுமனேமுதலர்,
முரியவானவர்தங்களையுய்க்குதியென்ன
விரைவினிற்றெழுநந்திவந்தவர்தனைவிடுத்தான். 10

வேறு

முடங்குளைமடங்கன்முடிமிசைத்தவிசின்மூவுலகின்றவெம்
மன்னை, யிடங்கொளவலங்கொண்டமர்ந்தவெம்பிரையையெதி
ருறக்கண்டலரிரைத்தா, ரடங்கிடாவன்பிற்பணிந்தனரெழுந்தா
ராடினர்பாடினரன்னாள், விடங்கொலாதெம்மைவிதித்துயிரளித்
தவிமலனேசயசயவென்றார். 11

கதிர்மணிச்சூட்டுமெதிரிறப்பார்தட்கங்கணுசெருக்கணன்மத
னைத், துதிபெறவெரித்தோய்மதிகொள்சேகரனேதோகையோர்
பாகமாதேவ, இதங்கொளஞ்செழுத்தாம்பிரணவகமலத்திருந்
திடுஞானநாயகனே, நதிகொள் செஞ்சடிலத் தெக்கணமூர்த்தி
நாயகாநமவெனநவின்றே. 12

இருக்கொடுமலர்களிறைந்துநின்றேத்துமெமினவாகனன்
முகம்பாரா, தருக்களினமரர்தம்மொடுஞ்சார்ந்ததன்மைசாற்று
தியெனத்தாழ்ந்து, முருக்கிதழ்முருக்கியரக்கிதழாம்பன்முகை
வெடித்திடநகைகோட்டு, மருக்கமழ்திருவாய்மலர்மகள்மணா
வாதவென்றேத்திவாய்புதைத்தே. 13

அருகுறவொடுக்கம்பெருகுறநின்றேயமலதாருக வடலசுரன், மருமலிதுளபமால்முதலோரைவாட்டிவான்வளமெலாங்கவர்ந்தான், பருவரலுழந்துன்பதமலரடைந்தோம்பனிமதிக்கதிர்விடுமவுலி, யொருபரம்பொருளேதிருவருள்சுரந்தெம்முயிரளித்தருள்கவென்றுரைத்தான். 14

நமதுவீரியமாம்பரஞ்சுடர்ப்பொறிகணல்குதும்ஞாலங்கடாங்கா, தமதுளமேதென்றுறைத்திடவிரிஞ்சனெண்புவிக்குரைக்கலாற்றேனச், சுமையெனவவளும்பரமவீரியத்தின்டசரிணைநல்கவல்காற்று, மமைவுறத்தாங்காதங்கியுந்தாங்கியமுதகங்கையுட்புகவிடுத்தனரால். 15

இரணியகருப்பவிப்பெரும்பொறிகளினையசேயாகிநுந்துயர்கள், முரணினைமாற்றுமெனவிடைகொடுப்பமுன்னவன்முப்பத்துமூவ,ருருவனான்முகனுங்கங்கையில்வரலுமுய்த்திடும்பொறிகளைக்கங்கைச், சரவணத்துய்ப்பக்குழவிகளாறாய்ச்சண்முகனுடல்கொண்டிருந்தான். 16

சுடரொளிவேலோடுதித்தருள்சுவாமிசுந்தரத்தந்தமார்சொல்வார், மடல்கொள்செங்கமலமுகங்களுநீலமலர்நிறக்கண்களுமுயர்த்த, திடனுறுமார்புமேழிடச்சேப்புந்திகழொளிக்களமுஞ்செங்கரமு, நடநவில்குமரநாயகனழகைநாகர்கண்டோகைகொண்டனரால். 17

பாணலவாய்க்குழவிநமர்க்கெலாம்பதியாம்பாலகர்க்கினியபாலூட்ட, மானலார்யாவரெனவுளமோராவானவர்குரவனேழ்முனிவர்க், கானகற்பினர்களாமெனவமராருந்துதிபுகன்றருநதுதியை, ஞானமாஞ்சேய்க்குன்றனக்குடப்பாலைநல்கெனநாண்கொடுமறுத்தாள். 18

மற்றையமுனிவர்க்கானதன்கற்பின்மனைவியரிசைந்துவானமுதந், துற்றுபால்சுரந்துசுப்பிரமணியன்றுய்த்திடநற்றவப்பயனு, லுற்றளாரளித்தாருமைமணவாளனொருவடிவாக்கியேயும்பர், செற்றிடும்பகையைச்செறுத்தவர்க்கரசாய்த்திகழ்கெனவிடுத்தனன்சேயை. 19



அடல்கெழுசுடர்வேலவைகொடவ்வசூரனைவிகொண்டவர்களுந்துதிப்பப், படர்கெழுசுரர்சேனைபதியானன்பன்னிருதடம்புயப்பரமன், சடைமுனிவரர்களெழுவருங்கங்கைத்தடத்தகமதனைத்தான, முடிவுறவந்தாறுவருமனையைமுனிந்தனர்முதியந்துதமையால். 20

அரவுடலிற்பாதியென்றுரைக்குஞ்சுருதிதம்மனையையாக்கு, மு ந்தமையறியாதன்னியக்குழவிநயந்துணச்சீரந்துபா வாவர், பிந்தவில்லறத்தைத்துறக்குவமென்றுவேங்கினரிச்செய புரிவே, கந்தவேளுணர்ந்துருத்திராக்கடைப்படுவீரென த்தான். 21

முன்னமேமறுத்தவருந்துதிதனையுமுனிர்திவைசெப்பியம்முல்லைப், பன்னியைமணந்தவசிட்டனைப்பதிபின்பாலகன்பசுவகையன்றென், றுன்னலைப்பாவிந்தெனத்தொடலாகாவுண்மைகொண்டனையவமுற்று, யென்னநின்மனைவிக்குரைத்திடாயேயுமிவ்வகையாகவென்றிசைத்தான். 22

சரவணமுயர்த்தகுரவணிதடந்தோட்சண்முகக்கடவுடாட்டுணைத்தா, மரைமலர்நிறையமருமலர்தூவிவணங்கிவல்வினையிஞேமயங்கித், திரிவுரும்பிழையைப்பொருத்தருளென்னத்திகழ்ந்தகற்பருந்துதியோடும், பரவுறுவசிட்டன்முதலியமுனிவர்பணிந்திடத்திருந்தருள்புரிந்தான். 23

பதிபசுவிதமோர்ந்திப்பதியாயப்பதிமறைமுடிவறியாத, மதுமலர்ப்பதத்தின்வந்தனைபுரிந்துமாதவமாற்றுவீரென்று, துதைநெடுங்கொண்டைத்தோகைமேகாரந்துறந்தடியவர்வினைதூர்க்கு, பதியணிமவுலிமைந்தனுங்குரைப்பவணங்கியேதலங்கணுடிரால். 24

பூமிசைத்தென்பாற்போந்துமாமணியும்புதுமலர்க்கொள்ளையுமள்ளிக், காமிசைக்கரையிற்றிரைகொணர்ந்தேற்றுங்காவிரிமாநதிக்கரையிற், றேமலர்த்தருவின்கோவுலகென்னத்திருவளர்சிவநகரேழில், வாமமென்பூதிமணியணிந்தமலன்மலரடிவந்தனைபுரிந்தார். 25

அத்திரியையூற்றமலனைப்பூசையாற்றியேசிலையயின்றிருந்
தான், சித்திகொள்பிருகுதிருப்படினத்திற்றிரிபழம்பாமனுக்கா
ட்டிச், சுத்தியோடமல்ன்பூசனைபுரிந்துதோயமுஞ்சருகுமேயரு
ந்திப், பத்தியோடிருந்தான்புலத்தியன்சோற்றுத்துறையதீ
பூசைபண்ணினனல். 14

ஆதுலர்க்கெல்லாமறுவகைச்சுவையோடன்னமுநாலங்க
வசித்துப், போதபோடிருந்தானுதிவேதத்தின் புரியினுபுவிக்கு
வசிட்டன், சீதபாமதியஞ்சேகரற்பூசைசெய்துவாயன்டசுரி
மருந்தி, நீதியாலிருந்தான்கவுதமல்கண்டியூரில்வந்திடுதகங்
கர்ந்தான். 15

பூந்துருத்தியினிலங்கிராப்பூசைபுரிந்தகழ்கிழங்குகொண்டி
ருந்தான், சாந்தமாமரீசிதருமநெய்த்தானத்தானுவைத்தாழ்ந்
துவந்தித்தே, யேந்திடுமாலம்பொசித்தவனிருந்தானெழுவரும
ஞ்செழுத்தியம்பித், தேர்ந்துமுக்காலம்பூசனைபுரிந்தைதந்தமுவி
டைச்செய்தனர்தவமே. 28

திகடரும்பாசுபதவிரதத்தின்செய்கைபூண்டைவகைப்புல
னுந், தகைவுசெய்திவ்வாறமரர்களாண்டிற்சகத்திரமிருந்தவ
மியற்றி, யகமெலிவுறவுமப்புலியணிந்துவெம்புலியதளரைக்கி
சைத்த, பகவன்வந்திலனைத்திரிபஞ்சநதியினிற்பரமனையடை
ந்தார் 29

சினந்தலைக்கொண்டமடங்கலேற்றணையிற்சென்னியிற்
பொன்னொளிசெறிந்த, நனந்தலைக்கிருத்திநந்தியெந்தேவைநார
ணன்முதலினோர்போற்றத், தனந்தழைத்தோங்குந்தருணவாண்
கிரணத்தடம்மணிமகுடமுன்சூட்டு, மனந்தமாதவரொத்தவிர்சு
டரையாற்றமலனையருச்சனைபுரிந்தார். 30

இருவழிச்செல்லாதொருவழியடக்கியெழுவருமமலன்முன்
னிருந்தே, பருவமாயிரமாண்டருந்தவமியற்றிப்பங்கயக்கண்ண
னேட்யனு, மிருவருங்காணுவிணையடிப்போதிலியல்பின்முப்போ
துமர்ச்சிக்கத், திருவருள்சுரந்துதவர்களுக்கிரங்கிச்சேணிடைச்
செப்பன்மேயினனல். 31



குடதிசைப்பொன்னிவடகரையதனிற்குலவியசிவபுரமொ
ன்றுண், டடையுமுன்சித்திபாக்கிடுஞ்சாபமவ்விடத்தகன்றிடு
நமக்கும்,படிமிசைத்தலங்களெவற்றினுமந்தப்பஞ்சபுண்ணியத்
தலத்தென்றும், விடலறிதாயவிருப்புடனிருப்போம்வியந்தவண
யந்துபூசிப்பீர். 32

அத்திருநகரத்தருமையாரறிவாரப்பெருங்கடவுளங்கிரு
க்கு, முத்திமுத்திறைக்குமலைச்சிவகங்கைமூழ்கினோர்முன்புதே
வர்வர், பத்திபர்லொருஞான்றுங்கமர்நம்மைப்பரிவொடுபூசனை
புரிவோற், கெத்திருவேண்டுமவையெலாங்கொடுத்தெம்மிணைய
டிக்கீழிருத்துவமால். 33

சுரர்கள்பூத்தூவித்தொழுஞ்சிவகங்கைதோய்ந்தவரங்க
மேற்றோயா, தருவினைநோய்கள்பேய்கள்விட்டகலுமரும்பதம்
விரும்பியதடையுந், தருமதேவுறையத்தீர்த்தமான்மியங்கள்சத்
தியஞ்சத்தியமாமால், வாமுறுங்கைலையடைகுவராடின்மறலியு
மஞ்சுமற்றவர்க்கே. 34

கமழ்நலந்துறையத்தீர்த்ததீரத்திற்காய்சினக்கோக்குளம்
படிமட்,டிமிழ்திரைநீரோடிருக்குரைத்தெமக்குமினியராய்ப்புனி
தநீறணிந்த, தமைநிகர்கருணையந்தணர்க்களித்தோர்தடையின்
றிக்கைலைசென்றடைவா, ரமிழ்தனநந்திக்கணத்தவருந்தவன்
பொடுமிருப்பதாங்களித்தோர். 35

வேறு

ஆவணிஞாயிற்றிற்சிவகங்கையடைந்தாடிற்,
பூவுலகாளுவர்பாவவிராசிகள்போயேகுந்,
தேவருமாகுவர்யாவரவர்க்கிணைசெப்புங்காற்,
பாவியவெட்பயறுதியளிப்பவர்பலன்மேலாம். 36

விருச்சிகஞாயிற்றிற்சிவகங்கைவியந்தாடிற்,
பரிப்புறமப்பலனுகுமுருத்திரர்பதினோர்தே,
யருத்திகொளொன்பதுவாகியதிதியிலருந்தாமற்,
றிருத்திகழ்பாரணமிட்டுணில்நம்பதிசேர்வாரே. 37

இரவியைமதியினையரவமணைந்துறுமெல்லைக்கண்,
டிரையெறியுஞ்சிவகங்கையிலன்புதிளைத்தாடி,
வரமருளம்மனுவோதிநுகர்ந்திடல்வரைவுற்றுக்,
காமுறுமைமர்துமடக்கியஞ்ஞான்றுகழித்தக்கால். 38

மற்றையவைகறையிற்புனலாடிவருந்துற்றோர்க்,
கற்றமிலன்னமளித்தவர்நம்பதியடைவாராற்,
குற்றமிலந்தணருக்கொருகோவுகொடுத்தக்காற்,
பற்பலகோடிபசுக்கள்கொடுத்திடுபலனுமால். 39

வேறு

தேவரேத்துஞ்சிவகங்கைத்தீர்த்திற்,
காவமைத்தவர்காமத்திருவொடு,
மேவியாக்கைவெறுத்தபின்னம்பதத்,
தோவுறுமலிருப்பருகாந்தத்தும். 40

செங்கயற்சிவகங்கையின்தீர்த்தோர்,
துங்கவில்வம்வளர்த்தவர்தொல்லுல,
கெங்குமேத்தவிறையவனுருவா,
ரங்குநந்தவனமமைத்தார்களும். 41

எத்தலங்களுமேத்துஞ்சிவகங்கை,
யத்தலத்தோரரகிசிரோற்றவர்,
பைத்தலைப்புவிப்பார்த்திபனுகியே,
முத்தியும்பெறுவார்கள்முடிவிலே. 42

வேறு

அலர்தலைப்புவனம்பரவுமத்தலத்திலஞ்செழுத்தோதிடம
றைவாம், பலர்புகழ்புனிதகங்கையின்கரையிற்பச்சிமத்தெக்கணம்
பதியா, யிலகிராமிருக்குமாலையப்பின்னீசானத்திற்பலியிடுமி
டத்திற், குலவவீற்றிருந்துசெபித்திடிலொன்றுகோடியாநாடு
வீர்குறித்தே. 43



றூண்டையினுமரையாண்டருள்புரிதுமத்தலங்காட்டியாங்
கமர, நீண்டசீர்த்திருமாந்துறையளாங்காளிநேயமோடென்வரு
றுமதா, காண்டருந்தவமுங்காத்திடுமென்றக்காளியோடெழுமு
னிவரையுந், தூண்டிடச்செம்பொற்சோதியைவணங்கித்துனெ
றிகொண்டுமேவினரால். 44

வேறு

வண்டலர்தண்டேனுண்டிசைபாடவளர்ந்தோங்குந், தண்
டலகண்டார்முண்டகவாவிதனிற்றுவுங், கெண்டைகள்ஞெண்
டார்தண்பணைகண்டார்கிளையோடு, மண்டர்கள்சூழுண்டொடு
கோயில்கண்டாரே. 45

ஆடினரின்றேவீடினர்சாபமகன்றென்னப், பாடினரிங்கே
மைபாலுகவென்றேபணிவுற்றார், கூடினபரமானந்தமெய்தோர்
துறையின்றென், றோடினர்வந்தார்நீடொளிபொண்கோபுமுன்
னர். 46

சந்திரசேகரசுந்தரவந்தோர்தமையாளு, மிந்தநெடும்பதிவ
னமெமையுமினிதாள்வாய், பந்தமறும்படியென்றுபணிந்தார்
மகையான,வைந்தையுமாறையுநாலுடன்மூன்றுமடக்குற்றார். 47

வேறு

சூலுளைந்தலறிவால்வளையுயிர்த்தசோதிவெண்முத்தமார்த
டத்தின், பாலுறவந்துகண்டனர்பணிந்தார்பரமசீராடிநீறணிந்
தார், மாலுநான்முகனுமடிமுடியறியாவளரொளிச்சோதிலிங்கத்
தைச், சீலமாரன்பிற்கண்டுகண்களித்துச்சேர்வைசெய்தோவிய
மானார். 48

மடங்கணீர்பாயத்தாழ்ந்தனரெழுந்தார்சந்தநான்மறைக
ளாற்பூசித்தார், அடங்கிடாவுவப்பாற்பூசனைபுரியுமாசையாற்சி
வகங்கைநீரக், குடங்களாலபிடேகம்விதிமுறையாற்குளிர்வுற
வாட்டினறுண்டே, சிடம்பெறவணிந்தார்மறைகளாகமத்தினிசை
மனுவெழுதெழுமுனிவர். 49

மன்றலஞ்சுழவித்தென்றலுந்தமிழுமணந்தழசெழுந்துயர்மலையக், குன்றுறஞ்சந்தங்குங்குமமணிந்துகொழுநறவொழுகு பொற்கொன்றை, மென்றுணர்ப்போதுதன்றுணைக்கரத்தால்வேய்ந்தமுதேத்தியற்சித்துப், பன்றிபூவிடந்துங்கண்டறியாத்தடமலரிதையமூடழுத்தி 50

பதவிலிலங்கிற்பெருவிரனிலத்திற்பதிவுறவூன்றிமூச்சடக்கி, முதிர்தருமூடலப்புற்றினுல்மூடமூக்கினுற்பாந்தள்போந்திறியக், குருகுதப்பின்றிச்சடையினுட்பரவைகூடுகொண்டவதினங்குல, வெதிர்வெரினுடையபாரிசமெங்குமெண்ணில்செந்துக்கள்சார்ந்திருப்ப. 51

நலமாங்கனலையெழுப்பியாதாரமூவிரண்டுற்றிகந்தப்பார்மேலிருங்கபாலவெளிதிறந்தேகிவின்னுலகெண்ணிலாப்பதங்களோலமிட்டுலையச்சத்தியவுலகுமுற்றிடச்சுற்றமழல்புகையால், ஞாலமாதியமூவுலகினுமெவருநடுங்குறநற்றவம்புரிந்தார். 52

தருநிலமலமார்சதுமுகற்கிதனைச்சாற்றிடவேற்றெகினதேன், பருவரனுருமச்சுரரொடுங்கைலைப்பருப்பதமடைந்தவகபணிந்தே, விரைவினங்கிவர்ந்துநந்தியெம்பெருமான்விரைமலர்ச்சேவடிவணங்கி, கருமமாங்குரைத்தேயாங்கவரொடும்போய்க்கண்ணுதற்கடவுளைக்கண்டார்.

பணிந்தனரெழுந்தார்துதித்தனர்வியந்தார்பாடினராடினம்பரம; தணிந்திடாவழளால்மூவுலகனைத்துந்தவித்திடக்காலமெந்தா, யணைந்துளோற்கிரங்கியாலமேயமுதமாக்கியசம்புவேயைய, கணந்தனினுலகமுடிந்திடாவண்ணங்காத்தருளென்றுநகைதொழுதார். 54

அருளொருபாகத்தொருபரஞ்சோதியயன்முகநோக்கியேநகைத்தப், பிரமநம்பதசெஞ்சரோருகநினைந்துபெருந்தமியற்றியேழ்முனிவர், மருமலர்ச்சிவகங்கையின்கரைவதிந்தார்மற்றவர்தவாக்கினிமயமீ, தொருமையுற்றவர்கட்கருளவந்திப்போம்நீவிர்முன்போமினென்றுரைத்தான். 55



அரியயனமரர்க்கரசனோடமரரனைவருந்தனைநிகர்சுயம்புப்புரிதனிற்போகிக்கதிர்மதிநோக்கும்புள்ளெனவுண்ணெகிழ்ந்திருப்பத், திருவருட்சுயம்புச்சோதிலிங்கத்திற்றினகரானந்தகோடியர்வந், தொருவுருக்கொண்டாங்குதித்தெனவுமையோடுற்றனனொருபரம்பொருளே. 56

ஐந்துதுந்துமியுஞ்சந்ததமுழங்கவைந்தருமலர்மழைபொழிய, நந்திமுன்பரவவாரணந்துதிப்பநாரணன்முதலினோர்நடிப்பக், கந்திருவருமற்றமாருமுனிவர்கணங்களும்வணங்கிநின்றேத்தச், சுந்தரச்சோதியிலிங்கநின்றெழுந்தான்றேனையோடேகநாயகனே. 57

அற்றைஞான்றுதித்தவதிசயமெவரேயரைகுவராதிவந்தித்துங், கற்றையஞ்சடிலமுனிவர்கண்டிறவாக்கடுந்தவங்கண்டயன்முதலோ, ரிற்றைநாணம்மையாட்கொளவந்தானிறையவனென்றெடுத்திசைப்ப, மற்றையர்விழித்தார்தனித்தனிதுதித்தார்வரமருளரகராவென்றே. 58

வீழ்ந்தனரெழுந்தார்சூழ்ந்தனர்பூக்கால்மீண்டுமைங்கால்வியனிலத்திற், றாழ்ந்தனர்பொழிந்தார்தடங்கணீர்மொழியுந்தழதழுத்தெழமயிர்பொடிப்ப, வாழ்ந்தனரடங்காவரியவரானந்தவாரியுளடிக்கடிபடிந்தார், வாழ்ந்தனமென்றார்நகைத்தனர்குதித்தார்வடித்திசைபடித்தனர்நடித்தார். 59

வடவைகொப்பளித்துச்சுடர்விடுஞ்சூலவாமதேவாநமவனைகோட், டடல்சினத்தறுகட்பன்றிமாறேடுமுருத்திரக்கடவுளேநமவா, னடையவுமிகுந்தசுயம்பிரகாசத்தந்தாரநமவமுதக், கடலெனக்கனவான்றெழுஞ்சிவகங்கைக்கரைநகர்கருணைநாயகனே.

தண்ணுலாங்கடுக்கைத்தண்ணியஞ்சடிலத்தற்புருடாநமதலைமை,நண்ணுவான்றேவர்வணங்குமாதேவநமபிரமாநமவதியோமெண்ணிலாவெண்ணத்திட்டநீதருக்வெங்குமாயிருந்தவாநமவெங், கண்ணுலாங்கமலங்கமழ்சிவகங்கைக்கரைநகர்கருணைநாயகனே. 61

என்னவேபணிந்துந்திருவுருத்திரத்தாலிறைஞ்சியு மிமைய நாயகியார், மண்ணுறவணைக்குமணிப்புயச்சிவாயவன்பவமாற்றி யவகேர, னின்னருட்கபயநெற்றிநாட்டகத்தெம்நீலகண்டாபிணைவரிதா, மன்னையப்பனுமாமுக்கணாவேதத்தந்தணாவென்றடிபணிந்தார். 62

அருந்தவத்தாலும்பெருந்துதியாலுமகமகிழ்ந்தனமடல்வேலேன், தருந்தனிச்சாபந்தணந்தனின்றெமதுதருணமெய்ச்சரணமேதருதும், வருந்துதலொழிந்துவருகவென்றந்தவளரொளியிலிங்கத்துண்மறைந்தா, னிருந்தவவ்விலிங்கச்சோதிசெங்கமலத்திதழ்களேழெனவலர்ந்தனவே. 63

மலர்தருஞ்சோதிப்பிறவித்தேழின்மனோலய முனிவரையடைவித், திலகுயர்சோதியிலிங்கமுன்போலவிருந்ததுமலர்மழைபொழிந்த, நலமிகுஞ்சோதிவிடங்கவென்றமரர்நடித்தனர்செயசெயவென்றார், பலனருள்சுயம்புப்பரமயீச்சரனைபசுபதியெனப்பரவினரால். 64

அருடருஞ்சுயம்புக்கேத்திரந்தென்றமருவுமவ்விலிங்கநாயகற்குப், பொருடருஞ்சத்தவிருடிகள்பெருமானெனப்பெயர்புகன்றனர்புலவோர், தெருடருஞ்சோதித்திவ்வியவிலிங்கந்திகழுருத்திரமணியுருவா, மிருடிகள்பரவுமொருவனைக்கண்டோரிகபரத்தின்பமெய்திடுவார். 65

செக்கரஞ்சோதித்திவ்வியவிலிங்கஞ்சேவித்தோர்க்கேவிடாவன்பா, மிக்கபேரறிவுமாக்கமும்பெறுவர்மிலேச்சர்க்குமெய்விதிர்ப்புண்டா, மக்கமாமணியொத்தெழுவரையுளதவ்வெழுவரையடைவித்தவடைவே, யிக்கதைகேட்போராயுளுந்திருவுமெய்துவர்முத்தியுற்றிருப்பார். 66

முற்றிற்று.

ஆகச்செய்யுள் சருக்கம் ௨க்கு ௱௨௰௨.

---



## மூன்றாவது லக்ஷ்மி பூசித்த வத்தியாயம்.

மன்னுமாதவத்துநாரதனியம்பமாமுனிவோரகமகிழ்ந்தாங், கன்னவாகனனுக்கரும்பெறற்குமரவனியர்மேற்றயவுடையவனே, முன்னமோர்காலம்வினவுறுதெவையுமுனிவரின்மொழிதெருட்டியதா, லின்னமொன்றவ்வூரினிற்றிருத்தவஞ்செய்திருந்தமையிசையெனவிசைப்பான். 1

முன்னமோர்காலமுத்திரைத்திருப்பாற்கடலிடை முண்டகமலரா, லின்னமுதோடும்பிறந்தனளென்னவிருடிகளிருந்தவமுனிவ, ரன்னமென்னடையாள்மாயவன்பன்னியாயவள்பாற்கடற்பிறந்த, தென்னவென்றிசைப்பவின்னிசைபெருக்குமிருந்தவனியம்பன்மேயினனால். 2

அமுதவெண்ணிலவுமுழுவதுமெரித்ததனையவெண்பூதிபூத்தழகா, ரிமிழ்திரைக்கடனேரெழுந்தசூரியர்களெண்ணிலோரார்வடிவெடுத்துத், திமிரமுட்புறம்புஞ்சீத்தொளிபரப்பச்சேர்ந்தனதிருவுருச்செறிந்து; தமியரையளிப்பான் சச்சிதானந்தத்தாணுவேவந்ததன்மையினான். 3

சோதியாந்துரியாதீதவானந்தச்சுயந்திகழ்தருந்துருவாசன், வேதனுருலகிற்போதுறுநெறிநேர்மெல்லியலின்னிசைவீணைக், கோதையோர்கோதைகொண்டெதிர்வரலுங்கண்டிவைகொடுத்திடென்றிசைப்பப், பாதமீதணிந்துபணிந்துவானகன்றாள்பங்கயக்கரத்தெடுத்தகன்றான் 4

துய்யவெண்டாதுநொய்யபூந்தாருத்தொடையலைக்கொடுசுவர்க்கத்தி, னெய்தலுமமரர்பதிக்கிறையயிராவதத்துயரெருத்தமீதிவர்ந்தங், கையர்சூழ்போதவடைதலுநோக்கியறமுறையந்தமார்முனிவன், கையினிற்சுகந்தக்கத்திகையதனைக்கதிர்முடியிற்றிரற்களித்தான். 5

கண்ணுதற்படிவவண்ணமாமுனியைக்கண்டுகைகுவித்ததேயன்றி, யண்ணல்மாகளிற்றினிழிந்தடிபரவாவகந்தைமீதூரலுமன்றி, தண்ணுறுந்தொடையைதந்திமத்தகமேற்றரித்தலுமொருத்தல்வீழ்த்தியதா, லெண்ணிலாப்பொருளின்வடிவமாமுனிகண்டெறியெழநோக்கியீதிசைக்கும். 6

ஓரிமைப்போதிலொழிந்திடும்வாழ்வையுண்மையென் றுன்
னினைப்கொல்லோ, சீரருளடியார்திருவடிகொடுக்குஞ்செல்வத்து
க்கிதுநிகரித்திரமா, மாலோனதம்மையவமதித்தனைநின்னைவைவருவ
சிட்டராதியர்போற்; நார்தநுமுளத்துமினைந்தனைநின்றற்காக்கு
மூவுலகத்துத்திருவும். 7

கனைதிரைப்பாலின் கடலிடைப்புகுதக்கடவதென்றுரைத்
தனுமல்லா, நினையுமுன்போயதாயவைமறிந்தநிகரில்பொன்ன
வன்றுருவாச, முனிவனைவணங்கியிப்பிழைபொறுத்திமுன்னவா
வென்னவுமிரங்கிப், பனிநெடுங்கடலிற்பிறக்குமேலென்னப்பகர்
ந்தருள்புரிந்தவண்பட்டார்ந்தான். 8

கடலிடைச்செறிந்துபின்னுமாங்குதிப்பக்காரணங்கழறிய
முறைபா, லடைதருமமார்திருநெடுமாலோடணைந்தலைப்பாற்கட
ல்நவேலண், தடவரைநிறுவிவாசுகிதாம்பாய்த்தண்டுளிவிண்டுவினு
டுக்கள், படர்தலொப்பன்றிப்பாற்கடலமுதம்பனிவிசும்பினிற்
றெறித்தென்ன. 9

முதிர்ந்தலார்கலியிறுலிவலைப்பட்டுமொய்த்துவிண்பறந்
திடும்பறவை, யுதிர்ந்திடவிமானமூர்ந்துவிண்டிரிவோருறங்கினர்
போன்றிறங்குறவு, மிதந்தருமிந்தவுலகின்மண்பதைகளிடருழந்த
ரற்றியேயிளைப்பத், தலைதந்திடத்தரங்கத்தொகுதிகள்கடைந்
தார்சுராசுரரிராப்பகல்சூழ்ந்தே. 10

ஒருபரம்பொருளாமுமாபதியருளாலுததியையடைந்திவர்
கடையாப், பெருமிதமதனாற்பருவரலுழப்பப்பேரிருளோருருக்
கொண்டு, வருதலொத்தாலம்வடவைகான்றெழலுமால்முதலோர்
நடுங்கிக், கருகுமெய்யினராய்க்கைலைமால்வரையெங்கடவுளே
காத்தருளென்றே. 11

ஒருவர்மீதொருவர்வீழ்ந்துமுத்தரியமுபவீதங்குண்டலமு
தலாந், திருமலிகலன்கள்சிதறிடக்கைலைத்திசையினை நோக்கியே
செல்வார், அரகரவென்றரற்றியேபடையவம்மையோடப்பனு
ங்கிரங்கித், திருவருள்சுரந்தான்சிராமலைசூழ்ந்துசென்றடைந்
தோர்க்கிரங்குவபோல். 12



பெருவிடைமீதேயுமையொடுமிருந்தான்பெரியவனரிமுத
லோர்கள், வெருவியவ்விடைமீதிவர்தலும்விடையின்விளங்கிருசி
ருங்கமத்திமையின், மருவிமற்றவர்கட்கபயமுமருளிவடவனல்
மிடையவந்தெழுந்த, கருவிடமுமதொத்தொருமறுவாகக்கண்ட
மிடவுண்டுகளித்தான். 13

பொன் றதோஷகாலமாந்தருமத்துருவிடைக்கொம்பிடைப்
பொருந்தும், விதமிந்தக்காலத்தரனையேயன்றிவிண்டுவேமுதலி
ரவாயு மைத், துதிசெயிற்காணிற்றேடயாமென்பார்சுருதிவல்
தக்காலத், ததிகபாம்பூசையாற்றினரன்றேவன்பராமாண்
டசேவடிக்கே. 14

மான்முதற்றேவர்மேலவன்பதியாம்வழக்கறிந்தனுதினநோ
க்க, நீணிறம்வாயநிறுத்திடவுமைபாணீண்டருள்புரிந்துவீற்றிருந்
தா, ஞனிவர்ந்தருள்வோனருளினாற்பின்பங்கடைந்தனர்கடைந்
தனரையன், பணிமிர்ந்தன்புபற்றலாலுததிபட்டிரத்தினமெலாம்
பயந்த 15

ஐவனகமணியின்விரியிதழ்மலர்கொண்டைந்தருவைந்துகோ
வைம்பால், மெய்தருமயிராவதமகலிகைகள்வெண்மதியரம்பய
ரடப்பை, கைவளையலம்பக்காலசைகவரிகளாஞ்சிகைக்கொஞ்
சடழக்கமலத், தையல்வந்துதித்தாள்கவுத்துவந்தரித்து தவன
ராசிகளெழுந்தனபோல். 16

வெள்ளைவால்வளையுமாழியுந்தரித்தமென்கரஞ்செங்கமல
ங்கள், கொள்ளுறவமுதகும்பமோடுற்றுள்கொண்டனன்விண்டு
வாங்கவளை, நள்ளிருள்கிளித்துஞாயிறொத்தவிருநகைமணிக்கவு
த்துவத்தோடுங், கள்ளவிழ்கூந்தலகலிகைதவத்துக்கவுதமன்ம
னைவியாயினரோ. 17

மும்மதம்பெருக்கும்வெண்மதிநிறத்துமூரிமால்யானையும்ப
ரியுஞ், செம்மையைந்தருவுந்தேனுவுமணியும்பட்டுமிந்திரன்ற
னைச்சேர்ந்த, தம்மவல்லமுதகடத்தினையமரர்க்களித்திடமாலவ
ரேற்றார், மம்மர்மெய்மதலைமோகினிவடிவாமாயவனசுரருக்களி
த்தான் 18

மூகர்போன்மயக்காலமுதெனச்சுரையைமொய்த்திருந்தண்டனரகரர், சோசமிலமுதைச்சுரர்களுக்கூட்டச்சார்குழாத்தச்சுரர்வடிவாய்த், தாகமோடசுரனொருவனங்குறனுந்தன்னுருதமுதிடக்கொழுங்கால், நாசமாயிரண்டுவடிவுறத்தடிந்தானரணன்கோள்களாய்நண்ண. 1

கண்ணுதற்காசைவைத்திடுமோகக்காரிகை வடி ளர்த் மால், கண்ணிவைகுந்தநாளிலமடந்தைநளினமேற்றி ரன்ன ளை, வண்ணமொத்திவரோடகமகிழ்ந்திருந்தான்மதிமு ன வா ல்வைத்த, வெண்ணிலாமோகத்தொடுதிருமகளையென்செ யகர் நீளையென்றிசைத்தான். 20

மலர்மகள்சணவன்வதனநேர்நோக்கிவஞ்சகயனமுரையமுத,நலனுறமுமக்குநண்ணியதந்தோநகைமுகநீளையேனயத்தாற், குலவியமோகங்கொண்டெனையழைத்தாய்கொடியதுன்குறிப்பட்டமூர்த்தி, சலமிலாவுமைபாலொருவனைநோக்கித்தவம்புரிவெனெனத்தணந்தாள். 21

சலசவாண்முகத்துச்சிலதியர்சூழத்தாழ்பிலத்தூடுபோயங்கணிலவியபோகவதியெனுநதியினிமலனைநினைந்தெழுத்தஞ்சும், பலனுறச்செபித்துப்பவித்திரையாகிப்பதிந்தனள்பணிகளுக்கரசன், குல்ரெடுங்காக்கக்கணவனைவசமாய்க்கொன்னுவாளுள்ளத்திற்குறித்தே, 22

உழுவலன்போடும்வினசையையேவலிலுக்குறியளாயுறையவங்குறைந்தே,வழுவிலாத்தவஞ்செய்தளவிலாக்காலம்வருந்தலும்பெருந்தகையருளால், முழுமதியுடையசிறுவன்முப்புரிநான்முயங்கிடமுதன்மையாச்சிரமத், தொழிலுடையனைநந்தியெம்பெருமான்றேன்றிமால்பனைரொடுஞ்சொல்வான். 23

வேறு

அப்பொற்றகட்டுச்செப்பதுமத்தகட்டுப்பொருட்டுவட்டவணை,யும்பர்க்கரசுவீற்றிருக்குமுகணப்பாகன்றிருமனையே,பம்பிச்சிறைவண்டிசைபெருக்கும்பணிமென்கூந்தற்படர்சடையா,யிம்பர்த்தவஞ்செய்திடற்கேதுவேவதையுருதேயியம்பென்றுன்.



விரதப்பிரமசரிவசனம்வினவிக்கமலைவிசும்பினைப்பார்த், துருவக்கமலவிழிக்கணீரொழுகக்கணவனுரைத்ததரி, தரிதக்கணவற்கன்பெல்மீதவண்மீதன்பிற்களவில்லைப், பரிவிற்றவமக்கணவனுளம்பற்றுயுறையப்பற்றியதே 25

என்னுயிரங்கியுரைத்தமொழியெம்மான்கேட்டுக்களிவோடுபொன்னுபகியேபூவுலகிற்பொன்னிக்கறையிற்றன்னிகரில்,மன்னுமொருவன்றிகழ்சுயம்புவடிவாய்ச்சிவகங்கைக்கரையிற், றன்னுநரவாயுறைகின்றான்றவத்துக்கிரங்குந்தற்பொருளே. 26

அருளாரந்தச்சிவபுரத்துக்கரிதாங்கிராகியதலமற், றிருளார்பாவவிராசிகளுக்கெழுஞ்செங்கதிற்போற்றலமாகும், வருவாரினைந்தபடியுதவும்மற்றைத்தலநூற்றினிலொன்று, தருமோவெல்லாந்தருங்கங்கைத்தடத்தீரத்திற்றனிப்பொருளே. 27

தெய்வச்சிவகங்கைப்பெருமைதேவர்க்கரியான்றிருமகிமை, சைவத்தலத்தின்றன்னருமைச்சாற்றற்கரிதாமத்தலத்தை, யுய்தற்குன்னிப்போகவதியுரவுத்தடநீரிடைமூழ்கி, மையுற்றெழுகார்விழியரொடுமற்றத்தீர்த்தத்துதித்தெழுவாய். 28

இதுநிற்கருளற்கேதுவெனவியம்பிமறைந்தானியல்மறையோன், பதுமத்திருவுமுழையருடன்படர்நீர்மூழ்கிப்பாற்கடலின், மதிமொய்த்தளவினள்களொடும்வந்தாளெனவானவரின்றஞ்சும், புதுமைச்சிவகங்கையிலுதித்தாள்பொற்றுமறையினற்றிருவே. 29

கயலார்விழியாரொடுசிவகங்கைக்கரையில்மங்கையொடு, மியல்பாயுறைவான்றனைப்பூசித்திலக்கம்வருடமிருந்தவத்தின், முயலாநின்றுளவ்விலிங்கமூலத்தெழுந்தான்முன்னவனு, மயிலாற்சாயற்றிருவெழுந்தாள்மகிழ்ந்தாள்பணிந்தாள்வாழ்த்தினள்: 30

வேறு

ஆற்றருந்தலத்தாலுருகன்னைக்குருகியாகமொன்றுயினைப்போற்றி, சாற்றறுங்கருணைத்தயாபரவமுதசாகரக்கடவுளேபோற்றி, காற்றினுங்கடியவேற்றுறுங்காளகண்டமுக்கதிர்க்கணுய்போற்றி, தேற்றுநீற்றழகசிவாயமாதேவதேசொளிவிடங்கனேபோற்றி. 31

போற்றியென் றிமையப்பூவையோடேத்தப்பொன்னினுக்கி
ரங்கிநம்புனிதன், நாற்றடந்திசையுமேத்தநாரணனீநன்னெனத்
திருவுளநயப்ப, மாற்றலர்க்கடந்தகூற்றெனத்திறங்கொள்வளை
க்கதிர்த்திகிரியும்வளையு, மேற்றசெங்கரத்தோன்றேற்றிவீழ்ந்
திறைஞ்சிப்போற்றுவானிதையநெக்குருக. 32

ஆற்றுமுத்தொழிலுந்தோற்றிவித்தொன்றுமரும்பெருஞ்
சோதியேபோற்றி, நீற்றினைத்தரித்துக்கோற்றொடுமதனைநேத்தி
ரத்தெரித்தவாபோற்றி, யேற்றெனைக்கணையாய்மாற்றலர்க்கடிந்
தவேற்றிவர்பசுபதிபோற்றி, தேற்றியேழ்முனிவர்போற்றியசுயம்
புத்தேசொளிர்விடங்கனேபோற்றி. 33

ஆண்டநின்கருணைச் சேவடியருளாலடைந்தனன்சிரத்தை
கொண்டைய, நீண்டநீர்க்கூர்மமுயிர்த்ததைநினைக்கநிகழுறுந்
தன்மைபோனிமல, வீண்டெனைவிளிக்கவெத்தவம்புரிந்தேனெந்
தஞான்றிரங்குமென்றிருந்தே, தாண்டவவருள்கவென்றனுஞ்
சத்தவிருடிகடலைவன்சாற்றிடுவான். 34

வருகநம்முகுந்தவித்திருமகணம்மலரடிக்கன்புவைத்தன
ளா, இருகுநம்பதத்திலன்புருவெடுத்தோயுவண்மிசைநசையொ
டுமுனிலும், பெருகவாழ்ந்திருத்தியென்றருட்சாத்தார்பெருந்தி
ருமணந்தவெம்பெருமான், திருவினையெடுத்தமாலவன்மருமஞ்
செறிந்திடவிருத்தினன்டிகழ. 35

அளவிலாவளனுமீய்ந்தகன்றிருவினருந்தவப்பேற்றினலெ
ன்னத், தளவமுந்துளவுந்தாங்கினேன்பணிந்துன்சரணமேயர
ணமாயுறைவேன், வினையுநின்னருளாலுய்ந்தனனென்னவின்னு
ளோர்பூமழைபொழிந்து, வளனருள்பெருமாற்கழைத்துவாழ்வி
த்தவானவனெனும்பெயர்வகுத்தான். 36

முருந்துறணகையாள்கருந்தடங்கண்ணாள்முண்டகத்தண்
டர்வாழ்த்தெடுப்ப, விருந்தசெந்திருவுக்கத்திருவாளற்கிரங்கியே
பிணங்குவிலினுதற், செருந்திபொன்சொரியக்குருந்தலர்வெள்
ளிசிந்துபூந்திருத்தவத்துறையான், பெருந்திருவாளன்றிருவரு
ளுருவான்பெருந்திருவாட்டியாம்பெயரே. 37



அற்றைநாண்முதலாய்த்திருமருமார்பனாகிமால்நாயகற்கு
ரைப்பான், கற்றைவார்சோதிச்சுபம்புவாய்நின்னைக்கதிச்சிவகங்
கையைத்தலத்தை, யெற்றைநாட்களினும்போற்றியிங்கிருக்கவி
றையவவருள்கெனவருளி, யொற்றைமால்விடையானச்சிவலிங்க
த்துறைந்தனனிறைந்தபேரருளால். 38

திருவுடன்மாலுங்கருடனுமின்னுஞ்சிவனடிசேவைசெய்தி
ருந்தார், மருவினர்தமதுவைகுந்தத்திங்கும்வந்தினிதேத்தியே
மகிழ்வார், திருவழகெழுமத்திருநகர்செல்வத்திருத்தவத்துறைப்
பெயர்செறிந்த, பெருகுநீர்பொன்னித்தீரவத்தலமேசெபசித்தி
பெறுந்தலமென்றான். 39

அல்லியங்கமலச்செல்வியையரியையழைத்து வாழ்வித்தவி
க்கதையை, யெல்லிவிற்பகலிபன்றதோர்காலத்தெக்குலத்திபா
வரேயெனினுஞ், சொல்லுனர்கேட்போர்வகத்தினில்வைப்போர்
சுந்தரச்செந்திருவதனால், நெல்லிருந்திவ்பவளனெலாந்துய்த்து
நின்மலனடியுமுற்றிடுவார். 40

சப்புவினடியையம்புயமடந்தைத்தாழ்ந்தரிமார்பகஞ்சேர்ந்
த, தெய்பெருமுனிவிருங்களுக்கிசைத்தோமென்றிசைமுனிவர
னிசைப்பக், கம்பிதத்தோடுங்கண்கணீர்ததும்பக்கண்ணுதற்கட
வுளைநினைந்தே, யம்புயாசனத்தோனருள்பவற்போற்றியருமறை
முனிவரீதுரைப்பார். 41

மூன்றாவது லக்ஷ்மி பூசித்தவத்தியாயம், முற்றிற்று.

ஆகச்செய்யுள் 163.

---

## நான்காவது மழவன் வெண்குட்டந்தீர்த்த வத்தியாயம்.

செந்திருக்கதைகேட்டுய்ந்தனமந்தத்திருநகர்ப்பெருமை
யையினுஞ், சுந்தரமொழியாற்றந்திடவேண்டுந்தூயவெண்மு
னிக்கணத்தொகையோர், சந்ததமிரப்பத்தந்திரிதிருத்திச்சாம
கானத்தினையெழுப்பி, மந்தரமுதலவரிசையின்னிசைகூர்மறை
முனிகழறமேயினனால். 1

முன்னையுகத்தின்முனிவர்களெழுவர்முதல்வனைப்பூசைசெய்தடைந்தார், பின்னையுகத்திற்றிருமகள்பேரும்பேசினந்துவாபரமதனில், மன்னர்கள்மன்னன்மழவனென்றொருவன்வளர்சிவகங்கையிற்படிந்து, சொன்னமாமேனிபெற்றுமானகருந்துலங்கவாழ்ந்தடைந்தவைசொல்வாம். 2

திங்கள்வெண்குடைக்கீழ்கண்மாஞாலஞ்செவ்விதிற்செய்யகோலோச்சித், துங்கமாஞ்சிங்கஞ்சுமந்தபொற்றவிசிற்சுடர்முடிகவித்துவீற்றிருப்போன், புங்கவர்மகளிற்போதுகொய்துவக்கும்பொற்றருவணங்குசெங்கரத்தான், மங்கையர்க்கனங்கன்சங்கரற்கடியான்மழவனும்வாகைவேலுழவன். 3

அறந்திறம்பாதவகத்தினனடையாராவிகொண்டாடல்கொள்மொய்ம்பன், மறந்திறம்பாதவயிரவாட்படையோன்மன்னவன்முன்னையூழ்வலியால், புறந்திறம்பாதபுரோகிதன்மனையைப்பொருந்திடவிளைந்தபாதகத்தா, னிறந்திறம்பாதமதனிகருருவினிறைந்தவெண்குட்டமாநெடுநோய். 4

மேனிமிர்ந்துடலம்விழுங்கியதொழுநோய்வெள்ளையாயொள்ளியவுள்ளந், தானயர்ந்துறையுங்காலொருமுனிவன்சார்ந்துநீசம்புவைநம்பிக், கூனல்வெம்பிறைசேர்வேணியாயென்றுட்குழைவொடுபூசனைபுரியி, லூனிறைந்திடுமின்னோய்விடுமென்றுநுண்மையாக்கொண்டனனுரவோன். 5

புலரிவாயெழுந்துபொன்னிநீராடிப்புனிதவெண்ணீறுடற்பூசிப், பலர்புகழ்கீற்றுப்பிறைகள்மூன்றென்னப்புண்டரமுண்டமேற்பதிய, வலகிலாச்சோதிமுதலையாவாகித்தாரணவாகமவிதியே, வுலகெலாம்வியப்பப்பூசனைபுரிந்தேயுறையுநாளிறையவனருளால். 6

நரர்கள்பைங்கூழுக்கிடர்புரிமிருகம்நாடியேவேட்டமாடுறுவான், கரகிரிபரிவெம்பொருனர்மொய்த்தீண்டக்கவினவாம்பரியுகைத்தேகி, நிரைநிரையாகளுபலியும்வலையுநிறையநீட்கானெலாம்வளைத்து, மிருகமும்புலியும்பறவையுந்தருவுமிடைகொடியடவியுள்மேவி. 7



கடுங்குரல்ஞமலிவிடுந்தொறுமுரப்பிக்கமலநீர்த்தடத்தினைக்கலக்க, கொடுந்திறற்கயமாவுழக்கியதென்னக்கொடுஞ்சரங்குணில்கள்விட்டார்த்தாங், கடுந்திறல்வேட்டமாடியேவருங்காலருச்சனைப்பலத்தினலவன்முன், னடந்ததோர்பொன்மானரேந்திரன்கண்டானதைத்தனன்வியந்துளநயந்தான். 8

கொய்யுளைக்கடுங்காற்பரியுகைத்தம்மான்குளப்படிநெறிவிரைந்தேக, உய்யுமாறிவனையாட்கொளும்பெருமானுவந்தருள்சுயம்புவாழ்வனத்திற், செய்யபொன்றிகழ்மான்சேர்ந்தவண்மறையத்திகைத்தவண்புதுமையைக்கண்டா, னையகோவிந்தவனத்தினில்வளமின்றறிந்தனனென்றகமகிழ்ந்தான். 9

ஆரணர்முனிவரமருமாச்சிரமமளவிலையென்றதிசயித்தான், வாரணம்புழைக்கைவாரிவாரியினைவயப்புலிக்கூட்டுவகண்டா, னேருணக்கோக்கள்டற்புலிமுலையைநெடும்புலிக்கன்றுகோமுலையைப், பாரணம்பண்ணக்கண்டனன்புலிமான்பழகிநீருண்டதும்பார்த்தான். 10

கறையடித்திறன்மாச்சொறிசெடச்சியக்காலெடுத்துகிர்கொடுகெடியு, நிறைநிழற்கவிகையெனமயிற்றோகைநீழலிற்பாந்தள்துஞ்சுறநீ, நறைகமழ்ந்தவனத்ததிசயங்கணவிலுவதன்றுபுண்ணியங்க, ளுறைவனம்பொன்மானுபகரித்ததுநாமுய்ந்திடவென்றுமேலுரைப்பான். 11

துணைவிழிபடைத்தபயனெனக்கிந்தச்சுரர்வணங்கண்டதாற்கொண்டே, னணைதருமடல்வேற்சேனைவந்திதனையழித்திடாதப்புறத்தகன்றோர், றிணையுறச்சிந்தித்தேகலுங்குறுந்தாட்செவ்விழிமொய்மயிர்த்திரண்ட, விணையில்கந்தாத்துப்பன்றியொன்றெழுந்ததிரத்தினைத்துருவுகொண்டெகிரே. 12

மதிநிகர்வட்டநுதிமுகப்பன்றிமணியுருக்கொண்டுவாளரசன், னதிசயமடைந்துதுடர்ந்தவைபிடிப்பானடர்பரியுகைத்தனனென்னக், கதிர்மணிகுயிற்றுந்திவவியாழ்முனிவகடும்பகையவ்வனத்திலையென், றிதமுறவுரைத்தாயவ்வனத்தடைந்தவிரைவனுக்கிம்மதியாதே. 13

என்றமாமுனிவற்கேழிசைமுனிவனிபம் புவானிவ்வனத்து
தித்து, மொன்றியுநெடுநாளுறைபலவுயிர்க்குமுண்மையாமுயர்
ப்ரியுகைத்தே, யின்றவர்ந்தனனுலிவனுமவ்வனத்திலிகற்பரியிழி
ந்துறைந்தனனேற், றன்றமெஞ்ஞானஞ்சுத்திமுற்றிமொலது
வலாலரசனுந்துடர்ந்தான். 14

அழுக்குடற்காணவாசனைத்துடர் புமற்றிமெவ்வனத்தம்ம,
வொழுக்கமோடெனினுமன்றியேயெனினுமுறைந்திட வோர்நி
மிடத்திற்,பழுக்குநல்லறிவின்முனிவர்காளிந்தப்பார்த்திபன்மே
ற்செயல்பாரீர், விழிக்குணவளித்தவவிர்மணிப்பன்றிப்பின்றுடர்
ந்தேபரிவிடுத்தான், 15

கதிர்மணியுருவக்கடுநடைக்கோலங்கமழ்சிவகங்கையுட்புக்
குப், பதிவுறுதங்கண்மறைந்ததுநிறைந்துபடர்செடியடவிகண்
மூடி, முதிர்சருகூறபந்தநாளிகள்முழங்குநீர்ச்சிவகங்கையிரு
ந்த, ததிர்கழலரசன்பரியினின்றிழிந்தப்பன்றியோடப்புனற்கவி
ழ்ந்தான், 16

விழுஞ்சருகூறல்வெடிகொளநெடு நீர்மெய் முழுதாடியவே
ந்த,னழுந்தவாயதரமதுக்கினன்வாயிலப்புனற்புக்குறுதாக, வெ
ழுந்தனன்பன்றிகண்டிலன்கரைக்கேயறினன் வீறுபொன்னுரு
வாய்ப்,பொழிந்தபேரழகின்மாரனேயென்னப்பொலிந்தனன்புர
வலர்பெருமான். 17

செய்யவாயதர முண்மடித் திடலாற்றீர்ந் நிலத்ததரமேற்ச
வேதம், வையனூற்றிசையுஞ்செய்யகொண்டாற்றுமன்னவன்றன்
னுடல்காணூக், கையினூற்றொழுதாணித்தடநந்தங்கருணைவாருதி
யெனக்களித்தா, னய்யனைவழிப்பட்டுய்யெனமுனிசொல்லருச்ச
னைப்பலனிலிங்கனைட்ப்பேன். 18

அரும்பெறற்றீத்தமாமெனவறியேனவமதியாலருவருத்து,
பொருந்திடவதரமதுத்தினேன்ந்தோபுண்ணியத்தடமிதற்கொப்
புப், பெரும்புவிசுவர்க்கம்பாதலத்தில்லைப்பெரியவனுண்ரந்திடுவ
னமிம், மருங்குறைதீர்த்தமாமிதென்றறிந்தான்மன்னர்கள்மன்
னனுமழவன். 19



தேசுறுஞ்சுயம்பு லிங்கமிங்குள வேற்றீர்த்தமுந்தெய்விகத்
துறையு, மாசறச்சோதிப்பேனெனநினைப்வடர்ந்தெழுஞ்சேனை
யுந்துடர்ந்து,வாசவனிணையாழ்சேர்ந்தனரவர்க்கிம்மகிமைசொற்
றத்தடமருங்கை, நேசமோடெங்குஞ்சோதியுமென்னநின்றவர்
கண்டதிசயித்தார். 20

இந்திரனெனிற்கண்ணுடற்கெலாமில்லையிவனங்கந்தங்க
மாயிருந்த, கந்திருவோர்கட்கரசனோவியக்கக்கடவுளோவெனக்
கவலுற்றுச், சந்திரவெளுப்போற்றெந்திருவரசன்சார்ந்தனன்ற
னைநிகருருவச், சுந்தரர்கண்டாற்சொல்லுகநின்சொற்சோற்வு
றுதியற்றுவமென்றார். 21

எமதரசிவனேவாய்வெளுப்பொன்றமிருந்ததெத்தெய்விக
நடந்தோ, வமைவுரவறிவோமென்றவர்நிற்பவரசனுநகைத்தவர்
பெயரை, நமர்களேயென்ன வழைத்தவனடைந்தநலஞ்சொலநய
ந்தெழுந்தாடி,யுமையொருபாகற்காண்கவென்றெங்குமோடினூர்
நேடினுருவந்தார். 22

நாற்றிசைக்கெழுந்ததூற்றினைக் கடிந்துநாடுறுங்காலைகீழ்த்
திசையிற், போற்றுமீசானமடையவாங்கொருவன்போக்குமண்
வெட்டிதாக்குறலு, மேற்றுயர்கொடியெய்மிறையிலிங்கத்தினெ
ழுந்திடும்பஞ்சவண்ணத்தின், றேற்றியசோதிச்சுடரினைக்கண்
டோன்சொற்றலுமழவனுங்குற்றான். 23

உழுவலன்புடையமழவனுக்கெதிரேயொருபெருஞ்சுயம்பு
வாயுடையா, னழுக்குறமக்கமணியுருவாகிவடக்குருப்பதாகைபி
னமர்ந்து, விழைவுறமற்றைழுப்புறஞ்சயமாய்விளங்கொளியிலிங்
கத்தைக்கண்டான், றெழுதனைழுதான்முழுதுமுய்ந்தாடித்து
தித்தனன்பணிந்தனன் துதிப்பான். 24

சுந்தரச்சோதிச்சுயப்புவேசரணந்துரியமாப்பிரமமேசரண,
மந்தவுட்சத்திமானெனச்சுருதியறைந்திடநிறைந்தவாசரண,மிந்
துவிண்ணிரவியெழிலழனயனத்திறையவாசரணமெக்காலுநந்தி
வரத்தவுஞ்சங்கைடிங்கனாயினடத்தொளிவிடங்கனேசரணம்

ஞானமாமுருவநாதனேசரணநவிலுமவ்வியத்தனேசரணம், வானமாமுருவவானவாசரணம்வளரொளித்தாரகத்துருவ, மானவாசரணமகரமொடுகரமகரமாய்விந்துவாய்நாதத், தானமாதேசுவிடங்கனேசரணஞ்சம்புவேசுயம்புவேசரணம். 26

என்னையாண்டவனிங்கிருப்பனென்றுன்னியிறைஞ்சிடவெண்ணியான்றேட, முன்னவாவருமைத்திருவுருவதனின்மூண்டிடும்பாவமுற்றியதால், கன்னியாம்ஞெண்டின்கருவுறுநன்மைதின்மையாங்காரணம்போன்றேன், மன்னுமெய்ம்மிறைவாபிழைத்தனனெனவேமயங்கினன்வாடினன்வீழ்ந்தான். 27

அழைத்துவாழ்வித்தானவனுளத்தன்புமுயற்சியுங்கண்டருள்புரிவான், பிழைத்ததாமக்கிங்கில்லைநீபிழைத்தாய்பெட்பினம்பூசனைப்பேற்றாற், குழைத்திடுமுனதுதுதியினுன்மகிழ்ந்தோங்கொற்றவாசற்றுநீகுன்றேல், தழைத்திடுஞ்சுயம்புத்தலமிதுசகலபாவமுஞ்சாருமுன்றடியும். 28

சாற்றுமிவ்வுலகத்தேற்றியதலங்கள்சார்ந்துசெய்தவந்தருமங்க, ளாற்றுமித்தலத்தினாற்றிலொன்றுகாதருளொடுஞ்சுயம்புவாயன்பின், வீற்றிருந்தருள்வோமித்தலத்தென்றுமேவினோர்க்கிகம்பரமிதிப்போம், போற்றுமித்தெய்வச்சிவகங்கைக்கரைக்கேழ்முனிவருந்தவம்புரிந்தடைந்தார். 29

அம்புயமடந்தைநம்பெருந்தீர்த்தத்தாடியேயரியினையடைந்தாள், உம்பர்மாமுனிவர்கருடர்கந்திருவருரகர்மானிடரளவில்லோர், நம்பியேநமதுதீர்த்தநீராடிநம்மையுஞ்செம்மையிற்கண்டுவெம்புநோய்பாவம்விட்டவரிட்டமேவினர்பூமிமன்னவனே. 30

அருட்சிவகங்கைக்கரையினிற்றருமமனந்தமாமத்தடத்தீரத், திருக்கொடியாகமியற்றிடிலனேகயாகபுண்ணியமுறுமிமையோ, ருருக்கொடுசிலலோகத்திலுமுறைவரிருப்பொருள்கொடுத்தியற்றினர்க்கு, மருட்கொடுமந்தப்பலனுறுஞ்சைவமார்சிவகங்கைசின்மயமே. 31



காசியிற்கங்கையமுனைசொல்வாணிகலப்பினிலிறப்பவர்முத்தி, யாசறவடைவாரருட்டிருவாரூரகத்தினிற்பிறப்புறின்முத்தி, வீசியசீர்த்தித்திருமயிலாடுதுறையினிலியன்றவஞ்செய்யி, னேசைசேர்முத்தித்திருத்தவத்துறையினொருதினமுறைந்திடின்முத்தி. 32

கவையடிச்சிறுகானெறிசெவிமறிமான்கன்றினின்கண்முனங்காட்டி, யுவமினம்பூசைப்பலத்தினுன்னையுந்திடவிங்கழைப்பித்தோம், நவமணிவராகநமதுமாமாபைநாடுறக்காட்டிநந்தீர்த்தத், தவமெலாமகலவாட்டிவித்தனம்வாயதரமுள்ளடக்கலாகலா. 33

அந்தவாய்வெளுப்புமகன்றிடமிந்தவணிநகர்புதுப்பித்தங்கமர்வாய், சந்தமாரிந்தவாபரமுற்றுந்தண்ணிழற்கலிகையுட்படுத்தி, நந்திருவருளாலுலகெலாம்புரப்பாயென்றருள்புரிந்தனனுதன், முந்தைவாய்வெளுப்புமொழியுமுன்னொழிந்தமுன்புவீழ்ந்தன்பினுற்றொழுதான் 34

எந்தையாரருளைவியந்தெழுந்திமையோரிறைஞ்சிடுஞ்சிவகங்கைக்கிசையச், சந்தமார்படிகநவமணியதனாற்றபிதஞ்செய்திறைகோவிற், சிந்தையார்மதிலுஞ்சிவபுரமென்னச்செழுமணிபொன்னினார்செறிவித், தந்திவாயுச்சிகாலையிற்சேவித்தஞ்செழுத்தோதியாங்கமர்ந்தான். 35

எண்ணியேமுன்னர்திரேதவாந்தத்திலிறந்திடுமிடநகராக்கி, விண்ணுளாருறையுந்தானங்களமைத்துவீதிகளாதியாய்விதிப்பப், பண்ணுலாமறையோரரசர்கள்வணிகர்பின்னவர்பல்குடிமல்கித், தண்ணிலாமாடங்கூடமாடங்கள்தழைத்துமுன்னுளத்தினோங்கியதால். 36

வேறு

பொன்னினீர்வளைமுழக்கொடுங்கால்நடைபோகிக்,
கன்னல்வாழைபைங்கமுகுதெங்கெங்கணுங்கலந்து,
சென்னெலோங்கியசெவ்விகணிறைதரத்தேக்கி,
யன்னமாரலரம்புயத்தடக்கடலடையும். 37

மாழைமாமலர்ச்செருந்திபுன்னாகமாதவிபூந்,
தாழைதாதகிகோங்குமந்தாரைசண்பகநீள்,
கோழரைச்செழுவிகுங்குமஞ்சந்தனங்குலவும்,
பேழைநேர்கனிபலவுசூழ்ந்தழகொடும்பிறங்கும். 38

வேறு

அற்றுபூங்கழனித்தழனியாலெழுந்துதுள்ளிய வாளை மீன்
றெங்கி,னெற்றினையுதிர்த்துக்கமுகெழும்பாளைநிறையினிற்சிதறி
மாங்கனியை, யெற்றினீள்பலவின்குடக்கனியிடறியிடைப்பழ
முதிர்த்தரம்பையினிற், செற்றுபூங்கரும்பைச்செறுத்துமஞ்சளு
ட்போய்ச்செங்நெலிற்புகுந்துநீர்செறியும். 39

வேறு

மாதவிப்பந்தரின்மஞ்ஞையாடவே,
தாதிவரளிகள்சங்கீதம்பாடுமாற்,
போதலற்கொன்றைபொற்போதுபோடவே,
நாதனூர்த்தடத்துக்கண்ணளினமாடுமால். 40

பாசடையிடையினிற்பதுமம்பூத்தன,
வாசவனுருவினைவயங்கக்காட்டுமாற்,
றேசொளிமாடத்துச்சிகரச்செம்மணி,
யாசறுமுதயமேலருக்கர்போலுமால். 41

அந்தணரவிப்புகையண்டர்க்குண்டியை,
வந்ததென்றவன்பொழில்மங்குல்போலுமாற்,
கந்தரந்தவழ்வகைமாறதாயும்பர்,
வந்திடமழையினையுய்த்தன்மானுமே. 42

வேறு

சாதிமாலதிவலம்புரிதளவுசண்பகம்வெண்,
போதலர்ந்தமந்தாரைகூவிளம்புன்னைசாளஞ்,
சீதமார்வெட்டிவேர்மருக்கொழுந்துசெங்கழுநீ,
ராதிபோர்டைபார்நந்தனவனங்கொல்லெங்கும், 43



நீலநெய்தல்செங்குவளைகணிலவியவோடை,
மாலைசெனநடைவண்டினம்புண்டரீகத்தின்,
காலைசென்றிசைபடித்தலர்கடம்பகற்போதிற்,
கோலவர்குழற்றங்கிமின்னாரிசைகொள்ளும். 44

குயிலினமயிலினங்குழுறுவண்டினம்,
பயிலுறுகிளியினம் பருதிப்புள்ளினம்,
வயமுறுதென்றல்பூமகரந்தங்கெழீஇ
யியலுறுஞ்சோலைகளிடங்களெங்குமே. 45

சந்தக்கந்தமுந்தார்குழற்கந்தமுதருக்க,
ளுந்தக்கந்தமுமோமத்தின்கந்தமுமுரவோர்,
கொந்துதார்மலர்க்கந்தமுஞ்சுகந்தமரிக்குழுமி,
வந்தெக்கந்தமுந்திகாந்தமுமுகாந்தமுமணக்கும். 46

கழனியின்றழனியுங்காமர்பொன்னகர்,
விழவினின்றழனியும்வேதபாரகர்,
தழனியந்தவிதருந்தழனியுந்தழீ,
மழையினின்றழனியைமாற்றிவீறுமால். 47

வீதிநான்கினுமேனிலைக்கொடிகள்தோரணங்க,
ணீதியந்தணர்சுருதிசொற்றெற்றியினிரைகள்,
போதின்மங்கையும்வாணியுங்காணியாய்ப்பொலிவார்,
சோதி பூசையைவிழவினைச்சொல்லுவாரெவரே. 48

வானநாயகன்மணிநெடுங்கோபுரக்கொடியி,
னேலேறுகண்டாசையுற்றைந்தருநீழற்,
றானமேவுமைந்தேனுவுந்தனித்தனிவந்து,
மேனியாவையுநாவிநானக்கிபேவியக்கும். 49

சோலையெங்கணுந்தோகைகள்துகிர்கொள்சூட்டன்னஞ்,
சாலையெங்கணுந்தோகையர்தருவசூட்டன்ன,
மாலையெங்கணுமோடுவதடுங்கருப்பிரதங்,
காலையெங்கணுமோடுவகடவுளரிரதம். 50

மாகத்தோங்குநெற்போரலால்வஞ்சர்போரில்லை,
மேகத்தேபொழிபயமலால்விளைபயமில்லை,
யீகைத்தருவினிலையலாலிலையெனலில்லை,
நாகத்தார்புகழ்மழவநாட்டெங்கெங்தநாளும். 51

வேதவிதியேமிகுநகரெனவிளம்புவதென்,
ஞதிவேதவேழ்முனிவரமர்தலமென்றாற்,
சீதநீர்வளஞ்செப்புவதோசிவகங்கை,
யேதநீங்கவன்னகரிடத்துதித்துளதென்றால். 52

திருப்பொலிக்திடுநகரெனல்வேண்டுமோதிருவை,
யுருப்பொலிந்தமாலுற்றவண்பெற்றனனென்றால்,
விருப்பினின்னகர்வேந்தனும்மழவன்வாழ்ந்திருந்தான்
பெருத்தசீர்த்திருமணாளன்றனீழலும்பெற்றான். 53

(4. மழவராசன் வெண்குட்டம் நீக்கிய வத்தியாயம் முற்றும்.)

ஆகச்செய்யுள். (214)

---

## (அஞ்சாவது வயிரவிவனமென வகுத்த வத்தியாயம்.)

முழவந்தழங்கக்கரடதடமூரிப்பகடேர்ந்துலகளிக்கு, மழவன்புகழுமரசர்சிகாமணியின்சரிதமகதியிசைக், கிழவன்கிளர்த்துமிக்கதைபைக்கேட்போர்வைபங்காப்பரென, விழையுந்தவத்தோர்தவத்துறையைவியந்தார்புகழ்ந்தார்விளம்புவார். 1

சுருதிச்சுரும்பர் சூழ்ந்திசைப்பத்தோட்டுக் கமலவீட்டகத்துப்,பருதிக்குழுவொத்தாசிருந்துபடைக்கும் பிரமன்பாலகனெ,தருதிக்குலகம் போற்றுதிருத்தழைக்குஞ் செல்வத்தவத்துறையைக், கருதிப்புகழுங்கதைகேட்பான்கனிந்தநின்னுங்கருத்தெமக்கே. 2

பொன்னஞ்சுடர்ச்சூளிகைமாடம்புனையுங்கொடிகள்மிடைந்தழகாற், றன்னுஞ்செல்வத்திருவிதிசூழும்பெருமைத்தவத்துறைக்கு, முன்னம்புகன்றுய்வயிரவிமாவனமென்றதுவென்மொழிகென்ன, நன்னெஞ்சுடையீர்கேண்மினெனநவில்வானிசைகூர்நாரதனே. 3



கணிப்பிற்றவப்பேறோரிமைப்பிற்காட்டும்பெருமைக்கலியுகத்திற்,றணிப்பிலாதிதனிற்காளிதன்னேரில்லாவயிரவியாங், குணிப்பில்சனைவயிரக்கர்க்கோன்றேவென்றிப்பெயர்கொண்டாள், மணிப்பொற்கபாலமாலிகையோர்கோடிதரித்துவயங்குறுவாள், 4

அழல் கான்றொளிருங் கொடுஞ் சூலமங்கைக் கேந்தியடல்கொள்வாள், மழுவாளசுரரெதிர்ந்தவரைவாளாள்கொண்டுவயங்கொண்டாள், பிழையாதடரும்வாட்கரத்தாள்பிரசண்டத்தாண்டவம்புரிவாள், பழியாவசுராமரர்களைப்பயப்பட்டொடுங்கப்பார்த்திடுவாள்.

### வேறு

தன்னொடுநடனஞ்செய்பவரின்றிச் சதுர்த்தசபுவனமும்போகி, மன்னியவெள்ளைதுன்னிதட்கமலவாணிநாயகன் வதிந்துறையும், பொன்னவைபுகுந்துசுருதியேமுதலாம்போதகவாதியாடிடநீ, யென்னொடுவருகத்தோற்றவர்விடுகவின்றளவினிநடமென்றாள். 6

ஆங்கதற்கிசைந் தேபாரணக்கிழவ ஞ்யிரந்தேவவாண்டாடப், பூங்கழற்காளிவென்றிட்வெட்கிப்புகுவான்நான்முகப்புத்தேள், தாங்கரிதுன்னோடாடிடலெமக்குத்தனையனும்பரதமாமுனிவ, னீங்கருநடனநிருபனோடாடிலின்னதுவெற்றியென்றுரைத்தான். 7

அம்மொழிகேட்டுக்கொம்மெனநகைத்தாளாங்ககன்றுடுவாளுன்னி, யிம்மெனப்பரதநூல்கள்கண்டுயர்ந்தோனிணையிலாநடனர்பாலேகிச்,செம்மயனோடுந்தந்தைசொற்புகலச்செவிப்புலனேற்றனன்றந்தை, யம்மவோதோற்கையறமதன்றென்னுவாடினனவளொடுநெடுநாள். 8

உக்கிறகாளிமிக்கதாண்டவத்தாலோய்விடாதாடலும்பரதனெக்கின்னிடைந்தான்வெட்கினன்சொல்வானிலவியவயிரவிநின்னோ, டொக்கநாட்டியஞ்செய்பவரிவணில்லையோங்கொளியாகநீங்கரிய, செக்கர்மாமேனிமுக்கணுபகனேசெயங்கொளுஞ்சொலுகவென்றான். 9

என்றனகைத்தேவயிரவியேகியெதிர்ப்பவரினியிலையென்
றே, சென்றனள்கங்கைசென்னிமேற்கொண்டதேவர்கடேவன்
பாற்சென்று, மன்றிலாடுமலர்ப்பதம்வணங்கிபதியணிமவுலி
மாதேவ, கொன்றையஞ்சடிலக்கூத்தினுக்கெல்லாங்கோவெனக்
கூறுவார்நின்னை. 10

என்னொடுமொடிற்பெயர்நுமக்காகுமென்றுரையாடினளிவ
டன், புன்மையாங்காரப்பொய்மையைநோக்கிப்புராதனனகைத்
திடபாகத், தன்னையைப்பார்த்தான்வயிரவிசெயலையடக்குவானு
கியேயமலன், மன்னுமுன்மத்தனிருத்தமொன்றறியோம்நின்னொ
டுமொடில்வந்திடுமே 11

ஆதலாலாடல்தகுநமக்கென்றுன்வனையுமண்டங்களனைத்
துஞ், சீதரனுதிதேவர்சடமையுந்திரிந்திடவனுதினமாட்டும்,பூத
நாயகனல்வேதநாயகனப்போதுடனெழுந்தனன்போற்றி, நாத
நாதாந்தசெயசெயவென்றேநாண்மலர்வானவரிறைத்தார். 12

உலகினைப்பெற்றவுமையம்மைதாளமொலித்திடவுவணமூர்
ந்திடுவோ, னிலமெலாநடுங்கத்தண்ணுமையுமுழக்கநிகரிலாமுனி
வர்கண்களிப்ப, நலனுறுமிகுகோடியையவுமிருபானண்ணிநின்
றேத்திடச்சாம, மிலகுபின்பிசையாலேத்திடநடனமெடுத்தன
னெம்மையாளுடையான். 13

காளியுநடனங்கோலினளெங்குங்கறங்கெனச்சுழன்றனக
ருது, நீளுறுமுகாமண்டலநடனஞ்செய்தான்பாரிசஞ்சேர்ந்தாள்,
தாளுறபிரமரிகைநடந்தந்தாள்சக்கராகாரமுநடித்து, வாளுறு
ம்ராசமண்டலிபிரமரிசக்கராதியநடம்வகுத்தே 14

வேறு

தபூதலாடவிமுதலியரேறெனத்தயங்க,
நபூதமின்னடமென்றுநாடினர்மிகநடித்தாள்,
விபூதியாடியமெய்ப்பொருளப்பலநடன,
வபூதமாமெனநடித்தனளுயிரம்விதமாய். 15



வேறு

திரியச்சுதாளந்தேவியெடுப்பகரபிச்ச,
முரிமைச்சாத்துவநடமாமன்னுமையம்மை,
யருமைச்சிங்கநாதத்தாளமவைபோடக்,
கருமக்கவுசிகரீதிநடித்தான்கைலாயன். 16

இமையநாயகியாள்கானபல்லவமெடுத்திசைப்ப,
நமையுமாட்கொள்வான்கூவித்தமாநாடகநடித்தா,
னமைவுறுப்பரிணீமுகஞ்சிங்கியேமுதலாந்,
தமையடர்த்திடுநாடகமனந்தங்கள்தழைப்ப. 17

வேதநாதங்கள்கீதங்கள்மிகுந்தெழவின்னோர்,
பூதராதியோர்முனிவரர்புடைமிடைந்தேத்த
வாதினையகிகண்டிடவனைத்தையுமாட்டு,
நாதனுடினன்காளியுநடுநடுங்குறவே. 18

சதுதாளமற்றிதுநடமுதனடவிறுதி,
நீதியாவருமறிகிலார்மயங்கினர்நேரே,
வாதிநாடியவயிரவியறிகிலாள்மயங்கப்,
போதநாயகனூர்த்ததாண்டவம்புரிகின்றான். 19

அருள்சுரந்தண்டகூடத்துக்கப்புறம்போகி,
முருகியங்கியமுண்டசமுழுமலர்ப்பாத,
மிருளகன்றிடவெங்கணுமெடுத்தனனடனங்,
கரியகாளியுமெடுத்திடநினைத்தலுங்கண்டே. 20

ஆண்டநாயகியவைதகாதெனநகைத்திடலும்,
பூண்டுகொண்டதன்னுணமாங்காரம்பொன்றியதாற்
றுண்டவன்முகநோக்குறாள்தன்றலைவளைத்தாள்,
சேண்டயங்குவோர்யாவருஞ்செயசெயவென்றார். 21

கருணைநாயகனண்டனைபூட்டிடக்காளி
மருளுமுள்ளமோடழுங்கினளழுதனள்மயங்கி,
யருளுநாயகன்யாவையுமாட்டுநின்னடனந்,
தெருளிலாதநான்கண்டிடவெத்தவஞ்செய்தேன் 22

வேறு

நீடனபாராபரநிமிர்ந்தருடியநாதாந்த,
மடமையினுடனிகலினனிவைவிடவாழ்வேந்தே,
யடிமையெனுவருள்புரிகெனவாடலமர்ந்தாதி,
படியொடுவானமுநிலைபெறவோர்மொழிபகர்கின்றாள். 23

விடுவிடுநீகெடுமதியினையயிரவிமிருபாவத்,
தொடர்பதுமுடிவுறவனுதினமர்ச்சனைசுசியாகப்,
படிமிசைபுரிகெனவெறுதலமெனவுயர்பரமேச,
நடநவில்நாயகனிதுதலமெனவேநவில்கிற்பான். 24

தென்றமிழ்ப்பூமிதென்றிசைப்பொன்னிவடகரை திருத்த
வத்துறையென், றொன்றுளதென்றமுனையொடுமகிழ்வுற்றாறை
குவமத்தலத்தோங்கு, மின்றிகழ்சடிலச்சந்தமாமுனிவர்வியந்தி
டமுத்தியுய்விதித்தோ, மன்றியத்தலமேதென்னாகாசியாதலா
லாங்கமர்ந்திடுவோம். • 25

பொறிமகள்பூசைபுரிந்தனளன்றியமுவனுப்புரவலன்வல்
னேய், மறிபடநமதுசிவகங்கைபாடிவணங்கிடமாற்றினேமின்னு,
ளறிவுடைச்சத்தமுனிவருமங்கேயமர்குவரெட்டொணம்பரன்,
குறிபடுஞ்சதுரயுகமந்தமுனிவர்பூசனைசெய்யுநாட்குணிக்கில். 26

அச்சிவலோகத்திருத்தவத்துறையிலாடுஞ்சிவகங்கையமு
ரு. மெச்சிமூவுலகுந்துதித்திடுநீர்த்தாமையைலாம்மேதினிக்கி
யாதே, யிச்சகமதனிற்சடமெடுத்தோர்சளியற்றியபாவமத்தலத்
தை, நச்சிடப்புகழ்க்கேட்டனுமகனும்நீயுமத்தலத்திடைநண்ண.

வந்தெமைப்பூசித்தெந்தெமைமறியாவன்பவந்துடைத்தி
டென்றருளச், சுந்தரச்சோதிவிடங்கனைத்தொழுதுவண்ணனை
க்கடிதினண்ணிளளா, லந்தரத்தகரேற்றவர்மழைபொழிந்தேயனு
தினமமரர்வந்திறைஞ்சஞ், சந்திரர்த்தடவுந்தடமதிட்கோவிற்ற
மைழத்தொளிர்திருத்தவத்துறையில். 28



தெள்ளுருநீர்வளங்கொள்திருத்தவத்துறையைச்செவ்விதின்
வலங்கொடுசேர்ந்து, வள்ளியோர்பரவுஞ்சிவகங்கைபாடிவண்டி
ருநீறணிந்தன்பாற், கொள்ளைமாதலத்தோர்கும்பிடுந்தெய்வக்
கோவிலுட்புகுந்துமைபாகத், துள்ளுமான்மழுக்கைச்சோதி
யைக்கண்டாள்துதித்தனள்பணிந்தனள்தொழுதாள். 29

வேதமாகமத்தின்விதிப்படிபூசைவிமலனுக்காற்றியே யமுன்
னின். றுதிநாயகனையழைத்துவாழ்வித்தவையனைபெருந்திரு
வாளா, சீதவானதியச்சேக்ராதேசுவிடங்கனேதிருத்தவத்து
றைபென், ஞதனையென்றுநார்றமுப்பேறலேத்தினுள்வயிரவிந
யந்தே. 30

எண்ணுருப்பாவமிரிந்ததுநீயுமித்தலத்திருந்துசாத்திடுவா
ய், புண்ணியதலமீதென்றருள்புரியப்புராதனன்றபாதலம்போ
ற்ற, நண்ணியேயிருந்தாளந்தமாநகரம்வயிரவிவனமெனநவின்று
ர், கண்ணினுலவளைக்கலன்டுபோற்றினர்கள்கடும்பகைவிடக்கதி
யடைவார். 31

சங்கரன்செல்வத்தவத்துறைநாதன்வயிரவிக்கருள்புரிசரித,
மெங்கிருந்தோர்களாகினுங்கேட்கிலிடர்விடும்பகைகெடுங்காலற்,
சங்கிலிபூண்டோரங்கவைபோக்கித்தருச்செல்வகளமடைகுவ
ரென்றான், பொங்கருட்கதையால்வல்வினையகற்றும்புனிதனுரா
ரதமுனிவன். 32

(5-வது வயிரவிவனமென வருத்த வத்தியாயம் முற்றும்)
ஆக விருத்தம் 249

## ஆருவது திருக்கல்யாண வத்தியாயம்.

நாற்றிசைபோற்றுமேற்றிசைமகதிநாதனவில்வனகேட்டு
ப்,போற்றிசைமுனிவர்மறுத்தெதிர்புகழ்ந்துபுகலுவாசகமெலாம்
புகழுந், தாற்றிளம்பூகத்தாற்றெழுங்கயல்கடாவுறுந்திருத்தவத்
துறையிற், றேற்றருமகிமைப்பேற்றினிதுவந்தோஞ்செப்புமவி
ண்ணப்பமொன்றுளதால். 1

திருவளருருவத்தொரு பெருந்தேவைச்சிவன் றிருத்தவத்துறைப்பெருமான், அருளொடும் வேட்டதன் பொடுங்கேட் பாணுசையுற்றனமெமக்கையே, விருவினைத்தொடர்புக்கருமலச்செயலுமிரிந்திடமுருந்திளநகையாண், மருவிடத்துருவத்தொருமுதற்கண்பும்வாய்த்திடவருள்கெனவகுப்பான். 2

தெளிதருஞானத்திரட்சியோவொருவன்சிவதருமத்தினதுருவோ, களிதருமமுதமொருவழிதிரண்டகாட்சியோவெனக்கவின்சிறந்தங், கெளியரேமருளொன்றிமையவர்முனிவரின்னிசையாளர்விஞ்சையர்கள், தளையறச்சூழ்ந்துதாழ்ந்துவாழ்த்தெடுப்பத்தழைத்திடுங்கயிலையாஞ்சயிலம். 3

சந்திரர்கோடிவந்தொருமலையாய்த்தாந்திரண்டன்னதச்சசிக, ஞந்தியவமுததாரைகளொழுக்கொத்தொவிதரும்வானதியருவி, வந்தடிக்கமலவாவிகள்பாயவானமுதின்றுமோர்காலஞ், சிந்துவின்விடத்தாற்சிந்திவந்தனரேறறேவருண்பதற்கெனத்திகழும். 4

ஆயிரங்கோடிஞாயிறுத்திலங்குமவிர்மணியாலயமதன்கண், சேயொளிச்சிந்தாமணியினுற்றிகழுந்திருவாசிருக்கைமண்டபத்தில், மீயுயர்விதானநவமணிச்சரமுமிகுமளித்தருமலர்த்தொடையும், பாயொளிமணமுந்திசைதொறும்பரப்புமதிணடுப்பரந்துயர்ந்தொளிரும். 5

ஆளரிமடங்கல்சூழுறச்சுமந்தவரியணைப்பெரியவாசனத்தில், வேளினையெரித்துநீடருள்சுரந்தோன்மின்னருளொடும்வீற்றிருந்தான, ளுளினைப்பரவிநாரணன்முதலோர்சயசயபோற்றியென்றிசைப்ப, வாளுறத்தருவின்றேமலர்பொழிந்துவானவர்மாதவர்வணங்க. 6

தும்புருவொடுநாற்கருதியிற்பாடச்சுருதிகள்கருதிநின்றேத்தப், பப்புசாமரைகளிருபுரத்திரட்டப்பாடகமாடகச்சிலம்பா, ரம்பொன்னூர்சரணத்தரம்பையர்நடிப்பலருங்கணநாதர்கள்வணங்க, நப்பினுற்கருணாநந்தியெம்பெருமானுதநாதாந்தவென்றேத்த. 7



இப்படித்தென்னச்செப்புதற்கரிதாயிருந்திருவோலக்கத்திமைய, மைப்படிகண்ணுருடைசாசிருக்குமையணிகண்டன்மாதேவ, னுைப்பரிதாயபருதியினிலையாமொளிமணியாடியுட்டோன்றச், செப்பரிதாயவுமையொடும்பார்த்தான்றினகரற்குள்ளுறைசெயல்போல். 8

எதிருறநோக்கவாடியுட்சாயையிடப்புறம்வலப்புறமாகப், புதிதுறுமதனையுமையம்மைகாணூப்புராணர்க்குவலப்புறமாக, மதிதருதனதுசாயையென்றதுமகிணரேவலத்தினிலொருத்திச், சதுரியாயிருக்கத்தாபிதஞ்செய்நீர்சம்புவுந்தூர்த்தராயினீரே. 9

அத்தனுநீசரொனும்பெயருமக்கேனணிமணிக்கண்டத்தில்விடமுஞ், சுத்தமாமதுரவாசகச்செயலின்சூட்சியுங்கண்டனனென்னுச், சத்திதாங்கரியவாடல்கொண்டிடலுஞ்சங்கரனங்கையற்கண்ணுப், பத்தியாய்த்தநுதான்வலமிடமெதிரிற்பரிந்துநீபார்த்தெதிர்பகர்வாய். 10

வேதநாடரியவாலையாதலினல்மேனையோடிமையமீன்றெடுத்த, பேதையாயித்தப்பேதமுற்றனைநாமபிழைபுரிந்தோமலநோ, மாதியாரணமுமறைந்திடுமுன்னையன்றிநாமொருவரையணையோம், பாதியாநமதுமேனிபேயென்றுபரிந்துகந்தாந்தழீக்குனிந்தான். 11

சூட்டுடையெகினமோட்டுவெள்ளெனத்துடர்ந்தின்னுங்காணுருச்சோதி, காட்டுறுமனந்தமரிபிரமாதியண்டங்களுமிந்துமோர்திவசல், காட்டுறுதமலனணிமதிக்கீற்றுட்கண்டனன்றன்றிருச்சாயை, கோட்டுபுன்முறுவல்கொண்டுமைதனதுகொழுநனைக்குறித்திவைமொழிவாள். 12

நிலைமையாய்வலத்தினிருப்பவடன்னைநீரொளித்தன்றுநீரொளித்த, நலனுறுமவுலிதலையினிலமைத்தீர்நன்றுநன்றெமதுநாயகரே, யலகிலாதேவைக்குமீச்சுரர்சருத்தாவாண்டவரிப்படிக்கமைத்தீர், திலகவாணுதலாளேழையென்றேயிச்செய்திசெய்தீரெனற்றேம்பி. 13

பிரிவுறவுமையாடன் கலையாகப்பின் னுமோருருக்கொடுகை லை, யரியநாயகனும்பெருந்தகைவேட்பவரும்பெயர்பெருந்திரு வென்றே, யுரியகாமத்தோடுவந்துபோந்திடனுமொருவனுங்கங் கைசற்றுகுத்து, விரவியோகடப்பவேட்டிடக்கைலைவெற்பெனுந் தலத்துறைக்குற்றான். 14

ந்தியநீர்க்கங்கைநானிலங்கொளாமனுயகனருள்விநாயகன் றன், பிறைநிகர்கோட்டாற்குத்திப்பாதலத்திற்பெயர்ந்திடவிடு த்தனும்பெயர்ந்தன், னெறியினிற்புகுந்து கங்கைவாகனமாய்வி மலையுங்கலைந்தியணிந்த, மறியுறுகரத்தோனுளத்தொடுபோந்து வந்ததோர்குழவியாய்வயங்க. 15

ஒள்ளொளியுவந்துவெள்ளைநீறணிந்தவுரோமசன்பராபர ன்சடிலத், தெள்ளுருவான்கங்கையாடுவான்சுயம்புக்கேத்திரத் தேதவஞ்செய்தான், வள்ளலாருளால்மாதொடுங்கங்கைவந்தவ ணெழுந்தருளவயங், கொள்ளைவான்றவஞ்செய்ததுவெனவமரர் குணலையிட்டனர்மலர்சொரிப்ப. 17

எனச்சொலுமுனிவன்றனைச்சவுனகர்பார்த்தீதிசயமெ னவிசைப்பார், தனக்குவமில்லான்றிருக்கலியாணஞ்சாற்றென வேவிறுன்றமொழிந்தா, யனைத்துநின்முகத்தாற்கேட்டிடவேண் டுமாமுனியங்கண்மேவியதென், சினத்தினைச்சினந்தமுனிவா வென்னச்செப்புவாரெனுப்பிலாமுனிவன். 17

தருமமோருருவெடுத்தெனவிளங்குஞ்சைவமாமுனியு ரோமசனு, மொருபகுதிரைஞ்னூறுவேதாநாளோய்ந்திடிலொரு புறங்கையில், மருவியவுரோமமொன்றுகுமந்தமாமுனிசுயம்புக் கேத்திரத்தி, னரியதாங்கங்கைவாத்தவம்புரிந்தானவ்விறைவனங் கவனிடத்தே. 18

வேறு

மகிழ்வினோடுமாங்கவியர்வந்தனர்,
தகமைரோமசன்சரணந்தாழ்ந்தனர்
புகழுமாமுனிபோந்துறத்தழீ
யிகழ்விலாசனமிட்டிருந்தனர். 19



அன்பினால்விருந்தாற்றியாசகன்,
றின்புளீர்கெ:லோயிங்குவந்ததென்
றுன்புநீர்விடச்சொல்லுவீரென,
முன்பிருந்தவன்மொழிதன்மேயினன். 20

உய்ந்திடத்தவமுனூற்றமுத்தம,
சந்திமுற்றநின்றயவில்வாழ்ந்தனன்,
பந்தமற்றநின்பாதம்பற்றினேன்,
சிந்தையுற்றவைச்செப்பக்கேட்டியால். 21

மழலைமென்மொழிமைந்தரின்றியே,
பழையவல்வினைபற்றினேந்தனன்,
பொழியுநின்னருட்புதுமையாலொரு,
மழகுபுத்திரியருளவேண்டுமால். 22

அரியகன்னிகாதானமாயினும்,
புரியவேண்டிப்புத்திரர்களில்லையே,
லுரியசோடசத்தானத்துள்ளினும்,
பெரியகன்னிகாதானமபேசிலே. 23

கோட்டுக்கோவினங்கொடுக்குந்தானமும்,
வேட்டுவேழ்விசெய்திடலுமேன்மையாம்,
பூட்டிப்பூணெடுப்பூவையைக்கொடுத்,
திட்டும்புண்ணியமெனவக்குமேலதாம். 24

உமைபடைக்கனனுமையைப்போலவே,
சிமைய[illegible]னில்கற்புடைத்தனையைப்பெற்றுநான்,
திமையினா[illegible]பினிற்சிவனையேவரித்,
[illegible]வேண்டுமெந்தையே. 25

என்றமாங்கவழ்ப்பினை[illegible]
னன்றியித்தலத்தந்சிந்திலவா,
மொன்றியிங்குறைகெனவுறை[illegible]
கொனறைகுழியைக்குறித்தங்கு[illegible]. 26

ஏயர்நீங்கிவரிருந்தகாலையில்,
யாயர்வாரெனயாவும்வல்லவர்,
ராயர்நான்மறைக்கங்கையாடிடச்,
சேயரோமசர்ச்சேர்ந்துதாழ்ந்தனர். 27

வேறு

சார்ந்தவர்க்குத்தருவனதான்செய்து,
வேர்ந்துவந்ததுரையெனவோதுவா,
ஞர்ந்தஞானத்தமர்கவலைத்துறுநர்,
வார்ந்தகங்கைபடிதல்வழுக்கதே. 28

பானிறத்தனம்பாலைப்பருகியே,
கோலநீரைவரைந்திடுங்கொள்கைபோற்,
சூலபாணிதுரியத்திற்றோய்வுறீ,
மால்மயக்கமறுத்திடல்ஞானமே. 29

வானில்வந்தபதியணிநாயகன்,
றானுவந்துதரித்தருள்கங்கையில்,
மோனமோடுறமூழ்கமன்றேருமேவன்,
ஞானமீதெனநாசியிற்கைவைத்தான். 30

வைத்தரோமசமாமுனிகூறுவா,
னித்தலத்தினிமேவருங்கங்கைநீர்,
சித்தியித்தலத்தாகுஞ்சிவதலத்
துத்தமத்தலமிக்குகமுறில். 31

பாவநாசஞ்செயும்பனிக்கங்கைதான்,
தேவதேவனருளினிற்சேர்ந்திடுந்,
தாவிலாதுறையென்னத்தவஞ்செய்தா,
ராவராகிமொழிந்தஞ்செழுத்துமே. 32

வேறு
பலனருமுனிவோர்தவ

அலைத்திலுந்தாக்காதுறைந்திசெச்சத்திகளையுந்தன்றிருவ
முணர்ந்து, நினைத்தலுக்கரியசாமசர்பணங்கத்தெந்கணமூர்த்
டிகேயத், தினைத்துணைநீள்விளிற்பாதிபலத்தினிற்போகவதியெ
தமாய்ச்செலுத்தட் 33
னப்புக்கதையன்



மேல்வரும்புனிதக்கங்கைவாகனமாய்மேவம்மைசுயப்புகே
த்திரத்தின், மூலமாயமர்ந்தமுக்கணன்முன்வந்தெழுதலுமுழு
மலர்தூர்த்தார், பாலலோசனனைப்பரவியேயிமையோர்பாடினர்
வேதமாகமங்கள், ஞாலமெத்தவஞ்செய்ததுவெனச்சுவர்க்கநா
டியேதுதித்ததையன்றே. 34

சுருதிரோமசருமாங்கலமுனியுமியாயருந்துதித்தெழுந்தா
டிப், பருதியைக்கண்டவுல்கெனக்களித்துப்பனிமலர்தூர்த்துவீ
ழ்ந்திறைஞ்சி, யுருகுபொன்னிறத்துமுருகலர்க்கொன்றையுறும
ணங்கமழ்ந்தகங்கையிலே, யரகரகரவென்றுடினார்கங்கையகத்
தெழுகுழவியைக்கண்டார். 35

தினகரானந்தவொளியொடுமன்னைசேர்ந்தனள்திருமதிய
னந்த, மனவொளிபரப்பிக்கங்கையுயடைந்தாளந்தமாவிமையமி
ன்னகரென, முனிவர்யாவோருமமருமேற்றியிறைஞ்சிடக்கண்
டிம்மூவர்களும், பனிவரையுமையைப்பனிமலர்தூவிப்பணிந்த
னர் பதமலர்வழுத்தி. 36

பானல்வாய்மதலைப்பச்சிளங்குழவிபார்வதிபோலுமாங்கல
ரே, ஞானநாயகனைநோக்கியிவ்வனத்துநண்ணியதவப்பலத்தா
லே, தானமூவுலகத்தாயவதரித்தாள்சந்திரமௌலியேமணக்கு,
மீனநீங்கியதாலெடுத்துநீர்வளர்க்கிலெனத்தொழுதுரோமசனெ
டுத்தான். 37

பற்றறுத்துயர்ந்தரோமசனெடுத்துமாங்கலர்பாணியிலுய்ப்ப,
நற்றுபாற்குழவியுலகன்னையென்றேநாடியேசிரந்தொழவேந்திச்,
சுற்றுமாச்சிரமச்சூழலின்முல்லைச்சரிகுழற்றேவிகைக்கொடுப்ப,
மற்றவடானுமளவிலாமகிட்சிவைத்தனள் தொழுதனள் வளர்த்
தாள் 38

மாலையைக்கடந்தயாயவர்தாமும்வளரொளியுரோமசர்தா
மும், தூயநீர்க்கங்கைதோய்ந்தளவில்லாச்சித்தியுமுத்தியுந்துய்
த்தார், நேயமாங்கலாத்தீர்த்ததீரத்தினிறைமலர்நந்தனவனம்
வைத், தாயதீர்த்தத்தின்படிகளுங்கட்டியனுதினமாடியேயமர்ந்
தார். 39

அழகியதீர்த்தபிருகுபாகத்தில்நுமுனிவோர்களாச்சிரமங் கெழுமமாங்கலநுமகனவெப்பாகக்கிள நிமாச்சிரமத்திலமர்ந்தே, மழவுறுதுழவிவளர்மதிபொன வம்மாங்கலர்தவமெய்ஞவளர்ந்தாள், முழுமதிமுகத்தாட்கெவ்வனம்வருதல்முக்கணனோக்கிவேபமு யன்றான். 40

அந்தநற்காலஞ்சத்தமாமுனிவரடைந்தவண்டவஞ்செயவ வற்கு, வந்தருள்புரிந்துவய்க்குமக்காலமலர்கொய்வான்சிவகங் கைமருங்கே, நந்தனவனமக்குளத்தினிலன்னைநான்மறைக்கன் னியரோடுஞ், சந்தனுடைவிசூழ்வேலியுட்புகுந்துதருக்கொடுநீர்ம லரெடுத்தே. 41

புதுமலரனைத்துமதுமலர்க்குழலிற்பொருந்திடவணிந்து டன்களைந்து, பதுமபாசடையிற்பொதிந்துவைத்தங்ஙன்பான் மொழியர்ருடனேகு, மிதுதினநடப்பவம்மலரெடுப்போரிறைவர் க்குத்தினந்தொறுமிந்த, விதமலரனைத்துநந்தனவனத்தார்வியந் தெடுத்தமைத்ததென்றெடுத்தே. 42

பொதிந்தவம்மலரைக்கைக்கொடுபோகிப்புராதனர்க்கணிவ ரின்புறவே, பதிந்தனுதினமுமற்றொருஞான்றுபங்கயத்திருவடி சேப்ப, வதிர்ந்தொலிசிலம்புதண்டைகளலம்பவருமறைக்கன்னி யரோடு, மெதிர்ந்துவந்தன்னைமலர்வனம்புகுந்தாளிணர்மலரெடு ப்பவர்காண. 43

நறவுகொப்பளிக்குமுகிழ்வெடிப்பருவநாண்மலர்கொய்வது ந்தரித்துப், பிறைநுதல்கழித்துப்பொதிந்தவண்வைக்கும்பெற்றி யுமுற்றவுங்கண்டா, ரிறைகுவாரந்தோவரியநப்பெருமாற்கணிவி த்தோமறைக்குலக்கன்னி, குறைவறமுடித்ததென்றுளங்குழை வார்துலவியதுரோகமிங்கென்பார். 44

ஐயகோவிதற்குச்செய்வகையேதென்றலமந்தங்கற்றை நாளொடாது, மையுமுள்ளத்தோடேகினரந்தநாளினிவிருவர்கண் டறியாச், செய்யதாளுடையானவரவர்கனவிற்சேர்ந்திவைசெப் புநங்கலையாய், வையமீன்றவள்சாத்தணிமலரதற்கேவாருநசையெ ன்றுன்மணமுயல்வான். 45



ஆங்கவர்கனவில்கண்டவையெல்லாமவரலர்க்குரைத்துமை யடியார், பூங்கமலத்தைப்புகழுவாரிறைஞ்சப்போகுவாராயினர் புலியோ, ரீங்கிவைபிகழக்கைலையங்கடவுளிறைதிருத்தவத்துறை க்கிருந்து,நீங்குறுமுனிவரெழுவற்குநேயச்சனகற்குநிகழ்த்துவா னெறியால். 46

மங்கலாகத்தேமங்கைகைமணப்பான்வருகின்றேம்நீவிர் பெண்பேசி, யிங்குறவிரென்றியம்பலுமுனிவரெழுவருஞ்சனக ருமேகி, மங்கலந்தாங்குவாழிடையாத்துமங்கலப்புகுதமாங்கல ரும், பொங்குமாதரவினொழுந்துறப்பணிந்துபூசித்துப்புதுவி ருந்தளித்தான். 47

மங்கலர்முகம்புரத்திங்கிவர்மொழிவார்மாலயர்க்களவிடா ப்பெருமான், சங்கரனுதியந்தமொன்றில்லான்றனதன்மித்திரன் சிவன்றனக்குன், றுங்கமாந்தவத்தாற்பெற்றநந்தாயைச்சுந்தரம ணம்புணர்த்தென்று, வெங்குலமுயர்ந்ததென்றெழுந்தாடியிறை ஞ்சினன் பாடினனிருந்தான். 47

உய்ந்தனனடியேனுய்ந்தனனென்றங்குடன்படவுவந்தந்த முனிவர், சந்தமார்சரணத்தெந்தைபால்வந்துசாற்றியேதாழ்ந்த டிதொழலும், மிந்துசேகரனு[illegible]கைலையேகநாயகன்ம ணக்கோலச், சுந்தரவுருவு[illegible]தவத்துறைக் கேசுடர்ச்சோதி. 49

பிறைபணிமகு[illegible]சுடரெறிப்ப[illegible]ப்பிணைகள் கேயூர, நிறைமணிக்கண்டசரமெனநாக[illegible]தமதாயக், கறைமிடற்றழகுகாட்ட[illegible]ற்றியிற்கண்கட்ட[illegible]த்தொளிர்தி லதத், திருமவைகாட்ட[illegible]பூதிசாந்தாகத்திசை[illegible]ள்வெண்பட் டுடைசெறிய. 50

மால்வனின்னுமோகினியாகம்திததிட்டவுதித்தபோழகன், றுதவிழ்கொன்றைத்தார்புயப்பெருமான்றன்கழுநீர்த்தொடை சாத்திப்,பாணிறச்செங்கட்பள்ளிமால்விடைமேற்பச்சைமால்கை பிடித்தேறி, ஞாலமீரேழுஞ்சுருதியுமார்ப்பநாதமங்கலத்தொடு நண்ணா. 51

85720

இருசுடர்கவிகைவரிசையினேந்தவிமையவர்கவரிகளிரட்டவருமறைமுனிவர்விசிறிசேர்ந்தாற்றியாலவட்டங்கள்கொண்டணையத், தருமலரிறைப்பச்சிலசிலசுரர்கள்தன்தன்பொன்னடப்பைதாங்குறச்சீர், பொருவிலாநந்திபுகழ்ந்துமுன்னடப்பப்புணரியோன்களாஞ்சிபூண்டெடுப்ப. 52

காலறைமந்தமாருதமாகிக்கமழ்ந்துமுன்றவழ்ந்திடத்தருமன், பாலமேலாசனவெண்டேத்தியேயுடைவாள்பற்றவீசானர்மங்கலச்சொற், சீஹுறவெடுப்பவங்கியோனனந்ததீபங்கள்திகழ்ந்திடப்பிடிப்ப,மாஓறுமேற்றுக்கொடிகளுங்குடையும்வானிறைத்திடவியக்கணங்கள். 53

இந்திரனமரர்தங்களுக்கெல்லாமேயினபணிவிடைபேவிவந்திடவிருதியக்கரோடசுரர்நாகரும்வாழ்த்திவந்திப்பக், கந்திருவோர்கள்கானம்பண்ணிசைப்பக்கருடர்வித்தியாதரர்சித்தர்,ரந்தாத்துறைவோரனைவரும்போற்றவரியயனிருமருங்கணைய. 54

வேறு

கைலைவாழிறைவன்வந்தான்கண்ணுதற்கடவுள்வந்தா, னயில்பொலிசூலன்வந்தானழைத்துவாழ்வித்தான்வந்தா, னியலிசையிருக்குஞ்சத்தவிருடிகட்கிறைவன்வந்தா, னுயர்தவத்துறையான்வந்தானென்றனவொளிர்பொற்சின்னம். 56

இருக்கினுக்கிறைவன்வந்தானிடைந்தவர்க்கருள்வான்வந்தான், பெருக்குமந்தணர்கோன்வந்தான்பெருந்திருவாளன்வந்தான், றருக்களின்நிறைந்தசெல்வத்தவத்துறைநாதன்வந்தான், திருக்கயிலாயன்வந்தானென்றனசின்னமெல்லாம். 57

வேறு

ஐந்தருமலர்வான்சிந்துறச்சிந்தாமணியிருநிதிகளேந்தேனும், வந்தடிபணிந்துவந்தவர்க்கெல்லாம்வழங்குறத்தழங்குமங்கலத்தோ, டிந்திரைமகரந்தாரணத்தோடுமிணங்கியதவத்துறைவீதி,வந்தெழுவிடையைநடவினனவ்வூரடியவர்மலர்மழைபொழிய



மங்கலரிடைதலாற்றிடையாற்றுமங்கலமுனிவராச்சிரம,மெங்கணும்பசும்பொன்னின்மணிகுயிற்றியியற்றியமாடகூடங்க,ளங்கணம்பந்தர்கம்பலேசிதானமாயதென்னுயகனருளாற், சங்கரனுமையோடுறைமணவறையுஞ்சமைந்ததுமலர்மணந்தழைப்ப.

திருமலிசெல்வமணவறைநடுவண்செழுமணியரியணைதிகழவருசையினமரர்முனிவரர்கணங்கள்வந்திடவாசனம்வகுத்துந், பொருவருமுனிவர்பூரணகும்பம்பொற்புடனேந்திமுன்போந்தாரிருவர்காண்பறியான்றவத்துறைநின்றுமெழுவிடையாற்றில்வந்தெதிர்த்தான். 60

சுருதிகளார்ப்புந்தூரியத்தார்ப்புஞ்சுரிவளையார்ப்புஞ்சொல்லார்ப்பு,மருமறையார்ப்புமுனிவர்களார்ப்புமரம்பையர்சிலம்பொலியார்ப்பும், வருதன்முன்னடிக்குமார்ப்புமாமலர்கண்மணங்கொளவிறைப்பவரார்ப்பும்,பெருகியதெவர்க்கும்பெரியவன்றனதுபெருந்திருவினைமணந்திடுமூர். 61

மங்கலர்முதலாமுனிவரரெதிரேவந்தவரந்தையைப் பணிவார், சங்கராவிந்தத்திருவிளையாடல்தமியரையாட்கொளத்தந்தா, யிங்கியாங்குமாறெமதுகன்னிகையையேவதென்றேயெழுந்தார்த்தார், ரங்கவர்மகிட்சியுறைவதாரிறையோடன்னகர்முன்னர்வந்தனரால். 62

மறைமுனிவரர்தங்கற்புறுமனையார்மங்கலமெட்டுங்கையேந்தி, யிறைமுனம்வருவாரிணையடிச்சிலம்புமின்மணித்தண்டையுமேங்க; நறைநிறப்பஞ்சின்மெல்லடிபெயர்ந்துநாணுறவேகியேநடந்து, முறைமையால்மணித்தட்டேந்துதீபங்கள்மும்முறைமுதல்வனைச்சூழ்ந்தார். 63

இம்மணக்கோலமம்மநாங்கண்டதில்லையிவ்வளவுமென்றிசைப்பார், செம்மையோனுருவங்கண்டிடக்கசுந்திகழ்விழியென்றுகண்புதைப்பார், கைம்மிசைவளைகள்கழன்றுமுன்றெழுவார்கருணையாலம்மனைபிறந்த, நம்மனைக்கடிமைநாமேலாமென்பார்நல்விசைமங்கலநவில்வார். 64

முனிவர்கண்மாதர்விபுதர்கணிறைந்தமுன்றில்வாய்வந்து வெள்ளிடையின், றினியவேதத்தின்பாதுகைசேர்த்தியிணையடிக் கணைகழலார்ப்பத், தனதுபால்முகுந்தன்கைமலரேந்தத்தடக்கை வைத்துள்புகப்பால்கொண், டனையன்மங்கலைவந்தடியிணைவிளக் கலகமகிழ்ந்தரியணைக்குற்றான். 65

மங்கலத்தெழில்கொண்டங்கிருந்தருளுமணவணிமாதினை மாதர், செங்கரமேந்திச்சிவமணவாளன்சேர்ந்தனனெனவழைத் திறைபாற், றங்குறவிருத்தவிருந்தனளமரர்சயசயவென்றடிதா ழ்ந்தார், பங்குனிமாதத்துத்திரநாளிற்பகர்குருவாரவோரையி னில். 66

அருந்ததிமுதலோர்பெருந்துதியெடுப்பவாடகக்கமலமேற் றிருவுந், திருந்துபார்மகளுஞ்சாமரையிரட்டச்செழுந்திமகளிர் பூச்சிதற, முருந்தளமுறுவற்செய்யவாய்கற்புமுனிவர்களமரர்க ள்மகளிர், பெருந்திருவாட்டிபெருந்திருவாளன்பெயர்சொலிமங் கலம்பேச. 67

மாதுலனிறைவன்மலரடிவிளக்கிமதுவர்க்கநிவேதித்துவதி ந்த, வாதிநாயகிதன்றிருக்கரமையுனருட்கரத்துய்த்தெனதன் பேரா, டுதியமாகக்கொண்டெமையாளென்றுடன்வருங்கங்கை யோடுய்த்தா, னீதியாய்க்கொண்டான்சிவனுமையொன்றாய்வினை வுறும்பொருளெனநிகழ்த்தி. 68

வேறு

பூதமார்த்தனவேதங்களார்த்தனபூத,
நாதராத்தனநாரணனுமுகனார்த்தார்,
மாதரார்த்தனர்வால்வளையார்த்தனவானோர்,
சாதியார்த்தனர்தருமங்களார்த்தனதழைப்ப. 69

நீதியார்த்தனமுனிவர்களார்த்தனர்நிறைந்த,
கீதமார்த்தனர்திருவோர்கிளையார்த்தார்,
நாதமார்த்தனநதிகளார்த்தனநமையா,
ளாதிநாயகன்மங்கலமார்த்திடுமன்னோ. 70



சோதியக்கினிசாட்சியாய்ச்சுருதியின்வழியே,
நாதநாரணன்காண்பருங்கைலைநாயகன்றன்,
வேதன்மாதவக்கன்னியைமணந்தனனவிந்தை,
யாதிமாதருமங்கலம்பாடினரார்த்தார். 71

சோதியங்கியில்வெண்பொரிதூவினன்சுத்தி,
யாதிநாயகிபாதத்தைப்பம்மிமேல்வைத்தான்,
னோதுகற்பினைத்துதிருந்ததியுங்காணென்று,
றோதிமாதவர்தருந்துதிக்கருள்கைலாயன். 72

வேறு.

எந்தையெந்தாயொடிருந்தரியணையின்மேற்,
சிந்தையாரத்தொழுமங்கலர்சேர்வைசெய்,
துய்ந்திடக்காட்சிதந்துமையொடுமொருபொரு,
ணந்திமால்விடையின்மேனண்ணியேநடவினன். 73

நாரணனுமுகனுமர்கோனுதியா,
யூரணந்தொழுமுழக்காப்பொடுமெழுகிய,
தோரணந்திகழ்திருத்தவத்துறைசூழ்ந்துபோய்க்,
காரணன்கோயிலுளிருந்தனன்கைலையான். 74

வேறு

கைலைநாயகனுமையொடுகருணையோடிருந்தாங்,
கியலுந்தேவரையிருக்கைக்கனுப்பினனென்றும்,
புயலின்மேனியன்போற்றிடப்புதுமணம்புரிந்த,
தயவின்மங்கலம்பார்த்துறைவான்றவத்துறையின். 75

திருவிருந்தாசியற்றுமத்தலத்தினிற்செபிக்கி,
லருமையஞ்செழுத்தன்பொடுசித்தியாமுத்தத்,
துருவுகொண்டுயிரளித்திடுஞ்சிவகங்கையோங்கிப்,
பெரியதாஞ்சிவபுட்கரணிப்பெயர்பெறுமால். 76

உத்தமச்சிவகங்கையிலோர்திலம்படிந்தா,
சித்திபஞ்செழுத்தெட்டெனூருச்செபித்துச்,
சத்தமாமுனிக்கிறைதனையுமைடன்றாழ்ந்தே,
பத்தலத்தொருநாளமர்ந்தோர்முத்தியடைவார். 77

## வேறு

அங்கண்மாஞாலப்பரப்பினிற்பிறந்தோரவ்வுடலகலுதல் முன்னந்,திங்களங்கண்ணிச்சிவனர்சிருக்குந்திருத்தவத்துறையினிலொருநாட், டங்கிடக்காணக்கிட்டுமேலுலகந்தன்னிழற்கவிகையுட்படுத்துத்,தங்கமாமரசுற்றளப்பில்நாளிருந்துகயம்பிரகாசமுமடைவ்வார். 78

அருட்டவத்துறையையன்னியதேசமமர்ந்துளோரடைய வெண்ணினரேற், குருட்டிணைவிழியேற்றெரிவிழியாவர்கூறுவதுறுச்செவிகேட்கு, முருட்டிலமுடவாகடையினைமுயல்வர்முழுவினைநோயெலாமுடியுந், தெருட்சிவகங்கைவந்துதோய்ந்தனரேற்றீர்ந்திவைசிவன்பதம்பெறுவார். 79

பெற்றதாய்தந்தைபிள்ளைகோமகளோர்பேதுறவாதனை புரிந்தோர், ப்ற்றருட்குருவைக்கு[illegible]மறுனைத்தோர்பதகராய்மது பருகினர்கள்,சுற்றனூனுரைக்குங்கருத்திறைப்பாவங்கருத்திறைகாயத்தால்வாக்கா, லாற்றிடச்செய்தோர்சிவகங்கையாடிலோடிடுமுண்மையீதுண்மை. 80

வந்தியரெல்லாமைந்தரைப்பெறுவர்கன்னியர்மங்கலமுறுவர், புந்திகொள்பிரமாரியர்வித்தையும்பூவையர்மணத்தையும் பெறுவா, ரந்தமில்வறியோரளப்பிலாச்செல்வமடைகுவர்சிவகங்கையாடிச், சந்திரமௌலிதாள்பணிந்தொருநாட்டவத்துறை தங்கியங்கிருந்தால். 81

சித்திரைத்திங்கள்சித்திரைநாளிற்சிவகங்கைத்தீர்த்தமாடினரேற், பத்துடனுறுதானத்தின்பலனும்பண்டைத்துப்புத்திரரையும்பயப்பா, ரத்தனைப்பன்னூட்சேர்வைசெய்தனரெனத்தவாண்டினிற்பலமடைவார்,புத்திரன்டாம்பவமெலாம்போக்கும்புண்ணியநண்ணிடுமன்றே. 82

தெண்டிரையமுந்துறவவ்ஸிலியிறைக்குஞ்சிவகங்கைத்தெரிசனம்பெற்றார், பண்டுபகர்ந்தனன்றிபைக்கொன்றபாவராசிகள் பாந்தேகு, மண்டர்வாழ்வர்க்கமடைகுவர்பிண்டமளித்திடிற் கயையினிற்கோடி, பிண்டமார்சிரார்த்தப்பலன்பெறுகுவர்கள் பிதுர்க்களுஞ்சுவர்க்கமேவுவரால். 83



பிறந்தநாட்காலைச்சிவகங்கையாடிப்பெருந்திருவொடுதவத்துறையி, லுறைந்தநாயகனைவலஞ்செய்துவணங்கினுறுபலனென்றனந்தமதாஞ், சிறந்தவாவணிகார்த்திகையின்ஞாயிற்றின்றினந்தொறுஞ்சிவகங்கைதோழுதே, யறந்திறம்பாமலாடினரன்றேயவரவரவாவினதடைவார். 84

குடங்கையினுமுழுந்துபதிந்தமாத்திரமச்சிவகங்கைநீரையுட்கொண்டால், விடங்கலொத்தெழுந்தவினையறும்வியாதிவேரறுமமராநும்வியப்பர், தடங்கொளுங்கமலத்தவத்துறைத்தலத்திற் தரணிதானங்கொடுத்தனரேற், படங்கொளுந்தம்பத்தரம்பையரோடுபெரியபொன்னுலகில்வீற்றிருப்பார். 85

நித்தியமழல்வேட்டத்தலத்திருப்பினிலமிசையச்சுவமேதஞ், சத்திரயாகப்பலனெலாமடைவர்தவத்துறைதவத்துறையெனினும், புத்திகள்வித்தைபுத்திரர்செல்வம்பூமிலாபங்கள்வாகனங்கள்,சித்திகள்ஞானஞ்சிவனடிக்கன்புந்திருவருளால்வருந்திணணம். 86

தவத்துறைத்தலத்திற்றங்கினோர்செயலுந்தவமெனச்சாற்றிடவேண்டுஞ், சிவத்துறைவோர்கள்செயலெலாந்தம்முட்சிவன்செயலாவதேபோலப், பவத்துறையகற்றப்பதியினிலொழுக்கம்பணிவுறுமன்பும்பற்றினரே, லவத்துறையவன்றன்குலத்தினுமுளவோவவர்நினைத்தவர்கட்குமிலையால். 87

திருத்தவத்துறையைச்சேர்ந்தவர்தம்மைச்சேர்ந்திடாதீவினைநோய்கள், திருத்தவத்துறையைச்சேர்ந்தவர்தமக்குச்சேர்ந்திடுஞ்செல்வமுந்திருவுஞ், திருத்தவத்துறையைச்சேர்ந்தவர்தமக்குச்சித்திகள்புத்திகள்சேருந், திருத்தவத்துறையைச்சேர்ந்தவரெல்லாஞ்சேர்குவரெங்குமாஞ்சிவனை. 88

## வேறு

செல்வராகுவர்சிவகங்கைசிவகங்கையென்றாற்,
கல்விசேர்குவர்கண்களாற்சிவகங்கைகண்டால்,
கொல்வியாதிபோஞ்சிவகங்கையாடிமேற்கொண்டால்,
வெல்வரியாவையுஞ்சிவகங்கைவெள்ளநீருண்டால். 89

வேறு

திருந்துசீர்கற்புப்பெருந்திருவாட்டிச்சிவபெருமான்றிரும
ணச்சீ, ரிருந்தெவர்சொலினுமவ்விடைவிடைமேலிறைவனுமிறை
வியுமுன்பாய், வருந்திருமாலுமயனொடுதேவர்மாமுனிவோருயர்
வான்மேற், பொருந்திவந்திருப்பர்கேட்பவர்தமக்குப்புத்தியுணி
னைந்தவைபொருந்தும். 90

திருவளர்செல்வத்திருமணக்கதையைச்செப்புவோரன்பொ
டுங்கேட்போ, ரொருபரம்பொருளுக்கடியராங்கவரேயுண்மையி
னுண்மையினுண்மை, மருவுபுத்திரர்கண்மனைவிமித்திரர்கள்வளத்
தொடுமனந்தநாள்வாழ்ந்து, பொருவருங்கைலைப்புராணர்செங்க
மலப்பூவடிநீழல்வீற்றிருப்பார். 91

என்றிவையாவுமியல்பொடுமிசைத்தானிறைவனைநிறைபரம்
பொருளை, மன்றினிலாடுமாசிலாமணியைமலைமகள்மணாளனைவ
ணங்கி, யொன்றியவுளத்தோடவணிசைபாடியும்பருமிம்பருமுவ
க்கு, நன்றிகொள்தேவவிருடிகட்கரசனுயர்நாரதமுனிவன். 92

செவிப்புலன்குளிரவகமலர்ந்தன்பாற்செப்பியசிவகதை
யெல்லா, முவப்பொடுங்கேட்டசவுனகர்முதலோருய்ந்தனமுய்ந்
தனமென்றே, தவப்பெருமுனிக்குப்பூசனையாற்றித்தாழ்ந்துசூழ்
ந்திறைஞ்சியேபோற்றச், சிவத்துளமுனிவர்சிகாமணிமகிழ்ந்து
திருவருட்செயலொடுஞ்சென்றான். 93

கருணைமாமுனிவன்சத்தியவுலகிற்கமலமீதயன்சபைக்கேக
வருணனிசாக்குந்திருத்தவத்துறைமேலாசைகொண்டருமறை
முனிவோ, ரொருபெருப்பொருளையகத்தினுளிருத்தியுவந்துவீ
ற்றிருந்தனரிருப்ப, மருவினன்கைலைவாதனைப்போற்றுஞ்சூதமா
முனிவன் மாதவர் கோன். 94

* கல்லலதுடுக்கைகொக்கரைதக்கைகாளங்காகுளிதுடிகாடி,
சல்லரிதாளங்குடமுழாப்பேரிதண்ணுமைதாதுமிதடாரி,
மல்லரிவயிர்களளிகுழல்மொந்தைமகரயாள்முருடுகளாதி,
பல்லியமனந்தம்பாரிடமண்டம்பனிப்புறமுழக்கிமுன்பரவ. 55

(ஆறுவது திருக்கல்யாணவத்தியாயம் முற்றிற்று.)

ஆகச்செய்யுள். 343.

* சில பிரதியில் 55-வது செய்யுளாக உள்ளது.



## ஏழாவது பிரமகைவர்த்தத்தில் விஷ்ணு பூசித்தவத்தியாயம்.

திருந்துருவாதிசந்திரமவுலிசேவடிக்கீகாவுருவன்பும், வருந்
திருவாழ்வும்புகழும்வாலறிவும்வரிசையுமதிகமாந்தயவுந், தருந்
திருவாளன்றவத்துறைப்பெருமான்சங்கரன்சிவகங்கைத்தடத்
தோன், பெருந்திருவாளன்பெருந்திருவாட்டிபெறுந்திருவாளன்
பேரருளே. 1

வண்டுழாய்த்திகிரிமாயனேமுதலாம்வானவர்வடபுலத்தி
ருப்ப, வண்டர்நாயகனையுளங்கொண்டுமலையத்தமர்ந்துதாரணி
சமமாக்கி, யுண்டுநீர்க்கடலையொடுக்கிநீள்விந்தமோரெழுத்துண்
மைசண்முகன்பாற், கொண்டுதண்டமிழின்குரவனுஞ்சைவக்
குடமுனியடிகள்கும்பிடுவாம். 2

சூதமாமுனிவன்போதலும்நேமிசூழ்வனச்சவுனகாதியர்
போய்ப், பாததாமரையின்மீதுரப்பணிந்துபணிமணியாசனத்தி
ருத்திப், போதுகாநெறியின்வேதனையகலப்புதியநீர்மலரினாற்
பூசித், தாதியாபனுகியமர்திருத்தலங்களருளெனவருந்தவனு
ரைப்பான். 3

சேட்டிளம்பருதித்தோட்டலர்கமலச்சேவடிசிறியனேற்க
ளித்த, நாட்டமூன்றழகுத்தோட்டுணைநான்காநாயகனந்தியெம்
பெருமான், றாட்டுணைக்கமலத்தோட்டிணர்தூவிச்சனக்குமாரன்
பணிந்தேத்திப், பூட்டுவல்வினையின்மூட்டறக்கைலைப்புண்ணிய
ன்றிறம்புகல்கென்றான். 4

மாலயன்றேவர்வந்தனைபுரியுமலரடிநந்திவானவனே, மேல
வனுறையுந்தலமெலாமுன்னம்விளம்பினையின்னும்வேட்டன
மால், ஞாலமீதியாருமுய்ந்திடும்பொருட்டுநான்மறைவசிட்ட
னெத்தலத்தால், சீலமாமுனிவர்க்கதிகனாயினனெத்தலநினைத்
திடிற்சித்திசேரும். 5

மாயிருஞாலத்தென்னகற்கேனும்வதிந்தந்நகரினைநினைக்
கிற், பாயிருட்படலப்பாவம்விட்டகலும்பகருதியன்னகரடியேற்,
கேயுநின்னருளாலெனுஞ்சனற்குமாரற்கிகம்பரமருளிடுங்கரு
ணை, யாயிரங்கோடிஞாயிறொத்தவிருமருளுருநந்தியாருரைப்பார்; 6

பொன்னினற்கடுக்கைமுன்னவனுறையும்பொற்பதியிற்பு
கழ்புகல்வ, தன்னவனருளைமன்னினற்கன்றியறையொணுதன்பு
டையவனீ, தன்னிகரில்லான்பொன்னகற்பெருமைசாற்றுகேன்
கேட்டியென்றுரைத்தான், அன்னவன்வியாதற்கறைந்தனனவ
னுமன்பினேற்குரைத்ததென்றறைவான். 7

பூதலநடுப்பொற்பூதரமதன்றென்பூமியிற்பொலிவுறுநாப்ப,
ணூர்தருபொன்னிமாநதிவடபாலடர்வயிரவிவனமறையின்,பாதி
யோசனையாங்காவிரிநதிக்கப்பதியதுபரப்பொருட்பதியா, நீதி
யார்புவனமூன்றுமேத்தெடுப்பரிலவியகீர்த்திபெற்றுளதால். 8

பூம்பொழில்பொதிந்தமாந்துறைநகர்க்குப்பூருவதிசையி
னிற்குரோசத், தாம்பதிகனிந்தமாம்பழத்தேறலம்புயத்தடநிறை
ந்தொழுகு, நாம்புகழ்ந்தவயிரவிவனத்துநாலுவேதத்தொடு
மமரர், ஆம்பலதருவும்பறவையுமாகியமர்ந்துமத்தலத்தையாசரி
ப்பார். 9

அன்னகாத்துப்படைப்புழிவேதனணிமகவோமகுண்டத்
திற், றன்னையேதுடங்கிவைங்கான்பூசைதானதுமியற்றியாங்க
வன்றன், பன்னிதக்பெயராற்காவிரிநதியும்பரந்துவந்தலைகள்
வீசிடவே, மன்னுமான்மகன்றன்சிவகங்கைபடிந்துவான்சினகப
த்துவந்தனனுல். 10

வந்திடுமறையோன்சந்திரமவுலிவானனுந்தேசொளிவிடங்க,
னெந்தையெந்தாயாம் பெருந்திருமடந்தையிணையடிபூசித்தங்கி
றைஞ்சு, பந்தணன்றனக்குமருளதுப்ரிந்துன்னபசிட்டேயெனவ
வனு, மிந்தநற்றலமுஞ்சேர்வையும்பிரியாதிருந்திடவேண்டு
மென்றிரந்தான். 11

நான்முகக்கடவுளிவ்வுரைபுகலநதனும்நலதெனநவின்றுங்,
கானநற்றவஞ்செய்திருக்குபாரணையன்புடனியாவரேயெனி
னும், வானவர்பிதுர்க்கள்திதியின்மங்கலத்தின்வந்தடிபணிந்துபூ
சிப்போ, ரீனமில்செல்வந்தனிநெடுநாள்வாழ்ந்திறைபவனகைலை
சென்றிருப்பார். 12



அழுசொளிவிரிக்குபாலையவடபாலரியகாயத்திரிநதியாம்,
பழமறைமதியம்வெண்மணல்வடிவாய்ப்பரவிடவணுதியாஞ்சுயம்
புக், குழகனையுபயநதிநடுவெயர்ந்தகோயில்நாயகன்றனைப்போற்றி,
முழுதுளங்களிப்பான்சுதமெழரிநேமிமுகுந்தன்வந்திதிட
முயன்றுன். 13

வட்டவாய்த்திகிரிவாயினுற்றென்பால்வாவியொன்றமைத்
துமாதேவர்க், கிட்டமாம்புனிதநீரினுலாட்டியெழின்மலையாசலச்
சாந்த, மட்டுலாம்பளிதக்குங்குமக்கலவைவளப்பெறச்சாத்தி
மாணிக்கக், கட்டுலாம்பணிகள்பொற்றுகிற்றொடையல்கட்டழ
குறவணிந்தனனுல் 14

மெல்லிதழவிழ்க்குமல்லிகைமுல்லைவிளரிதட்சாதிசண்பகப்
பூங், குல்லைவெண்குருந்தங்குவளைகோகனகங்குளிர்வகுளாதி
பன்மலராற், சொல்லரிதாயவஞ்செழுத்ததனுற்சோதியையருச்
சனைபுரிந்தே, நல்லபானீயத்தருக்கியமுதலாய்நல்கினுன்மறை
யெடுத்தோதி, 15

முல்லைவாலரும்புவிரும்புமெல்லடிசில்மொய்த்திடுங்கருணை
பால்தேனு, நல்லகோநறுநெய்பாயசம்பூபம்நளிர்புனலொடுநிவே
தித்துத், துல்லியமானதுவரடைக்காய்வெண்சுருளொடுசுந்தாற்
குரவிப்,பல்விதமாயதூபதீபங்கள்பரமனுக்கெதிர்பணிமாறி. 16

பல்லியமுழங்கநிருத்தகீதங்கள்பயின்றிடச்சிவனெதிர்ப
ணிந்தே, யெல்லியுப்பகலுநாண்மலரெடுத்தாங்கிவ்வணம்பூச
னையியற்றி,பல்லிபங்கமலத்தயன்முதற்றேவராகரவெனப்புடை
யார்ப்ப, வல்லியிலேகுமருங்குசேர்மகளீர்வந்திசைதந்தெதிர்ம
லைய. 17

ஐங்கரக்கடவுளறுமுகப்பெருமானெழுபிறப்பகற்றருணந்தி,
துங்கமெய்க்கணங்கள் சூழ்ந்துநின்றேற்றத்துந்துமியந்தரந்தொ
னிப்பக், கங்கைகாவிரியுங்கவரிகளிரட்டக்கற்பகப்பூமழைநாப்ப
ண், டிங்களஞ்சடையோனுமையொடுமெழுந்தான்செஞ்சொளி
லிங்கநாயகத்தின். 18

அருளுமைபாகத்தொருபெருங்கடவுளடல்விடைமீது
தோன்றுதலு, மிருவிழிக்கமலத்தெழுகணீர்ததும்பவிறையவசய
சயவென்ன, வுருகுநெஞ்சகத்தோடுரைதடுமாறவோங்குமானந்
தசாகரத்தைப், பருகினனெழுந்தான்பணிந்துடன்சூழ்ந்துபாடி
னாடினன்பரவி. 19

வேறு

ஈசமகேசுரவேகநமோநம
பாசவிமோசனபாதநமோநம
பூசுரவேதபுராணநமோநம,
தேசுவிடங்கசிவாயநமோநம. 20

வேறு

அரிணமுமழுவும்வரதமோடபயமாங்கரகமலனேசரணம்,
கருணைமாநிதியேகைலைநாயகனேகண்ணுதற்கடவுளேசரணங்,
தருணவான்மதியநுதலியோர்பாகச்சச்சிதானந்தனேசரணங்,
திரணமுமசையாதுணையலாற்றேசுவிடங்கனேசிவசிவசரணம். 21

ஏற்றெதிர்மலையுமாற்றல்சால்செங்கணேற்றுயர்த்துவசனே
போற்றி, கூற்றினைக்கடிந்துகுமாரனுக்கருளுங்கோற்றொடிபாக
னேபோற்றி, நீற்றணிநிலவுநாற்றிசைபரப்புநிறையருளுருவனே
போற்றி, தேற்றிடுமென்பிற்றோற்றமுன்றேசுவிடங்கனேசெயசெ
யபோற்றி. 22

எனத்துதித்திறைஞ்சவுமையொருபாகத்திறையவன்கரு
ணையானிரங்கி, யனைத்தையுங்காக்கும்வரமளித்தருளியளவில்
செல்வங்களுமுதவித், தினைத்துணையேனுங்கெடாதவன்புளந்தா
ன்சீர்பெறலருளியவ்விலிங்கத், தெனைத்தையுமுடையோனுமை
யொடுமிருந்தானியாவற்குநினைந்தவையீந்தே. 23

அவிரொளிச்சோதியவ்விலிங்கத்திலடைந்திடுமந்திரமியா
வும், பவமறுத்துயர்ந்தமூலமாமிலிங்கம்படைத்திடுமண்டங்க
ளெல்லாந், தவமறுஞான்றுமழிவிலாதுறையுஞ்சச்சிதானந்தமா
மிலிங்க, முவமிலாதுறையுமடைந்தவர்க்கருளுமுன்மையீதுண்
மையீதாமால். 24



செய்யசெங்கமலைக்குறையுளாஞ்செல்வத்திருத்தவத்துறை
யிலோர்மிடம், வைகிடவதனிற்பாதியேயெனினும்வதிந்தானஞ்
செழுந்தோதி, யனையர்கண்டுவப்பச்சித்திவந்தடையுமையமில்சத்
தியமாமால், தையுமுள்ளத்துமுனிவர்காளென்றுரைதனைபொரு
ளெனுஞ்சூதன். 25

திரைக்கடல்சூழ்ந்தநிலப்பரப்பதனிற்செனனங்களனேகங்
கடோறு, நிரைத்தமுந்தருமங்கணக்கிலபுரிந்தோர்க்கல்லதுநினை
ப்பினுங்கருதா, தரைக்கொருதிலதமாந்தவத்துறையிற்சனித்தி
டவிருந்திடவிறக்கச், சுரற்குறுந்தருமநரர்க்குறுமவற்றைத்தரி
சிலார்தமக்குறுமன்றே. 26

இறந்திடத்தனத்தோடிருந்திடச்செய்வோரிருவர்தென்
பாலுறுந்தருமன், சிறந்திடுகுபேரனிருவருஞ்செல்வத்திருத்தவ
த்துறைச்சிவபெருமா, னிறந்திகழ்தெய்வச்சரணயர்ச்சித்துநித
நிகழாவதிகாரத், துறைந்தனரிந்தத்தலத்துமெய்ப்பெருமையுரை
த்திடலளப்பினேளாங்கும். 27

வயிரவிவனத்திலோரிமைப்போதுவதிபவர்முத்தியில்வதி
வார், சயமுகாசுரனையமார்முன்றலைப்பக்கண்ணுதலத்தலத்தட
ர்த்தான், செயல்புரிபதனாற்றிருத்தவத்துறையிற்றேவருமுனி
வருமிடைந்து, யயலவனறனைவயிரவிசெயங்கொண்டிடவைப
னத்தலத்தமர்வான். 28

திக்கெல்லாம்போற்றுந்திருத்தவத்துறையிற்சிவகங்கைசூரி
யதீர்த்த, மிக்கதோரயன்மால்விண்ணவர்முனிவர்விரைமலர்தூவி
நின்றேத்த, அக்கமாலிகையான்பெருந்திருவோடங்கமர்திரு
வோலக்கத்தனுங்கிப், புக்கிருவிழியாற்கண்டிடப்பெறுவோர்புவி
யினிற்பிறந்தபேறடைந்தோர். 29

மாற்றலர்செகுக்கவலதொருகருமம்வரித்திரும்பொருள்வ
ரைந்திட்டவ், வாற்றிடைநடப்போரம்மையோடமர்ந்தவப்பனைச்
சேவைசெய்தகன்று, லேற்றினிலிவர்ந்தேயிறைவியோடிறைவ
னேகுவனவரொடுமென்றாற், றேற்றுவந்தேசுவிடங்கனேயல்லா
ற்றிருவருள்சார்ந்துளார்யாரே. 30

மற்றயதலத்திலளவிலாத்தருமம்வயிரவிவனத்திலோரிமை
ப்பிற், பெற்றிடுவார்கள்பேசினுமுண்மைபெரியமாமேருவினுயர
ஞ், சற்றணுவனையதபஞ்செபந்தருமந்தவத்துறையினிற்றவத்தி
றைபைச், சொற்றினகாணுங்கேட்டிடுநீருந்துதிக்கமுன்செய்த
தெத்தவமே. 31

திருநெடுமால்முன்பூசனைபுரிந்துதிறம்பெறுமிப்பெருங்க
தையை, யொருபொழுதேனுங்கேட்டிடப்பெற்றோருடையவன்
றிருவடிக்கன்புந், திருவவள்சிறப்புஞ்சந்ததிமனையுந்தழைத்தி
டத்தரணியில்வாழ்வார், தெருளமருடையதவத்துறைநாதன்
றிருவருளாற்கதிசேர்வார். 32

(ஏழாவது விஷ்ணுபூசித்த வத்தியாயம் முற்றிற்று)

ஆகச்செய்யுள் 375.

---

## எட்டாவது வசிஷ்டர்பூசித்து மகிமையுற்றவத்தியாயம்.

இன்னவாசகமிசைத்தலுஞ்சவுனகரிறைஞ்சி,
மன்னுமத்தலந்தனின்முனம்வசிட்டர்வந்தித்துந்,
தன்னிகர்ப்பெருமகத்துவமடைந்ததன்மையினு,
லென்னகாரணமதுவெனச்சூதனங்கிசைப்பான். 1

வேறு

தவத்துறைவசிட்டன்றன்னிகர்வாமதேவனுஞானமாமுனி
போற், சிவத்துவமடைந்தானக்கதைகேட்போர்செனனமே
செனனமென்றறைவா, னுவப்பொடுமுபர்ந்தவந்தமாகற்பத்
தொப்பிலாச்சத்தியவுலகிற், பவத்துறையகற்றப்பதுமபீடிகை
யிற்படைப்பவனரசுவீற்றிருந்தான். 2

அருமறையிமையோர்நிறையுமச்சபையிலருவொருவடிவெ
டுத்தனையான், றிருவருள்கொழிக்குந்திருக்கடைக்கண்ணான்
செந்துகிரனையசெஞ்சடையான், றருமமிவ்வுருவமெனமுழுநீறு
தரித்துமேற்புண்டரஞ்சாத்தி, மருமலிமிதழிவானவர்போற்றும்
வாமதேவத்தவன்சார்ந்தான். 3



ஆங்கதுகாலையருப்பெருங்கற்பாளருந்ததிபொருந்துட்
கொழுனன், றங்குறுநீற்றுப்புண்டரந்தழைப்பச்சார்ந்தனனச்
சபையுள்ளோர், வீந்துபோரன்போடெதிர்ந்தனர்பணிந்தார்வி
யந்தனர்புகழ்ந்தனர்மகிழ்ந்தார், பாங்கினிலவர்கட்கவரவர்செய்
யும்பண்டையின்முறைப்படிபரிந்தே. 4

வேறு

ஆரணம்பரவுங்காணப்பிரமாவாசனமிருவர்க்குமளிப்பச்,
சீரொடுமிருந்தாரவ்விடைநாதத்திவவியாழ்நாரதமுனிவன், பூர
ணகானவிஞ்சைவல்லவர்கள்புடைவரநடைகொடுபோந்து, தார
ணிகமலத்தந்தையைவணங்கிச்சதுர்மறைவிதிமுறைபுகன்றே.

திருவருள்வாமதேவன்பாகத்திற்சேர்ந்தினிதிருந்தனன்ற
ந்தை, யருண்முகநோக்கினிருந்தனையோவெனவையமின்னரு
ளதனுல், மருவியநட்பாவாழ்ந்தனனிங்கேவருக்கும்விண்ணப்ப
மொன்றுளவில், விருவருநுப்பவாசனஞ்சமமாயிந்நனையிவைத்
காதெந்தாய். 6

அருந்தவத்தாலுமம்புச்சடையெம்மையனுக்கன்புசெய
ஞானப், பெருந்திறத்தாலுமந்துடனந்தக்கரணமுப்பிரிவுற
தடக்கி, பிருந்தனைத்தினையுந்தானுளைகண்டவ்விறையன்றி
யொன்றையுங்காணுப், பெருந்திறல்வாமதேவனுக்கிணையாய்ப்
பேசிடக்கூசமெய்ப்பெரும. 7

அத்துருவாசற்கிணையிலையனோடருந்தவவாமதேவனையு,
மொத்திடுமென்னவுரைக்கலாம்வேதவொழுக்கில்வேதாந்தவுண்
மையினாற், பத்தியிற்பரனுற்பாதபங்கயத்திற்பகரொணுவன்பி
னில்வசிட்டற், கித்திறமுளவோவிருவருமிணையன்றிவன்பிறப்
பினையுமோர்ந்திலையே. 8

பவளமால்வரையின்வீழெனத்துலங்கும்படர்சடைவடிவெ
ளாந்திகழத், தவளவெண்ணீற்றுவாமதேவனுக்குச்சமத்துவம்
வசிட்டற்குச்சாற்றற், கிவளவென்றுதகாலமாதவங்களியற்றிட
வேண்டுமிவ்வணக்கீழ்ந், துவளுநல்வசிட்டமுனியிருந்திட
லாஞ்சொல்லிடியெனமுனிசொன்னன். 9

நாரதமுனிவனவின்றிடுமனைத்துநன்றெனமுனிவனுட்
கொண்டே, நாரதம்பிரங்களுரைத்தகையெல்லாஞ்சரதமேசகல
சம்மதமீ, நாரணவுரையால்மாதவருண்மையறிந்தனரப்புவியிடத்
தப், பாரதவருடத்தபலற்குப்பூசைபரிந்தவற்கிணை யெனப்
படர்வேன். 10

அருளெனக்கமலத்தந்தணனுள்ளத்தனுமதிபெற்றகிலத்
திற், பொருளுருமேருப்புடையிருந்துபொற்புராணமேயிதைய
புண்டரிகத், திருள்கெடக்கண்டங்கிருந்தனிறைவனெத்தலத்
தருளுமென்றெண்ணத், தெருளுறவான்றெழுந்ததோர்வாக்
குத்திருத்தவத்துறையில்வாவென்றே. 11

எக்குலப்பிறந்தவெச்சுணத்தோரும்மிருக்கதிதந்திடுமிரவி,
புக்கதாரணிக்கண்முத்தலமுளவாம்புகழிடில்நாயகமாகுஞ்,
செக்கர்மேனியனைமுழுமுனிவோருஞ்செயிராப்பூசைசெய்திற
த்தால், மிக்கமோட்சந்தவிருடிகணுதமெல்லியலோடுவீற்றி
ருப்பான். 12

அளிமுரல்கமலச்சூரியத்தடத்துக்கடுத்தகீழ்த்திசையன்பி
னகரோன், றளதிற்காயத்ரியுற்பத்தியோதியவேதமுமு
தித்து, தெளியருக்கருளுமேற்றொந்துறையிலரவிநன்மருத்துக்
களேத்த, நளிர்புனற்பொன்னிவிரளிவனத்தில்நாரணன்பூசனை
புரிந்தான். 13

சைவநாயகனைத்தவத்துறைச்சுயம்புத்தானுமைபாணலங்
கடிந்த, தெய்வநாயகனைப்பெருந்திருவாட்டிசெல்வனைத்தே
சொளிவிடங்க, மெய்கொணுகனையழைத்துவாழ்வித்தவிருந்
திருவாளனையிடற்று, மைகெணுயகனைச்சாமகானத்தாலேழத்
தினன்முழுத்தபேரன்பால். 14

அருள்கொடுன்னடிமைமாக்கிடவேண்டுப்பனேயென்றடி
பணிந்து, திருவருள்பெற்றும்மற்றிசையேகித்திகழுமாச்சிரய
மொன்றமைத்தே, யிருள்கெடவங்கண்பூசையுமியற்றியிமைய
வர்முனிவரர்வியப்பத், தருணவங்கியுநாற்றிசையெழத்தபனத்
தழலொடைந்தமுற்றவஞ்சார்ந்தான். 15



வேனில்பேய்மாரிமேவியகாலம் வெளியினும்பனிமிகுகா
லங், கூனல்வால்வளைகொணீரினுநீரையே கொள்வதுகால்சருகற
விம், மானிலம்வியப்பவருடமூன்றரியமாதவஞ்செய்தனன்வனத்
திற், றேனலர்கொடுமுக்காலமுந்தெரிவைபாகனைப்பூசனை
செய்தே. 16

உழுவலன்போடுபோற்றலுமுவந்தெம்முடையவன்மழவி
டைமீதே,யழகெழுமூன்றுகண்களும்புலித்தோலாடையுமம்மை
யோர்பாலு, மழுவுமான்வரதவபயம்செங்கரமுமதியணிமணிமுடி
வனப்போ, டெழுகதிரனந்தரெனவெளிநின்றனிமையவர்மலர்.
மழைபொழிந்தார். 17

கண்டனன்வசிட்டன்களிகொளுமுளத்தன்கண்கணீர்தது
ம்பிடவெதிர்வீழ்ந், தண்டநாயகனையழைத்துவாழ்வித்தவழகி
யதேசொளிவிடங்கா, கொண்டனனினதுதிருவடிசிரமேற்குறை
விலாச்சமமருள்கென்னச், சண்டனைவெகுண்டதவத்துறைநா
தன்றந்தனங்குறைதவிரென்றான். 18

எக்குறையுடையோரெவ்வினையுடையோராயினுமித்தலத்
திருந்து, மிக்கழுவருடங்கங்கைநீராடில்வேண்டியதருளுநஞ்சா
ணஞ், சிக்கெலாம்போகச்சேர்வைசெய்தனரேற்றீர்ந்திடுங்குறை
பலாந்திண்ணம், மக்குநீவயிராக்கியதவத்தாலும்வயிரவாச்சி
ரமமிப்புவியே. 19

இவ்வரமெல்லாம்வசிட்டனுக்கருளியிளம்பிறைவனைந்தவ
னிமைபக், கொவ்வைவாயுமையோடவ்விடைமறைந்தகொள்கை
காட்டினன்குலமுனியாய்ச், செவ்வியபெருமையடைந்தனன்
வசிட்டன்றிகழுநான்குகத்துக்குந்திருப்பேர், வவ்வியவயிராக்
கியபதிசதனூர்மால்புரமுத்திமாநகரம். 20

அலர்புவித்தலைமைத்தவத்துறைச்சுயம்பாமழகனையாயிர
ந்தோட்டு, மலர்தலையுந்திமாயவரனேகர்வந்தனைபுரிந்தனரன்றி,
தலைமைபாங்கஞ்சமீதுறைவோர்கள்கணக்கிலார்வந்தனைபுரிந்
தார், தொலைதலையடையாவெப்பிரானையத்துஞ்சுந்தரத்தவத்து
றைத்தொல்லூர். 21

வேறு.

வெண்டிரைக்கருங்கடல்வீங்கும்வெள்ளநீ
ருண்டிடவருகினுமுபாதியொன்றிலை
யண்டர்கோன்பயமகற்றருள்தவத்துறை
கண்டவரிருந்தவர்தமையுங்காக்குமால். 22

பிரளையங்காப்பவரென்னும்பேருமொன்
றுளதுதென்கைலையற்குலப்பில்பூசனை
வரமுறுமார்க்கண்டர்வானநாட்டினர்
திரமுறச்செய்தனர்தேலிங்கத்தே. 23

புராதனலிங்கத்தைப்பொருந்திக்கண்டிடத்
தராதலந்தாங்கலுந்தவமும்புத்தியுஞ்
சுராதிபனருளிடுஞ்சொலிற்றவத்துறைக்
கராசலமுரித்தவன்கைலைபோலுமால் 24

எக்காலத்தாலுமெச்சாதியாலுமிமையோரேத்த, வக்காலத்தாலமுதாக்கியருள்சுரந்ததவத்துறையுளானை, மைக்காலன்றனையுதைத்துமார்க்கண்டற்கருள்வானை வணங்கினோரேல், முக்காலமுக்குணங்கள்மும்மலங்கள்மம்மர்கெடமுத்திசேர்வார்.

காக்குமவர்க்கருள்புரிந்தமேற்குமுகலிங்கத்தைதக்கண்களார, நோக்குமவர்கோடிசென்மத்தாக்கியபாதகமகலுறுவன்றேமுண்மை, தேக்கமுதமனையவிந்தமாக்கதையைக்கேட்பவற்குந்தீரும்பாவ, மாக்கமுறுமன்புமிகுநோக்கமுறுஞ்சிவகதியுமடைகுவாரே. 26

(எட்டாவது வசிட்டர் பூசித்த வத்தியாயமுற்றும்)
ஆகச்செய்யுள் 401.

---



## ஒன்பதாவது முரண்டகன் சாபமடைந்த வத்தியாயம்.

என்றுசூதவிருடியுரைத்தனு
அன்றுகேட்டமுனிவரகமகிழ்ந்
தொன்றுமன்பொடுவமின்முனிவரர்
துன்றுமோர்கதைகூறெனச்சொல்லுவார். 1

வேறு

ஆதிநாளினிலானதோர்கதையொன்றறைவன்
பாதகம்பலசெய்யினுங்கேட்டிடிற்பாலும்
வேதநூல்புகலாயுளுமேவிடுங்கேட்போர்க்
கோதுவோர்கட்குமென்றனன்சூதனுங்குரைப்பான். 2

காருலாவியதண்டலைகளிமயிலாடும்
பாரியாத்திரதேயத்தினருமறைபயிற்றுஞ்
சீரினுற்பொலியந்தணன்முரண்டகன்சிறப்பாய்த்,
தேரும்வேதநூற்பிரமசாரியன்குலதிலகன் 3

அறம்புகன்றநூல்பயிற்றிடுமிரேதிகன்னருளின்
றிறம்பயின்றிடுங்குரவனச்சிரமத்திற்சேர்ந்தே
புறம்பயின்றிடுமாடல்விட்டோதுவான்பொருந்தி,
மறம்பயின்றிடாமனத்தொடுவழிபட்டுவாழ்நாள். 4

கலைவிளங்கியகருணையினிரேதிகன்றன்னை
யலைநிரம்பியகடற்கிறையாகத்துக்கழைப்ப
நிலைமைதங்கியமுரண்டகநீயிவணிருந்தே
நலமையாச்சிரமத்தினைநடாத்தெனநடந்தான். 5

ஆழ்கடற்கிறையிரேதிகற்கருக்கியமுதலாந்,
தாழ்விலாதளித்துபசரித்திடவுறைந்தங்கண்
வேழ்வியாற்றிறனிதுநிற்கமுரண்டகன்மேவுந்
தாழ்விலாச்சிரமத்தினிற்கண்ணுவன்சார்ந்தான். 6

அலரியுச்சியினடைந்திடவடைந்தனனதிதி
நிலவுநீற்றினன்கண்ணுதற்கன்பினனோராக்
குலனுதித்திடுமுரண்டகன்முன்னையூட்குறையால்
வலமையால்வழிபட்டிலன்கண்ணுவன்மதித்தே. 7

உச்சிக்காலையிலதிதிவந்தானெனினுரவோர்
இச்சித்தெக்குலத்தெக்குணனாயினுமிறையென்
றச்சத்தால்வழிபட்டவர்க்கன்புசெய்திடுவார்
நிச்சத்தாலிவைவேதமுநிகழ்த்தியதாமே. 8

வேதமோதியுமதிதியைவழிபடாவினைக்கோ
ஓதுவித்தவக்குருவினையீங்கனுப்பத்தகுதான்
சாதியில்லவராயினுமதிதியாய்ச்சார்ந்தா
லோதனங்கொடுத்துபசரித்தற்கெனவுணராய். 9

வேறு.

இறையுருவானவதிதியோடப்பியாத்தன்பிச்சகனிலங்கி, நிறையுறுமனைக்கணெய்திடலவற்குநேயமோடளித்திடவுணவு, வறுமைவந்திடிற்றனையில்லவைவழங்கமறுத்திலையென்பவனன்றே, பொறைபதாமிந்தப்புவிக்குமற்றவனைபுடவியிற்பேயெனப் புகல்வாம். 10

சொற்படியியற்றுத்துரிசுடையோனைத்துறந்திடவில்லையேலவனாற், பற்பலபாவம்வந்தவையெல்லாம்பரித்திடவேண்டுமோதலினா, விற்பயில்செகன்னனின்னையீண்டமைத்தவிருடிக்குமருடருமிதனாற், பொற்புடைச்சுருதிமிருதிகளெல்லாம்புகன்றனைபுந்தியோர்ந்திலையால். 11

மனையவள் பாவமகிலனுக் கெய்துமதியில் மாணாக்கனால் வந்த, நினைவரும்பாவங்குரவனையடையுநீள்புவியோர்செய்யும்பாவம், வனைதருங்கழற்காலரசனையடையுமற்றையவ்வரசன்செய் பாவந், தனதுயிரனையபுரோகிதன்றன்னைச்சார்ந்திடுமறிந்தவர் தடுப்பார். 12



வேறு

ஆதலாலிவையறிகிலாய்ப்பேயதாகென்ன
வோதினனுடனேபசாசாய்வனத்துற்றான்
மாதவத்திரேதிகமுனிவந்துதம்மனையை
யேதுகாரணமென்னலுநிகழ்ந்தவையிசைத்தாள். 13

கேட்டுளம்பதைபதைத்தனர்கிரீசனைவணங்கும்
வாட்டமில்தவக்கண்ணுவன்பெருமையார்வகுப்ப
நீட்டுபாவத்தான்முரண்டகன்றீமையதியற்ற
நாட்டிவைத்திடுநம்மையுநண்ணியதாமே, 14

அல்லலாகியவில்லெனுங்கானத்திக்கறலாம்
நல்லனாகியவதிதியென்றேமனுநவிலு
மெல்லையில்லுறவாவதுமதிதியேயவையு
மில்லில்வந்திடுமதிதிபோதாவிடாரென்றும். 15

அதிதிபூசையேயாற்றிடல்வேண்டுமாலறிந்தோர்
மதியினாற்சத்துப்பிரத்தருமதிதியைவந்திக்
ததிகராயினாத்தனுமுத்தியிலடைந்தார்
புதியதாகியவதிதியார்பூசனைபுரிந்தே. 16

அன்பினால்வருமதிதியைப்பூசனைபுரிவோர்
முன்பதாகியகாலமுந்தேசமுமுள்வந்
தின்பதாகியபாத்திரவிசேடமுமெண்ணா
ரென்பராபரன்வந்தனனென்னவேயெனுவார். 17

இருந்துநாமினிப்புகல்வதென்னெறிபுனல்டோகிப்
பெருந்திரைக்கடல்சேர்ந்தபின்னணைக்கொளப்பெறுமோ
வருந்துநம்மையாரஞ்சலென்பார்மதிச்சடையெம்
பெருந்தகைப்பிரானல்லதென்றெண்ணினன்பெரியோன்.

அந்தவேளையில்வந்தனனடியர்களோடுஞ்
சந்தவேதயாகாதிநல்காலத்தின்றகையாற்
புந்திசேர்திகன்பணிந்திடப்புகுந்துநேர்ந்திருந்தார். 19
வந்தவாறதேதெனச்சொனான்வந்தவன்வகுப்பான்

சிவசமாதியிற்சேர்ந்திருந்தேயுளந்தெளியாக்
கவலைவிட்டிடுமுனிவராங்கண்ணுதலடியார்
புவனியிற்பிறற்குதவியேபுரிகுவராதுபோ
னவநிதிக்குவைவேறுளவோவெனநவின்றான். 20

பரர்தமக்குபாரஞ்செய்பவர்க்கிலைபாவம்
பரர்தமக்குபகாரமேபாக்கியமாகும்.
பரர்தமக்குபகாரமேதமக்குபகாரம்
பரர்தமக்குபகாரியைப்பார்க்கினும்பலனே. 21

பிறந்தநாள்முதற்பரவுபகாரமேபிடித்து
மறந்திடாதனுதினஞ்செயவேண்டுமால்மதியோர்
சிறந்தபார்ச்சமதக்கினிபரத்துவாசன்சீ
ரறந்தவாதகோதமனொடுங்காலவரானோர் 22

இரக்கமுற்றியபரவுபகாரத்தாலிமையோர்
புரக்குஞ்சத்தியவுலகத்திற்புக்கனர்புவியில்
பரக்குஞ்சீர்த்தியும்பரவுபகாரத்தாற்பகரின்
நரர்க்குளேபரர்க்குதவிசெய்யாதவரைகன். 23

நம்பினோர்களைக்கெடுத்துத்தானலமுறவெண்ணுவோர்
தம்பமாகியவாசனைச்சாரில்விட்டிடுவோ,
ரும்பர்போற்றியகுரவனைநிந்தனையுரைப்போர்
கும்பிபாகமாம்நரகத்திற்குலனொடுங்குளிப்பார். 24

அயலவன்றனக்குபாதிசெய்திடுபவரடைந்தோர்க்
கியல்பினீவதைவிலக்கினோரெறிந்துயிர்செகுப்போர்
மயலில்வேதநன்மார்க்கத்தைவிட்டவரதிதிக்
குயரும்பூசனைசெய்திடார்நரகிடையுழல்வார். 25

ஈங்கினிப்பகர்ந்தேயறப்புரிவதேயியற்கை
தீங்கிறற்பெரியோர்வெஃதுண்டுரைப்பதுந்தேரின்
ஆங்கதற்குநற்றருமஞ்செய்யேதுவேயன்றே
வீங்குகோடையேமாரிக்குமேதுவாய்விடுமே. 26



தருமராசன்செய்தண்டத்தினாலுமித்தரணி
வருணமாச்சிரமத்தவர்பழிப்புக்குமாழ்கிக்
கருமமல்லவைபுரிந்திடார்நல்வழிகாண்போ [27
ரொருமைபெற்றினியறஞ்செயவேண்டுமென்றுரைப்பான்.

அங்கண்ஞாலத்திற்சம்புவின்றீவினிலறஞ்செய்
தங்கமாகியதலங்களுநதிகளுஞ்சுலவுங்
கங்கைகாவிரிகவுதமிகிட்டிணைவேணி
துங்கபத்திரிமுதனதியாங்கதிற்சொல்வாம். 28

கன்னியந்தமிழ்நாட்டிடைக்காவிரிகன்னி
ரன்னைபோலவேயாருயிரளித்திடுமதன்பான்
மன்னியவடகரையினில்வயிரவிவனமென்
றுன்னினும்பவமகற்றிடுவினைத்தனனும்மால் 29

நல்வினைப்பயன்றாய்த்திடநணுகியகாலம்
புல்கநூற்றதுநம்மையப்பொன்னியங்கரைபோய்ச்
செல்வநற்றவத்துறையுறைசிவகங்கையாடி
மல்குசோதிபேசுயம்புவாஞ்சம்புவைவணங்கி. 30

சீலமார்தவன்னையுறுங்குற்றமுஞ்செல்வப்
பாலனாகியமுரண்டகன்பாவமும்பாறும்
நீலகண்டனைக்காலமூன்றினுமுளதினந்தே
சூலபாணியேதுணையெனப்பூசைசெய்தாயோய். 31

எங்குமாகியபிரானயந்தவத்துறைக்கில்லை
மங்கைபாகனாருள்கொடுவாழ்ந்தாசிருப்பர்
ரங்கனேகூறியெனுஞ்சுமேதாவைத்தாழ்ந்தவன்சொற்
றங்குமுள்ளத்தரேதிகன்றவத்துறைசார்ந்தான். 32

ஒன்பதாவது முரண்டகன் சாபமடைந்த வத்தியாயம் முற்றும்.

(திருவிருத்தம் 433).

## பத்தாவது முரண்டகன் சாபந்தீர்ந்த வத்தியாயம்.

பவத்துறையிற்றும்படியினிலனந்தம்பாதகஞ்செய்தனரேனுங், கவர்புறங்களவுவஞ்சகங்கொலைகள்காமமேமுதலியயாவு, மிவர்க்கிணைசெய்வாரிலையெனவுடலமெடுத்துழலினரேயெனினுந், தவத்துறைசேர்வாரெனிற்சிவத்தடைவார்சத்தியஞ்சத்தியமாமால். 1

உலப்புறுங்கலைகளோதினரெனினுமோமமேமுதலியகருமமங், தியப்பொழுதிரவுநிறைவுறச்செய்யுஞ்செயலினரெனினுமிற்செய்யக், குவைப்பெருங்கனகமுதலியதானங்கொடுத்தனரேனுமிப்பிறப்பிற், றவத்துறையறியார்பிணத்தினிகர்வார்சத்தியஞ்சத்தியமாமால். 2

### வேறு

அரும்பவிழ்ந்திடச்சுரும்புவீழ்ந்தாற்றுபுன்னாகப்
பரம்புநீழலிற்பாடகநூபுரப்பதங்கள்
விரும்புமாடவருளத்தொடுமாடிடவாடுங்
கரும்பனாற்றவத்துறையடைந்தேகதிகண்டார். 3

சுருதியந்தணனுலகடைந்தானெனச்சூதன்
கருதிடர்தவத்துறைபவத்துறையினைக்கடத்தும்
பருதிபோலுடற்பாவத்தைப்பாறிடுஞ்செல்வந்
தருவதன்றியுமுத்தியுந்தந்திடுமென்றான். 4

என்றசூதனைமுனிவரிருந்தவத்தோனே
யன்றுபோயுருவாயினோனடைந்ததெவ்வண்ணஞ்
சென்றுமாமுனியுடன்செறிந்ததோவெனச்செப்பக்
கொன்றைவேணியனருளினாற்சூதனுங்கூறும். 5

தெய்வச்செந்திருவாழ்திருத்தவத்துறைசேர்ந்தே
சைவக்கங்கையிலாடியாடுமெவன்சரண
முய்யக்கண்டவன்பவமகற்றித்தனக்குரித்தா
மெய்வைத்தோங்கியமுரண்டகன்றன்னைமேவினனால். 6



கங்கைவாழ்திருத்தவத்துறைகண்டவற்கண்ட
சங்கையில்பலத்தாலந்தப்பேய்வந்துதாழ்ந்தே
யங்கண்மேவிடவடியவன்முனிவரனழைத்துப்
பங்கமுற்றனையோவெனப்பரிந்திவைபகரும். 7

மனையில்வந்திடுமதியத்திலதிதியைவரைந்தாய்
நினையுமப்பவத்தாற்கழுதாயினைநீயே
யெனையதாயினுங்கருமத்தைக்கடந்தவர்யாரே
தனையனேயறந்தழைத்திடவுறைதலேதகுமால். 8

யாவனாயினுமதிதிவந்தானெனிலவனைத்
தேவனாமெனநினைப்பவன்செனனமேசெனனம்
பாவவல்வினையாலிலையெனிலவன்பரித்த
மேவுபுண்ணியமதிதிகொண்டேகுமால்விரைந்தே. 9

அதிதிபூசனைபுரிபவனேயறத்துருவம்
பதியுமாபதியென்பவனேபரகுருவாம்
முதியமும்மலந்துடைத்துண்மைமொழிபவன்முதல்வ
னதிகன்யாரினுஞ்சத்தியவுலகினனவனே. 10

உனதுபேயுருவொழிந்திடவுணர்வொடும்வருவாய்
வனசிகாமணிவயிரவாச்சிரமத்தில்வயங்குந்
தினகராதியர்தொழுஞ்சிவலிங்கத்தின்றென்பால்
தனுவதொன்றினிற்றங்குறும்விட்டுணுதீர்த்தம். 11

மக்கள்வானவர்வணங்குமத்தலத்தினில்வசிட்டன்
புக்குமேன்மையும்பொருவிலாத்தலங்களும்பொருந்தி
மிக்கதாயினன்னீயுமத்தலத்தில்மேவென்னத்
தக்கமாமுனிவோனுடன்புதல்வனுஞ்சார்ந்தான். 12

### வேறு

கொவ்வைவாய்க்கொங்கைக்கடைசியர்குழுமிக்குவளையை விழிப்பகைகுறித்தே, வவ்வியாங்கதனைக்களையெனக்களையும்வயற்கணேகயற்கணம்வாவுஞ், செவ்விசேர்பொன்னிநீர்வளஞ்செழிக்குந்திருத்தவத்துறையினைச்சேர்ந்தே, நவ்விசேர்கரத்தார்சினகரம்வணங்கினான்மறைமுனிவனுநவில்வான். 13

சுற்றமற்றுறுமிருதலனுந்தொழுதுபின்றொழுதுமென்றெண்ணி, நற்றுமாங்கலியர்வசிட்டர்பொற்கோட்டநனிதிருமாந்துறைநலத்தோர், பற்றறுமாதிகுடியன்பில்பலாசம்படர்வனஞ்சென்னியூராறுங், கற்றமாமுனிவன்பணிந்துசெங்ககலங்கமழ்திருத்தவத்துறைகண்டான். 14

இருக்கொருநான்கின்றிருக்கரச்செவ்வணியற்றியவியாதமாமுனிவன், தருக்கொடுப்புகன்றதலத்துறைநகரைச்சார்ந்து சூரியதடப்போற்றி, மருக்கமழ்செல்வவயிரவிவனத்துவாணனை வணங்கியங்குறையுந், திருக்கிளர்தேவர்முனிவரைவாழ்த்தியாடினார்விட்டுணுதீர்த்தம். 15

பலகலைவல்லயிரேதிகன்மூழ்கிப்பாணியைப்பாணியாற்கடத்திற், புலனுறவெடுத்தப்புதல்வனையாட்டப்போயினபேயுருவப்பா, வுலகிடையிரவிமுனமிருளகலவொளிவிடுஞ்சுடருயர்மேனி, நலனொடுவிளங்கினான்மறையோனுய்நண்ணினன்புண்ணியநலத்தால். 16

அருட்குருவடியிற்பணிந்திடமுனிவனறைந்துமுன்னடைந்தவையெல்லாந், தெருட்டுவான்பின்னுந்தவத்துறைப்பெருமைதீர்த்தத்தின்மகிமைமற்றெல்லாங், கருக்குறும்பெறியவேண்டினோர்கருணைக்கடவுள்வாழித்தலத்தமர்ந்து, மருட்டறமதியொன்றன்பின்முக்காலப்வந்தனை பூசனை புரிந்தே. 17

பஞ்சபாதகமுபஞ்சவஞ்செழுத்தைப்பன்னிவெண்ணிலவெறித்தெல்லாத், தஞ்சமாம்பூதிமெய்முழுதணிந்துதன்னிகர்கண்டிகைதரித்துச், செஞ்சொலார்சுருதியுருத்திரசமகஞ்செப்பியிப்படியுரைகுவரேல், வஞ்சமாம்பாவவல்வினையறுத்துமாலறியாப்பதமடைவார். 18

இன்னமொன்றுரைப்போம்வருடமொன்றிருக்கவெய்திடில்மாகநீராட, வன்னமாகத்துக்கதிசமாந்தருமமாய்த்திடிலறிகிலேம்வேறு, முன்னயமாகத்திங்களிற்பசுவின்குளப்படிநீரின்மூழ்கிடினு, மின்னவித்தலமென்றெண்ணவும்வேண்டாமெங்குமாந்திங்கள்மாகத்தில். 19



அத்திருமாகத்ததிகமாந்தலங்களனுகுமேல்மிகவுநன்றுமால், இத்தலத்தோநேற்பிறயாகையெய்திடார்தியாவற்குமென்பார், சுத்தமாமுனிவர்நைமிசங்காசிசொற்குருகேத்திரந்துங்க, பத்திரிவிருபரக்கம்மாகாளம்பருப்பதம்பரயகோகன்னம், 20

சிறந்துயர்பிருகுகன்னங்காளத்திசிவனுறைகாஞ்சிசீர்வாஞ்சி, யறம்பொலிதிரியம்பகஞ்சத்தகோதாவிரிவிருத்தாசலமைய, னுறைந்திடுந்தில்லையோங்கியவருணையுயர்ந்தகோபருப்பதமுண்மைத், திறப்பயில்தீர்த்தசிரிகும்பகோணந்திரிசிராபலைதிருவாரூர். 21

திகழ்திருவானைக்காவிராமேசந்திருவளராலவாய்வெண்கா, டெழ்கயல்மயிலாடியதுறையையாறுஞ்சீர்காழியித்தலத்திற், புகழுருமாகமாடுவோன்கைலைப்பொருப்பினிற்பொருந்துவரென்றே, நிகரிலாமுனியம்மாகமித்தலத்தினிகரிலாச்சிவகங்கையாடி. 22

புதல்வனுந்தானும்வயிரவிவனத்தெப்புனிதனைப்போற்றியாங்குறைந்தப், பதிதனிற்சிவராத்திரிவிரதத்தைப்பண்பொடுமாற்றிநாற்றிசையி, னதிசயாயிருந்துசத்தியவுலகத்தடைந்தருண்முத்தியுமடைந்தார், மதியணிமுதல்வன்றூரசவுபதேசத்தினுல்மறைமுனிவோரே. 23

சுத்தவேதாந்தத்துரியராமீசன்றுணைமலர்ச்சேவடிக்கன்பாம், பத்திசேர்பரமவிருடிகள்சாபம்பத்துக்கற்பத்தன்றிமாறு, மித்தலமதனிலிம்மையேதீர்ந்ததென்னிலித்தலநிகர்யாதே, வித்தகமுனிவிரிக்கதைகேட்போர்வேண்டியதடைந்துவீடடைவார். 24

கடற்றுகிலுலகிலுடற்பெரிற்றருமங்கடைப்பிடித்தொழுகுதல்வேண்டு, முடற்பொறிவிடுக்கிற்பரவுலகத்துக்குண்பொதிச்சோறெனவாகும், விடற்கரிதாயவறத்தினையுயிர்போலோம்புவோர்மேம்படுவார்கள், மடற்கமலத்தோன்றருமமேபொருளென்றுரைத்தனன்மாதவத்தீரே. 25

மழலைவாய்க்குழவிபெறுகலான்மனையேவறுமையாம்பாழெனவகுப்பார், விழைவுறுஞ்சுற்றமிலாதவனுடைப்புவினுறும்பாழெனவிதிப்பார், பழையதாந்தருமம்பண்ணுறுன்பிறப்பேபாழெனப்பகருவார்பாழாய், மொழிகுவதெல்லாமறமிலாற்கதனுல் முன்னுக்கும்வறுமைபூண்டுழல்வான் 26

முன்னறஞ்செய்யானிம்மையில்வருமைமூண்டிடப்பாவமேமுயன்று, பின்னருநரகில்வீழ்குவான்பிறந்தாற்பின்னரும்வறுமையேபிடிக்கு, மன்னதையுணர்ந்தேயறஞ்செயவேண்டுமம்பரம்புகினுமம்புவியிற், பன்னருங்காலமுழலினுந்தருமம்பண்ணுறுதில்லையாம்பலனே. 27

காலமோடிடனுங்கைக்கொள்வோன்மாண்புங்கருதியேகொடுத்திடினீரி, லானுமெட்டயிலாதரும்துளிபரந்தலாமெனவிரியுமத்தருமம், சீலமில்துட்டன்செவியிலோருண்மைசெப்பலுமப்படியாகும், ஏலிதாமன்னம்பருகுநீரதற்குப்பாத்திரம்வகுத்தனரன்றே. 28

மானிடப்பிறவிவருவதுமரிதுவந்திடிற்றருமமுமரிது, ஞானமாஞ்சுருதிநாடலுமரிதுநாடிற்பரம்பொருள்சிவனே, யானதுமைகயமில்லையென்றறிதலரிதரிதறிந்தவனடிக்கே, தானுறப்பணிந்துவணங்கலுமரிதித்தன்மையில்லார்நடைச்சவமே. 29

இயலுமிக்காதைநும்மிடத்தன்பால்யம்பினேனிக்கதைதன்னை, தயவிலாதவற்குஞ்சந்திரமௌலிதாளினைப்பாவுறாதவர்க்கு,கயவனுய்வேதம்புராணமாகமநூல்சுற்றிடாப்பொய்யற்குக்கழறேல், உயவலார்க்காகாதென்றனன்சூதமுனிவரனுவந்தனர்முனிவோர். 30

பத்தாவது முரண்டகன் சாபந்தீர்ந்தவத்தியாயம் முற்றும்.

(ஆகச்செய்யுள் 463).

---



## பதினொன்றாவது குணாகரன் பாபவிமோசனமடைந்த வத்தியாயம்.

அவ்வுரைபுகன்றசூதர்பாற்சவுனகாதிபரமகிழ்ந்திறைஞ்சச், செவ்வியதானவத்தலமகிமைசெப்பிடவினுமேவண்டுவமால், நவ்வியுமழுவுந்தரித்திடுநாதன்றளினைச்சேவடியுளநண்ணுந், திவ்வியசூதமுனிவரனுவந்துசெப்பிடவாய்மலர்ந்திறந்தார். 1

விண்டழைநோக்கமண்டனிற்கனிகள்வெடித்திழிவேரிபாய்பலவின், றண்டலையுடுத்ததிருத்தவத்துறைசைச்சார்ந்திடும்பாவிசேர்ந்தனனு, லண்டநாயனார்கதையினிலொன்றையறைகுதுமக்கதைகேட்டால், மண்டிடாப்பாவமகல்வுறுஞ்செவ்வம்வாழுநானெனமுனிவகுப்பான். 2

மைமுகில்பரந்துமதியின்மும்மாரிவழங்கிடும்விசாலபட்டணத்தில், தம்மைநேர்வணிகன்றனதத்தன்னழகைத்தனதனேர்ரதிவளமுடையான்,மெய்ம்மைசேர்மறையோர்தெய்வதம்போற்றும்விருப்பினன் விதிப்படிமுறைபே, யம்மவேகோடியாடகந்தேடியருமகற்பெற்றவர்க்களித்தான். 3

அன்னவன்புதல்வன்குணாகரதத்தனுகிபேயீட்டியதனங்கள், மின்னனைபார்க்குமீணுற்குமாக்கிவறுமைபாற்களவுபொய்மிகைப்ப, வின்னசெய்கையினையர்சனுமீனவியிங்கிவன்றன்னையித்தேச,மன்னிபத்தகற்றுமென்றலுமவனைமற்றைபதேசத்தின்விடுத்தார். 4

ஆழற்பாலைதுறிஞ்சிநீண்முல்லைபகந்தொறுமன்னெறிப்படுவோர், பேரிருளுழப்பத்தண்டித்துங்கூறைபெரும்பொருட்பேரெலாங்கவர்ந்துங், கூரியமன்றபோர்குலைத்திடப்பறித்துக்கொடுமைகொண்டடுந்திறல்கொண்டான், வார்முலைதாங்காதேங்குநுண்மருங்குவிழிகுலத்தவளொடுமருவி. 5

தொப்பியுமூனுமற்றவையெல்லாம்வேடிச்சியுடன்சுவைத்துண்டங், கப்பெருவனத்திற்றிரிபவன் செய்தவடுந்தொழில்முதவியபாவஞ், செப்பிடயாவர்வல்லவரம்மதீவினைத்திருப்பிடமவனே, யிப்படிக்கொடியோனிப்படிக்கில்லையெனத்திரிபவனவனிகந்தே. 6

பண்டைநல்வினையின் பருதியின் வேடரோவியப்பாவமின்னோடு, மண்டர்மாதவர்களனுதினம்வணங்கயாவர்வந்தடையினுமவர்கள், கொண்டவெம்பாவக்குழுவிருளகற்றக்கொடியிடங்கொண்டுவாழ்கோமான். விண்டுவுங்காணாமெய்ப்பொருளுறையும்வயிரவிவனத்தின்மேவினனால். 7

அப்பெருங்காலத்தடவியாய்ப்பரமனாலயமன்றிவேறின்றி, யொப்பிலானுறைதல்கண்டனனுவந்தானொண்டொடியோடுந்தானுறைய, விப்பெருங்கல்லினாலயங்கிடைத்ததெனவதிலெழுந்தபுற்கொடிகள், தப்பிலாதெவையுங்களைந்தொருசார்பிற்றங்கினனிலிங்கநாயகன்முன். 8

அவ்வனந்தன்னிலன்னெறிப்படர்வோரரும்பொருள்கவர்ந்தவணிருந்து, கொவ்வையங்கனிவாய்தன்னொடுங்களித்துக்கூட்டியவ்விருளிராவெல்லாம், வெவ்வலிவாகசெய்கொடுவிளக்கும்விளங்கிடவிமலன்முன்னேற்றி, யெவ்வமாமூன்றொடுண்டவணிருந்தோனிறந்தனன்முல்லையூழியல்பால். 9

அந்தணர்கொலையேயாதியாங்கொலைகொண்டருங்குணகரனிறந்திடலுஞ், செந்துவர்வாயாள்வனசரர்குலத்துத்தெரிவையுமொருமைகொண்டந்த, நந்தலில்வனத்திற்புலர்ந்தவிந்தனங்கணாற்றிசையினுங்கொணர்ந்தேற்றிப், பந்தமோடிந்தமடுக்கிமீக்கொண்டுபடுந்தழற்குளித்தனள்பரிவால். 10

அமரர்வந்திறைஞ்சும்வயிரவிவனத்திலடைந்திருந்திறந்ததினாலுங், குமரனைப்பெற்றேன்றிருமுனந்தீபங்கொழுவியேற்றிடுகையினாலுங், கொமரவெம்பாவக்குழுவெலாமகற்றிக்குணகரன்கோற்றொடியோடும். 11

திவ்வியதேவருருவெடுத்தடைந்தசிவகணநாதரோர்டோங்கும், பவ்வநீருதையபானுவினொளியிற்படர்தருவிமானமீதேறி, நவ்விசேர்விழியார்சாமரையிரட்டநறுமலரமரர்கடூர்ப்ப, வவ்விடையகன்றுகைலைமால்வரையையடைந்தருணந்திதாள்பணிந்தான். 12



ஆண்டருணந்தி யெந்தைமுன்விடுப்ப வம்மையோடப்பனுமுவந்து, காண்டகுமனந்த கணங்களுக்கிறையாய்க் கயிலைமால்வரையடியுறையப், பூண்டபேரருள் செய்தவ் விடை போக்கப் புண்ணியற்போற்றியாங்கிருந்தான், மாண்டகுதவத்துமுனிவர்காளிந்தவான்கயிலாயத்துமருங்கு. 13

அழைத்துவாழ்வித்தோனாலயமலகிட்டணிமெழுக்கிட்டுமுன்னெய்யா, விழைத்தநற்றீபமேற்றியதெல்லாமிவற்கலாவிறைக்கெனவெண்ணா, துழைத்தனனவனுக்குற்றவையுரைத்தேமுண்மையாய்நம்மிறைக்கிவைகள், தழைத்திடச்செய்வோர்தம்மையாட்கொள்ளுந்தவத்துறையன்றிவேறின்றே 14

அத்தல த்திறந்தோர் பாவரே யெனினும் மருங்கணநாயகராவார், இத்தனதத்தன்குமரனைக் கண்டோமிப்படியனேகருமுள்ளார், சத்தியானந்தச்சங்கரன்றிருமுன்றழைத்திடத்தீபமானெய்யாற், சுத்தவெண்ணெய்யாற்சுடரதுவெரிப்பத்தூண்டினார்பெருவர்சாரூபம். 15

அம்புயனறியாவெம்பிராற் காட்டவைவகையமுதமானைந்து, மும்பரிற்கங்கையொத்தமஞ்சனமுமோங்கியதெங்கிளநீரும், நம்பிரானுரைத்தசிவாகமமுறையேநலந்திகழ்காலங்களறிந்து, கம்பமார் புளகத்தாதி சைவனைக்கொண்டாட்டுவித்தோர்க்குறுங்கதியே. 16

அச்சுவமேதபலனவர்க்குண்டாமருப்பசிநிமித்தியமாக, முச்சுடர்நயனமுதல்வர்க்குப்பணிகள்முயன்றதுபிழைக்கமுன்னிடினு, நிச்சயமாகச்சிவபதமுறுவனினைவிலாப்பாலகனொருப்பை, வச்சிடிற்சுடாதோவறிகிலானிடினுமற்றவைசுட்டிடுமாமால்.

அங்கண்மாஞாலத்தருமறைபுராணமனைத்தினுமறைந்திடுந்தருமத், தெங்கணுபகருக்கியற்றியதருமமிணையிலாதவன்றனைப் போலப், பங்கமாமற்றைத்தருமங்கள்பசுக்கட்பார்ப்படும்புண்ணியம்பார்க்கிற், றிங்களங்கண்ணியிறைபதியவன்பாற்புண்ணியஞ்செப்பிலொப்பிலையே. 18

ஆதலாற் பதியை யடைதருந் தருமமாக் கையால் வாக்கினுல் மனத்தால், சாதலாமுன்னமியற்றிடவேண்டுந் தரணியிற்சனித் திடுமாக்க, ளீதலாற்பாவமனைத்தையுமெரிக்கவியற்றிடுந்தரும மொன்றில்லை,போதுவான்மேரயிற்றுரோகத்திலங்கண்புண்ணிய கண்ணுமேற்புனிதன். 19.

மானிடப்பிரதிஷ்டையிலிங்கத்திலதிகமாதவறியற்றியவிலி ங்க, மானதிலதிகம்வானவர்பிரதிட்டையதிகமற்றவற்றினுஞ்சித் தர், ஞானமோடியற்றுமிலிங்கமற்றவற்றினலமெலாங்கொடுத்தி டுஞ்சுயம்பு, மேன்மையாமொன்றுக்கொன்றுமேகோடி மேம்படு மென்பர்வேதாந்தர். 20

மாற்றுதலில்லாவருஞ்சிவத்துரோகமனைமறிந்தறிகிலாதேனு
மாற்றுதலரகாதவர்குலத்தோடுமாண்டிடுமறிந்தறியாதே
யேற்றுறவுணங்குமிந்தனமுதலாரவிந்தனமெறிகொளிற்றீயுந்
தேற்றியாயிடினுமறிந்தவைதீராதத்தினைசமுகனுதியோராலும்.

அறிவுறுதியற்றுமப்பிழைதானுமான்றருமத்தினுலென்று
மறுபடவேண்டுமல்லதாசாரவகையினுல்வேதத்தால்வகுத்த
நெறிதருபுராணசாத்திரமிருதிநிலையினுல்மாற்றுதலாகா
தறமொடின்னுல்களறிந்தவனேனுமரனுக்கன்பில்லையேயில்லை.

சிவனடிக்கன்பிலாதான்சென்மமுமதன்மமாகுஞ்
சிவனடிக்கன்பிலாதான்றிருவிலாச்சிதடியாகுஞ்
சிவனடிக்கன்பிலாதான்செத்திடுப்பிணமதாகுஞ்
சிவனடிக்கன்பிலானைத்தீண்டினுமீண்டும்பாவம். 23

சீலமாசரம்வாய்மைசெகத்திதவாக்குச்சீர்த்தி
மூலமாஞ்சுருதிமுன்னூலனைத்துமோர்முனிவரேனுங்
காலகாலன்கங்காளன்கன்னிபாகத்தன்கங்கைக்
கோலவார்சடிலர்போற்றுங்குணமின்றேலவைகொண்டென்னும்.

சிவன்பணிகள்செய்வாருக்கொப்பாவார்செகத்திலில்லை
யவன்சரணம்பூசிக்குமறத்தொப்பாமறமுமில்லை
தவமென்றமிதற்கிணையாந்தவமுமில்லைதனக்கென்றும்
பவமொன்றுவகைவிலக்கிப்பரிந்துசொல்லில்வரும்பலனே. 25



பண்ணிநாம்பலகாலும்பரிந்துதினம்பச்சிலையால்
நண்ணதிநீராலியன்றநாளொருநாட்பூசிக்க
வுன்னினுற்செய்பவரைக்கண்டாலுமுலகத்துத்
தன்னிகரில்லாச்செல்வஞ்சார்ந்திடுஞ்சம்புவைச்சார்வார் 26

அமந்திரத்தாலுைமன்பில்லாலு
மிமந்திகழுமலையரையனிறைஞ்சவருந்திருமருகன்
றமந்திகழ்சேவடிப்பூசைதழைத்திடச்செய்வாரன்றே
சமம்பெறுந்தங்கிளையோடுங்கைலைமால்வரைகாண்பார். 27

நம்பனார்பூசைநான்காநம்மையாளிலிங்கம்விம்ப
மும்பர்மந்திரத்திற்பூசையுடையவனடியார்தாளிற்
கம்பமோடியற்றல்நான்குங்கதிமதிதருவதாகு
மிம்பருமும்பர்யாருஞ்சிவபூசையியற்றிப்பெற்றார். 28

அறிபாரேனுஞ்சிவகருமமாற்றப்பேறேற்றிடுவரெனக்
குறியீரிந்தக்குணகரனைக்குறித்திப்படியென்றறிவினுளே
நெறியாரிந்தக்கதைகேட்போர்நிலத்தும்பரத்துங்கீர்த்திகொடு
மறியார்கரத்தோன்றிருவடிக்கீழ்மாறுவனபினுடும்வாழ்வார்.

பதினொன்றாவது குணகரன் பாபவிமோசனமடைந்த
வத்தியாயம் முற்றும்.

(ஆகச்செய்யுள் 492.)

---

## பன்னிரண்டாவது சிவதருமமுரைத்த வத்தியாயம்

சூதமுனிவர்சிகாமணியின்சொல்லாயமுதைச்சூழ்முனிவன்
காதுமடுத்துண்டகங்களித்துக்கருணைக்கடலேதவத்துறையி
னீதிமகிமைகேட்டுய்ந்தோம்நின்னுலின்னுமினியடியேற்
கோதுகென்னத்தவத்துறையிலுறைவோர்ப்போற்றியுரைசெய்தான். 1

வேறு

பொன்னலர்கடுக்கைசொன்னநம்பெருமான் புரிகுழலு மையுடனுறையு, மன்னகர்பஞ்சக்குரோசமென்றுரைப்பரங் கி லாலந்துறைகுணபால், முன்னவன்செல்வத்தவத்துறைப்பெரு மானமுழுமணியாலயத்தென்பால், மின்னெழுமோர்விற்கிடைபி னினிறைநீர்விண்டுவினதீர்த்தமொன்றுளதால். 2

வரியமைதெங்கின்முப்புடைப்பசுங்காய்வாளை பாய்ந்திட
வுடைந்தொழுகு, மரியவின்னமுதத்தறலினைச்செஞ்சூட்டன்ன
ங்கள்சூழ்ந்துணுஞ்செல்வத், திருவளம்வாவித்தவத்துறைக்குட
பாற்றீர்த்தமொன்றமைத்ததின்றீரத், தருளுருவசிட்டனருச்
சனைபுரிந்தானவைதரும்பழியிலாமுத்தி. 3

கலைபயில்வசிட்டதீர்த்தநீராடக்காசினிமாந்தருக்கரிதாம்,
புலையமர்பாவம்புரிதலல்லாதார்பொருந்துவர்வருந்தியேதிரியா,
ரலைகொளத்தீர்த்தமாடிடிலையனருட்பொருட்பெரும்பதமடை
வார், மலர்விழியுவப்பக்காணினும்பாவவலையறுத்தமரருள்வைக்
கும். 4

ஐயனாலயத்துக்கீட்டிசைபாணத்தளவுமூன்றினிலமர்ந்திடு
மாற், செய்யவானுதலிச்சிவைமணவாளன்றீர்த்தமொன்றுண்
டதுதெவ்வர், நையவாள்விதிர்த்தநச்சிலைக்கொன்றுநண்ணிய
பழிகழுவியதா, முய்யவத்தீர்த்தத்தாடியவ்விலிங்கந்தொழுதெ
ழுவமரராயுறைவார் 5

முனிவராமாரனுதினம் வணங்குமுதல்வனாலயவடபாலிற்,
றுனிதருவில்லுக்கிடையொருமுப்பான்கொண்டிடுமெல்லையினு
ளதாங், கனதிரைக்காயத்திரிநதியாடிக்கரடமும்மதமுதக்கட
வுள், தனிவிறற்சாத்தன்றுளிணைப்பணிவோர்பஞ்சபாதகந்தடிந்
திடுவார் 6

திங்களிற்சிறந்தமாகமாமதியிற்றினகரனுதயத்திற்றெண்
ணீர், பொங்குமானதியிலாடினோர்வீட்டிற்பொருந்துவரான்
பொழிதிம்பா, லங்கமாநதியிலந்தணர்க்களிக்கவதிகமாநன்மை
யென்றறிவீர், துங்கமாந்தூயசித்திரையுவாக்களிரண்டினுந்தூ
யனாயேகி 7

அன்னியநீரிற்புடவைமெய்யழுக்குமகற்றியேயமலன் முன்
றொழுது, தன்னிகரில்லாச்சிவகங்கைத்தடத்தைத்தாழ்ந்துதங்
குலத்துள்ளோர்தழைப்ப, வெண்ணையாளுடையாளுமங்களேத்தி
யிருடையணிந்துகால்படுமுன், னன்னநீர்சிரமேற்றெளித்ததி
லிறங்கியரத்தொனியெழுப்பியாடுக 8



படிந்தினிதெழுந்தங்கருக்கியமுதவிப்பரிநிறவெண்டுகில
ணிந்து, தடிந்தனங்கவலையென்றுவெண்பூதிதரித்தக்கமாமணி
யோடு, மடந்தையோர்பாகன்மந்திரநூற்றெட்டுருவினைவாய்ந்தி
டச்செபித்துக், குடைந்தவத்தீர்த்தக்கரையினிற்றானங்குலம
றையவர்கொளக்கொடுத்தால் 9

பிறர்மனைவீழ்தல்கடைப்படுமூனைப்பிரியமோடருந்தல்
பொய்பேசல், மறமொடுமுயிரைச்செகுத்தன்மாச்சரியமதமவா
விவற்றினால்வந்த, திறனுறுபாவமனத்தினால்வாக்கார்சடத்தி
னாற்செய்தவையெல்லா, மறியுறுகரத்தோனருளினாலெரிவீழ்
பஞ்செனமாய்ந்திடுமன்றே 10

அருமறைபொய்யென்றுரைத்திடும்பாவியாட்கொளுங்குர
வனையிகழ்வோன், பரவுறுந்தெய்வம்பழிப்பவன்முதலாம்பாத
கராதியோர்வந்தே, திரைகள்வெண்டரளஞ்சிந்தவானவர்பூச்சித
றிடுஞ்சிவகங்கையாடிற், கரியவெம்பாவந்துடைத்துலகாண்டுக
டையினிற்முத்தியிற்கலப்பார் 11

சுருதிநின்றேத்துமச்சிவகங்கைத்தோயத்தைச்செம்பின்
பாத்திரத்தோ, டரியநீறணியுமந்தணர்க்களித்தோரலைபுனற்கங்
கையஞ்சடிலத், தொருவனையடைவருலகுவேண்டினரேனுள்ள
தாமவையெலாமடைவார், திருவுடனன்னஞ்சந்ததிநல்விதனம்
புவிசேருமுட்கொண்டால், 12

ஆர்வமாதத்தினவமியிலன்னீராடியுட்கொண்டிடவவர்கள்
சீர்பதஞ்சிறந்தசெந்தமிழ்வடநூல்தெரிந்துரைகவிஞர்களாவா
ரோர்வுறுமன்மூவிருதிங்களுவந்துநீராடியுட்கொள்ளிற்
பாரிடையிவர்க்குநிகரிலையென்னப்பாடுறும்பார்த்திபனாவான்

அன்னவன்குலத்தோரனைவருங்கவிஞராகுவரம்மனைமுற்றுந்
தன்னிகரில்லாவத்தடமூழ்கித்தானவைக்கடன் முறைவணங்க
மன்னுநன்மறையோனம்மதியாடிமறைசொலமந்திரசித்தி
பின்னவனன்னீராடிடிலரசர்பிழைகெடுபெருமைவந்தடையும்.

அவையலாற்சென்மசுத்தியுகன்மத்தரிசுத்தியுமவர்க்குண்டா
யிவையலாற்சாதியீனனும்முத்தியெய்துவனிருசுடர்சனினக்
கலையுநாவரவங்கலக்குநாளாடிற்கரையிலாப்பாதகங்கழியுந்
தலமிலாமலடாறுமதியாடிற்றனைநிகர்புதல்வனைப்பெறுவார்

அப்புதல்வனுநற்புத்திவித்தைகளோடருமறையொழுக்க
முமடைந்து, விப்புவிவாழ்வனிடையறுக்குலனோடிறைசிவனென்
னவேதேறுந், துப்புடையோனுமாங்கருங்கன்னித் தூய்மதியட்
டமியதனிற், செப்பியபிதிர்க்கட்குறுகடன்கழிக்கிலளவிலாக்கு
லங்கதிசேரும். 16

பசியதோட்டறுகோடக்கதைசிரமேற்பரித்தருட் சிவக
ங்கையாடிற், திசைகொளாப்பாவத்திரட்சிரணீங்குஞ்செறிநிறை
குட்டநோயுடையோர், னிசைசிவகங்கையதனினீராடிவெண்டு
கிலிருபிறப்பாளர், நசைவறக்கொடுக்கப்போகுநீறணியுங்குடும்
பிக்குநல்கினற்றனம் 17

மாசியிற்புறட்டாசிவானனிபங்குனியிற்
றேசுடைச்சிவகங்கைநீராடித்திண்கரையிற்
பூசுரர்க்குநெய்பாறயிர்பூபம்வெஞ்சனத்தோ
டாசிலன்னமின்பருப்பொடுஞ்சருக்கரையளிக்க. 18

முன்புமூழ்கியேநித்தியகருமங்கள்முடித்தோ
னன்பினோடுநெல்லமுதுநெய்பூபமாதிகளு
மின்புநல்லடைக்காய்முதநிவேதிக்கவிறைவற்
கென்பொருட்டிவணுண்டருள்வாயெனவிரந்தால். 19

முத்திசேர்ந்திடுமன்னமொன்றினுக்கொருகற்பம்
பத்திசேர்சிவலோகத்திற்பதிதுவன்பசுநெய்
யத்தனுக்குமுன்றீபமேத்திடமுனமனுப்பிச்
சத்தமாமுனிவோர்தொழுஞ்சுயம்புவைத்தாழ்வான். 20

ஏழுமாமுனிவோர்களுமினமருஞ்சியகோவி
லாழியாலயனிந்திரனமரர்சூழ்போகி
வழிநாள்களைக்கடந்தென்றுமோங்கியகோவில்
வாழுங்கோபுரத்தோரணவாயலுண்மருவி 21



அங்கமெட்டஞ்சுமூன்றுறப்பணிந்தன்பின்முக்காற்
செங்கரங்கள்வீசாதுசெய்தேவலந்திருமுன்
னெங்கணாதனேயெனமுனம் ணிந்தெழுந்திமையோர்
தங்கணாதனைச்சுயம்புவைத்தவத்துறைமுதலை 22

சத்தமாமுனிவோர்தொழுந்தலைவனைத்தயாவின்
முத்தனைமுழுச்சோதியைமுன்னின்றுபோற்றிப்
பத்தியாற்றிருமாலைவெண்கவரிபட்டாடை
சத்திராதிகள்விடைக்கொடிகொடுத்துதன்னன்பால்

தூநறுந்திருமஞ்சனந்திருமுடிக்கிணங்கத்
தேனெய்பாறயிர்முதலியதிரவியத்தானு
மானமந்திரமறையவர்செபிக்கவேயாட்டி
வானமார்மலைச்சாந்தமுமணிவித்துமலரால். 24

அஞ்செழுத்தினலருச்சனைபுரிவித்துச்சுகந்த
மஞ்சரித்தொடைசாத்திவித்தமுதபூபங்கள்
செஞ்சுவைபடநிவேதனஞ்செய்வித்துத்தீப
மஞ்சுநெய்கொடுபார்ப்பித்துப்பரமனைப்பரவி 25

சுகந்தூபமுந்தீபமுந்தோற்றுவித்தன்பே
மிகுந்துவேண்டுவெனெனப்பணிந்தம்மைமுன்மேவி
யகந்தைநீங்கியப்படிபணிந்தைவனமுதவி
யுகந்துபோற்றுகவிலையெனினுள்ளவையுதவி; 26

அங்ககன்றமற்றைங்கரனறுமுகன்முதலோர்
தங்குமுட்பிரதக்கிணஞ்செய்தவண்சார்ந்தே
யெங்கணாதனைப்பூசைசெய்மாலையுமிறைஞ்சிப்
பொங்குபேரருட்டண்டியைப்போன்றிமுன்போந்தே. 27

தேசின்மிக்கவன்றிருமுனின்றவனடிபரவு
மாசிலந்தணர்க்காடையாபரணமாதான
மீசனைத்தினந்தொழுமுமக்கடிமையென்றிரந்தே
பேசுமத்தலத்தியன்றநாளமர்ந்தருள்பெரியோர், 28

மண்டலாதிபர்மகுடகோடிகள்வணங்குறச்சீர்
கொண்டகோளரியாசனத்திருந்துசெங்கோலாற்
பண்டைமானிலம்பரித்தான்பதத்தினிற்பற்றுய்
மூண்டகாசனங்கண்டிடாமுத்தியுமடைவார். 29

இயன்றமாத்திரமன்பினலனுதினமிறைஞ்சி
முயன்றப்பெரும்பலனடைகுவர்யுகமுறையே
நயந்தவிட்டுணுபுரநவிலிந்திரபுரிபிரமன்
செயந்தருபுரிமுத்திவைப்பென்றுஞ்செப்புவரால். 30

மங்கைபாகற்குத்தூயபட்டாடையைவாங்கில்
துங்கபாங்கணநாதராகுவரன்றித்துலங்கி
யெங்குமாஞ்சிவஞானமுண்டாமமுதேற்றத்
திங்கணேர்வெள்ளிவெண்கலத்தாற்கலன்செய்தே. 31

அழைத்துவாழ்வுத்தவர்க்களித்தவராசளிப்பார்
குழைத்துவிண்டொடும்பலாமுதலியகுளிர்தருக்கள்
தழைத்தநந்தனவனமமைத்தவர்மன்னவர்தமர்போ
லிழிப்பிலிந்திரன்மனையுற்றெய்துவர்முத்தி. 32

அந்தணற்பெயருடையவவ்வயிரவிவனத்தை
வந்துகண்டவர்காண்குவர்முத்தியின்வைப்பு
எந்தையார்திருக்கோபுரங்கண்டிறைஞ்சினரேற்
பந்தமற்றிடுசிவபதமுறுமுண்மைபகர்ந்தேம். 33

முன்னமோதியநால்வகைமுழங்குநீர்த்தீர்த்தத்
தன்னமாடியதுறைகளிற்பணிந்ததிலாடி
யென்னையாள்பவற்றொழுமவரிச்சைபெற்றிடுவார்
பன்னினென்றிருவாணைசத்தியமெனப்பகர்ந்தான். 34

வேறு

எவையினுமதிகமாகுஞ்சிவநிசியிரவுமுற்றும்
பவமறத்தளிர்க்கும்வில்வப்பத்திரத்தரிச்சித்தேத்தி
யுவமிலாக்கபிலைநெய்பாலொண்சுடரேத்திப்பின்னுஞ்
சிவனருள்புராணங்கேட்டுத்தினகரனுதயத்தெய்தி. 35



வேறு

புனிதநீர்ச்சிவகங்கையிலாடிப்பொற்றகில்க
ளினிதிரண்டொருதனத்தொடுஞ்சிவலிங்கமீந்தே
வனிதைபாகன்வாழ்வயிரவிவனத்தின்முன்பாற்றின்,
முனிவரொன்றொருகோடியாம்விரதமாய்மொழிந்தே 36

சோதிசெஞ்சுடர்க்கண்ணினன்மதன்றனைச்சுட்ட
வாதிகாரணத்தெக்கணாமூர்த்திசன்னிதியி
லோதினலெழுத்தஞ்சுருவொன்றுகோடியதாம்
பாதமோரடிக்கயமகப்பலன்வலம்வரிலே. 37

ஏலமாதியதிரவியமஞ்சனத்தினுக்குக்
காலகாலற்குக்கொடுத்தவர்கைலையையடைவார்
வாலிதாகியகருப்புரங்குங்குமமலைச்சாந்
தாலமுண்டவர்க்களிப்பவர்கின்னரர்க்கரசே. 38

மூலமாகியநாற்குலத்தவர்கட்குமுத்தி
யேலவேண்டிடினந்தவனமிறைக்கியற்றச்
சீலமோடிமையோர்தொழுந்தேர்விழாச்சேர்வை
ஞாலமீதெவர்செய்தனரவர்நரேந்திரரே. 39

வேறு

தேசுவிடங்கன்றிருத்தேரின்சேர்வைதொழுவோர்சென்மமே
யாசிறருமசன்மமிதற்கையமில்லையருண்முனிவீ
ரீசன்விழாவில்வரையாதேயெவர்க்குமன்னமீந்தனரே,
பாசமுழுதும்பறிப்பர்தண்ணீர்பந்தரமைப்போர்பார்த்திபரே 40

சாதஞ்சரதஞ்சவுனகரேசாற்றுகின்றேஞ்சிவசேர்வை
விரதம்யாசந்தானமிவைமீதாய்விளங்கும்புண்ணியமாம்
வரதன்றிருமார்கருள்சுயம்புவளருஞ்சோதியிலிங்கத்தைப்
பரசுமவர்கள்பெரும்பேறுபகரற்பாற்றோபகர்வரிதால் 41

இசைகொளிந்தக்கதைகேட்போரியாவரேனுமெண்ணரிய
வசைகொள்பாவமறவீட்டிமன்னராகிவளர்ந்துய்த்து
அசுவமேதபயன்முதலாயடைந்துநெடுநாளமர்ந்திருந்து, [வார்.
திசையில்விளங்கும்விமானமொடுந்தெய்வக்கைலைசென்றடை

வேறு

மாலவனன்னாள் மாசிமாதத்தின்வாதற்குத்திருவிழாவகுத்துக்,
கோலமாரிரதமழகுறவமைத்தேகுலவிடச்செய்தனனந்தச்,
சீலமாத்திருத்தேர்ச்சேர்வைசெய்தவர்கள்தேவரேயாவாரமெனினு
மூலமாங்கடவுள் திருக்கலியாணமுந்தியவிழாவெனமொழிவாம்.

முற்றும் ஆகச் சருக்கம் 12-க்கு செய்யுள் 523.

12-வது சிவதர்மமுரைத்த வத்தியாயம் முற்றும்.

---

## பதின்மூன்றுவது சூரியபுராணத்திற் சொல்லும் குபேரன் தீர்த்தயாத்திரை யுரைத்தவத்தியாயம்.

செக்கர்ச்சடிலச்சூதமுனிசெப்பக்கேட்டமுனிவரெல்லா
முக்கட்சுடரைத்தொழுதேத்துமுனிவர்க்கரசேமுன்காசி
மிக்கப்பெருமைவிளம்புங்காற்றென்பாலளகைவிளங்குமென்றாய்,
தெக்குத்திகழுமளகையுமெத்தலமோவென்னச்செப்புகின்றான்.

சக்கரவாகப்புட்குலமலம்புந்தாமரைத்தடமருங்குடுத்துத், திக்
கெலாம்பரவுந்திருத்தவத்துறையேதென்னளகாபுரியாமால்,முக்
கணாபனார்திருக்கயிலாயமுதல்வரைக்குத்தரதிசையிற், றெக்க
வீற்றிருப்பதுத்தரத்தளகையியக்கர்கோன்புரியெனவுரைப்ப.

மானிலப்பரப்பிற்சம்புவின்றீவின்மருவியபாரதவருடத்,
தானனீர்ப்பொன்னிவடகரைவளங்கொண்டமர்வயிரவிவனத்த
ளகை, ஞானமுந்திருவுங்கல்வியுங்கதியுநல்கிடுமளகையாநாமந்,
தானுறல்சொல்கேமிக்கதைகீர்த்திதானியுந்தனமெலாந்தருமால்.

வனைதருகழற்கால்வச்சிரவாகுமதலையுத்தரத்திசைமன்
னன், தனதன்முற்றவத்தார்பாலனும்பருவந்தனிற்சிவபூசனைதா
ங்கித், தினமுறைதவறாதியற்றுவான்தலங்கள்சேர்வைசெய்தர்ச்
சனைசெய்வான், மனமெனவேகும்புட்பகமிவர்ந்தேயிமையமால்
வரைக்கிப்பால்வந்தான். 4



திருக்கயிலாயமிருக்கையின்றிருமால்தேவர்கள்முனிவர்க
ள்சித்த,ருருக்குநெஞ்சகத்தையுருக்கியேநெடுநாலொப்பிலாப்பூ
சனைபுரிந்துந், தருக்கினைவியோகமாற்றியுஞானத்தனிமுதற்றல
மெலாந்தொழுதப், பெருக்கினாற்காண்பரல்லதுகாணாப்பெற்றி
யாற்றலந்தொழப்பெயர்ந்தான். 5

வேறு

பூதாதிகண்டுபுலன்வென்றுயர்ந்தபுனிதத்தவத்தர்புகழும்,
வேதாதிகண்டதிருவாய்வியாதன்வெதிரிப்புனத்தில்மருவிப், பா
தாரவிந்தமருளென்றுவந்துபரவப்பரிந்தருள்வோன், கேதார
னாதன்சைலம்பணிந்துகிரிநின்றிழிந்துவருவான். 6

வேறு

தனிச்சிவானந்தமத்தியகங்கைத்தண்ணறுந்தெய்வநீராடி
க், கனித்துவர்வாயாள்கணவனைக்காசிக்கடவுளைக்முந்துமாதவ
முன், னனைத்தொடுமூன்றுவருடஞ்சங்கற்பித்தழல்வலங்கொ
ண்டுபூசனையாற்,பனித்திடுங்கருணைபுரிபரம்பொருளைப்பரவியிவ்
வாரணசியிற்படிந்தான். 7

சூலடர்கேசன்பிரயாகைமாதவற்குத்தோன்றியபரம்பொ
ருண்முன்னர்க், கோலநீர்க்கங்கையமுனைபாரதியுங்கூடியநீரி
னிலாடி, யாலமுண்டமரர்க்காருயிரளித்தவப்பனையம்மையைப்ப
ரவி, ஞாலமார்சவுராட்டத்தினிற்சோமநாதத்தினண்ணினனல
த்தால். 8

தண்ணறுந்துளவக்கண்ணன்விண்ணவர்க்குத்தாமெனத்த
ண்ணளிபுரிவோன், வண்ணமார்துவரைப்பதியரசாள்வோன்வந்
தனைதினம்புரிந்தேத்து, மண்ணலையமரர்க்கருள்சிவானந்தவய்ய
னைக்கையினாற்றொழுதே, புண்ணியாவென்றுதலையினாற்பணிந்து
புக்கனனவந்தியாம்புரியில். 9

வேறு

திருவுந்தெய்வக்கலைமானுந்தேவர்முனிவரியாவோரும், பர
வும்பரையாளருச்சித்ததேவியோடும்பதிந்துறையு, மருவுங்கரு
ணைமகாகாளவரதன்பாதம்வந்தித்தே, தருவின்மலர்நீர்நரும
தையைச்சார்ந்தானியர்க்கர்வேந்தாவான். 10

முருகுண்மலர்சிந்தினைமோதிமுழங்கிக்குடக்கேகடக்குநதி,
பரிவின்பணிந்தன்னதிபோற்றும்பதியாமமரர்கணஞ்சூழ்ந்து,மரு
வுங்கோயில்மணிப்பேரிதானேமுழங்குமகிமையொன்றும், பொ
ருவில்பெருமைமாந்தர்தவம்புரியோங்காரம்போற்றினான். 11

அருளால்விடைகொண்டள்ளியள்ளியலருமணியுமலைகொ
ழிக்கும், விரைவார்கரைக்கோதாவிரியின்விறலார்நரசிங்கக்கட
வு, ளொருவாவன்பானுமைபாகத்தொருவாவென்றேயொருமை
யொடுந், திருமால்மலராற்பூசிக்குந்திரியம்பகத்தைப்பூசித்தான்.

உடையோர்போற்றியாங்ககன்றேவுரவுத்திரைநீர்க்கிட்டி
ணையி, னிடமார்தெய்வப்பருப்பதத்தையிறைஞ்சிக்கைகடலையின்
பால், விடையார்நமதுதேவிருக்கும்வியனுமனந்தமேன்மையெ
லா, மடையார்நதியின்பருப்பதனையன்பாற்போற்றிவிடைகொ
ண்டான். 13

சங்கந்தவழ்ந்துதண்டாளந்தடவாலுகத்தின்புடையுயிர்க்
கும், பொங்கும்புனிதப்பொன்முகலிக்கரையிற்புலவோர்கலைமு
னிவோ, ரெங்கும்பரவுந்தென்கைலையெமையாள்கண்ணப்பர்க்க
ருள்வோன், றங்குஞ்செல்வக்காளத்திச்சயிலஞ்சூழ்ந்துபணிவுற்
றான். 14

அமரர்மனிதரியாரேனுமன்பார்ச்சென்றேயரகரவென்,றிமி
ருந்தமரமெழக்கல்லாலிடித்துக்கங்கேவானியத்துங், குமரன்றா
தைஞானப்பூங்கோதையுடனேவீற்றிருக்குந், திமிரமகற்றுமு
லைத்தேவைத்தொழுதேசேர்ந்தான்றிருந்தணிகை. 15

செய்யகுவளைக்கற்றொட்டியிடத்துத்திரிகாலத்தரும்பு,
மையமில்லாதலர்த்தாதங்கணியுங்கோலவாறுமுகத், தெய்வரா
சப்பெருமானைப்போற்றிக்கழுக்குன்றினைச்சேர்ந்து, நையுமுளத்
தச்சம்பாதிதேவற்போற்றிநலனுற்றான். 16

ஆலங்காடுந்திருவொத்தியூர்மால்போற்றியயல்நின்று, கோ
லங்காட்டிக்கும்பிட்டுநிற்குங்கோயில்கும்பிட்டே, மாலுமயனு
ங்காண்பரியான்றேவக்காஞ்சிவந்துற்றான், காலகாலன்றிருத்
தோழனென்னும்பெருமைக்கவின்பெற்றான். 17



எண்ணான்கறமுந்தண்ணளியாலேகாம்பரன்பாலின்னருளி
ன், கண்ணாலெமையாள்காமாட்சிக்கருணைத்தெய்வம்வதிந்தரு
ளுந், தண்ணார்கம்பைநதிப்பதியைத்தாழ்ந்தான்சூழ்ந்தான்றல
மெல்லாம், பண்ணேரேகாம்பரமரையும்போற்றிப்பாலைபணிவுற்
றான். 18

தேவர்முனிவர்நவக்கிரகந்தினமுஞ்சூழ்ந்துவருதலினால், யா
வரேனுந்திசையறியாதிலங்குங்காரக்கோட்டத்துப், பூவினமரு
மிருமின்னுமயனுமாலும்போற்றுமம்மை, சேவினுடையான்றிரு
த்தேவிதெய்வச்சரணந்தாழ்ந்தெழுந்தான். 19

வேறு

முற்காலத்தடுகின்றமுதல்வருங்காலக்குறியின்முறைமைகா
ட்டும், விற்கோலப்பெருமானைக்கூலத்திற்பணிந்தேவெண்பாக்க
ம்போற்றி, நற்கோலத்தருவிடைவாய்நளிபூமென்கங்கைபொழிந
ன்மைநோக்கித், தற்கோலம்பணிந்தேத்தித்திருப்பாச்சூர்வேய்
முத்தைத்தாழ்ந்தே போந்தான். 20

மாலுமயனுமடிமுடியுங்காணாமலையைமழைமுகில்கள், கால
முடிவிற்பெய்தாலுமருவியிறங்காக்கனலுருவாஞ், சூலப்படை
யான்றிருமேனிகிரியாயுறையுஞ்சுடர்க்கிரியைச், சீலமோடுஞ்சூ
ழ்ந்தெழுந்துவிருத்தாசலத்தைச்சென்றடைந்தான். 21

மசகமெறும்புயானைமுதலுயிர்களிறந்தால்வலச்செவிமே,
லிசையவிறைவனுபதேசமியற்றுமணிமுத்தாநதியின், றிசை
யெண்கோட்டிற்பதித்தேவைத்தொழுதேதெய்வத்திருத்தில்லை,
நசையினமரர்முனிவர்தொழுநற்பொற்பதியைநண்ணினான். 22

அஞ்சக்கரத்தாலரும்பொன்னினெழுதிமேய்ந்தவம்பலத்
துட், கஞ்சத்தயனுங்கண்ணனுமுன்கைத்தாளமுமத்தளமொ
லி, விஞ்சத்தொனிப்பமறைமுழங்கவிமையினுமையாள்கண்களி
ப்பச், செஞ்சிற்கமலக்குஞ்சிதத்தாட்டெய்வப்பெருமானடஞ்
செய்தான். 23

கண்டானுள்ளங்கரைந்தன்பாய்க்கண்ணீர்வாராமயிர்பொடிப்பக், கொண்டானிருகையுச்சியினிற்குப்பிட்டிறைஞ்சிவலங்கொண்டே, தண்டாவருளாற்புறம்போந்துசதுர்மாமறைமூவாயிரரை, யண்டாவன்பிற்புகழ்ந்தேத்தியரும்பொற்பதிகள்பலபணிந்தான். 24

தெய்வப்பொன்னிதிருப்பொன்னிசெல்வப்பொன்னிதமிழ்ப்பொன்னி, சைவப்பொன்னியன்னையெனத்தமரோடமரர்தாழ்ந்தாடும், மெய்ம்மைப்பொன்னிநீர்வளமும்விளங்குமுபயதீரத்து, வைகுற்றழசார்பதிகளெல்லாங்கண்டான்கொண்டான்மகிழ்வுளத்தே. 25

ஈழநாடுமலைநாடுமெழிலார்தொண்டைவளநாடு, மாழிவழுதிநன்னாடுமருஞ்செந்தமிழ்பாற்கடல்நாடுஞ், சோழநாடுந்தமிழ்க்கடலின்சுவையாரமுதமெனக்கண்டான், காழியழியாத்தோணிமிசைக்கருணைக்கடலைத்தொழுதகன்றான். 26

உண்ணேய்ப்புறநோயிரண்டுமறவொருவன்றானேயுமையோடு, நண்ணார்பரவும்வயித்தியநாதப்பேர்கொண்டென்றும்மருளத், தண்ணார்தடஞ்சூழ்புள்ளிருக்கும்வேளூர்ப்பரவித்தனைநிகர்வோ, னெண்ணாதிறமந்தகற்செற்றசுவேதவனமுமிறைஞ்சினான். 27

சாயாவனமுந்தொழுதேத்திமயிலாடியதண்டுறைபடிந்து, சேயார்கடவூர்சேவித்தேதிருமால்விழுமாமலர்சாற்றுந், தூயோர்பரவுந்திருவீழிமிழலைசூழ்ந்துதுதித்துப்போய், வேயார்தோழிபாகனருள்திருவாஞ்சியத்தைமேவினான். 28

அப்பொற்பதியைத்தொழுதேத்தியாரூரப்பொற்புற்றிடத்தி, னொப்பற்றிலகுமொருமணியையுவணப்பாகன்மீண்டுய்ய, வைப்புற்றருள்செய்மறைமுதலைவணங்கிதிருமால்வழிபட்ட, செப்பற்கரியசேயுமையோடுறையுந்தியாகர்ச்சேவித்தான். 29

அவ்வூரைச்சூழ்ந்தகன்றுபோயருமாமறைகளொருநான்குஞ், செவ்வாலறிவில்லாதவர்கள்தெளியும்வண்ணந்தாந்தொழுதே, யிவ்வானவனேமற்றையரையிறைஞ்சேமென்றேயரிச்சித்தே யெவ்வானவருந்தொழுமறைக்காட்டிறைஞ்சித்தென்பாற்றிசையேகி 30



கொடுங்குன்றந்திரும்புத்தூராடானைப்புனல்வாயிற்கும்பிட்டேத்தி, யடுங்கின்றவினையழிக்குமிராமீசநெல்வேலியணிகுற்றாலமிடங்கொண்டபூவணநற்சுழியல்பரங்குன்றிறைஞ்சியிமையோர்போற்ற, நடங்கொண்டதாண்மாறியாடுகின்றதிருவாலவாயைநண்ணி. 31

ஓதரியதிருவிளையாட்டானிருதாளுமைசரணமுவந்துபோற்றி, வாதவூரேடகமும்பெருந்துறையுத்தரகோசமங்கைவாழ்த்திப், போதுநெறியுத்தரத்தின்மீண்டுவலிவலம்புகலூர்புனிதநள்ளா, றாதிரையான்றிருமருதூர்திரிபுவனந்திருப்பனந்தாளரனையேத்தி. 32

வேறு

கோளிலிகொள்ளம்புத்தூர்முதற்றலங்கும்பிட்டேத்தி, வேளினையெரித்தோனல்லூர்மேவியேபோற்றிக்கங்கைத், தாளதாமரைத்தாதுற்றசங்கிவர்ந்தெழுங்குடந்தை, யாளுமவ்வரசைப்போற்றிவலஞ்சுழியிறைஞ்சினானே. 33

ஆரணன்சிரத்தைக்கொண்டன்றுருபிரளித்தகண்டி, யூரனைப்போற்றிநந்தித்தலைவனுக்கொழிர்பொன்மௌலி, நாரணன்முதலோர்போற்றநலனொடுசூட்டுமையாற், றோர்பரம்பொருள்நெய்த்தான்முவந்துபூந்துருத்தியேத்தி. 34

திருநெடுங்களத்திற்றேவினைத்தொழுதுதிருவெறும்பீசரம்போற்றி, முருகர்ச்சுரும்புமிருவர்தைப்பூசமுறைவழுவாதின்றுமென்று, மருளொருபாகத்துய்யக்கொண்டருள்வானமர்திருக்கற்குடிவணங்கிக், கருநிறக்காகம்பறந்திடாத்திருவாட்போக்கியுந்தொழுதுமீண்டகன்றான். 35

கிட்டிசைவருங்கால்வடதிசைநோக்குஞ்சன்னதியாலபத்தமரு, நாட்டமூன்றுடையானமர்ந்திடுங்குழித்தண்டலையனைத்தலையினால்வணங்கிக், கோட்டுறுங்கொழுந்துசிகரமேனைக்குங்கொழும்பராய்த்திருப்பராய்த்துறையான், றாட்டுணைத்தொழுதுதமிட்சிராப்பள்ளித்தடவரைகண்டனன்றவத்தால். 36

கண்டுபுட்பகத்தையிழிந்துகீட்பணிந்தெங்கைலைமால்வரையிவண்வைக, வண்டநாயகனுமட்டுவார்குழலெம்மம்மையுமமர்ந்தருள்சுரக்குந், தண்டலையுடுத்தமலையெனவேத்திதாழ்ந்தனன்சூழ்ந்தனன்கழுதோ, ரெண்டுபூசித்தனன்றண்முதலின்றுமிருந்திடுமியல்புகண்டானல். 37

வேறு

எல்லாமலைக்குஞ்சிராமலையென்றிமையோர்முனிவோரிறைஞ்சும்விதி, கல்லார்தெய்வச்சிராமலைதென்கைலைமலைசெங்கதிர்க்குலத்து, மல்லார்ப்பத்துச்சென்னிகுலமுறந்தைக்கிருந்துவணங்குபதி, நல்லோர்பரவுமலைச்சோதிக்கொழுந்தைப்பணிந்தானல்வினையால். 38

மாலுமயனுமிந்திரனும்வானோர்குழுவுமுனிவர்களுங், காலமூன்றுஞ்சூழ்ந்திறைஞ்சுங்கருணைக்கடலாம்பெருமானை, மூலமானமுதற்பொருளைமுன்னின்றேத்திவலங்கொண்டே, வாலமதிச்சேகரன்மலையைவணங்கிக்குடபால்வந்துற்றான். 39

வேறு

பொய்த்திடாநிறைநீர்ப்பொன்னியின்வளமும்புட்குலமிருகமாச்சரியம், வைத்திடாதெங்குமொய்த்திடுவளனுமலர்த்திருக்கண்களாற்கண்டான், மொய்த்திடாமகிழ்வுற்றன்நதிக்கரைக்கேமுதல்வனைக்கயிலைநாயகனை, நெய்த்தபூங்குழலாள்பாகனைப்பூசைசெய்திடநினைந்தனன்னிருபன். 40

மலைமாமுனிவன்கலசநின்றிழிந்துவாசமார்சந்தகில்மலர்கள், இலகுமாமணிமுத்தெழில்பெறவேநதியெறிதிரையமுதநீர்ப்பொன்னி, யலைகொணீராடியருமறைக்கடன்களாற்றிநீற்றொழியொடுமிருந்தான், னிலைகொள்வானின்றும்பெருந்திருவாக்குநிகழ்ந்ததுநிருபனோர்ந்திடவே. 41

அரும்பெறற்குபேரவுத்தரதிசையினைபரைக்கடிகையினளவிற், பெருந்திருமஞ்ஞனமர்ந்திடுமேல்பாற்சன்னதிபெற்றவேதத்தின், றிருந்திடுயாசினீழலிலுறைவான்றேவர்கடேவனெம்பெருமா, னிருந்திடுமுனிவோரிறைஞ்சிடுமமரரேத்திடுந்திருத்தவத்துறையே. 42



எழுஞ்சுடர்ச்சோதிச்சுயம்புவாமிலிங்கமெம்மையாள்பெருந்திருவாட்டி, தொழுந்திருச்சரணத்திறைவனோடுறையுஞ்சுரர்துதித்தனர்பகைக்கஞ்சிக், கொழுஞ்சுடரெறிப்பவப்பரம்பொருளாங்குன்றவிற்குழகன்கூற்றுதைத்தோன், வழிந்தபேரருளோடெதிர்ந்தவர்க்கருளவாகைகொண்டார்த்தனர்வானோர். 43

வெந்திறலமரர்க்கருளியவிசையாபுரமெனமேவுமோர்நாம, மந்தமானகரத்திந்திரனமரர்ன்பினிற்பூசனைபுரியக், கந்தனுங்கணிறுநந்தியும்பரவக்கன்னியோடென்னருங்கடவுள், வந்தருள்புரிந்தானத்திருநகர்பாலென்பரம்மாநகர்வணங்கி. 44

விண்டுவுமறியாவண்டர்நாயகனைவிரைமலராலரிச்சிப்பாய், தண்டுளிநறவம்வருமலரோன்றேசாத்தினுஞ்சகலமுந்தருமால், வெண்டருமியக்கர்க்கரசனின்னினைவிலியைந்தலையாவையும்பெறுவாய், மண்டிடுஞ்செல்வமெனறலுங்குபேரனவந்தனன்தவத்துறைமருங்கே. 45

முற்றும் ஆகச்சுருக்கம் 13-க்கு செய்யுள் (568).

---

## 14 வது குபேரன் பூசித்தவத்தியாயம்

வயலெலாஞ்செந்நெலயலெலாங்கன்னல்வரம்பெலாங்களைகளைகுவளைப், புயனுலாஞ்சோலைப்புறம்பெலாந்தடங்கள்புரமெலாமாடகூடங்கள், முயலிலாமதியமுகத்தியர்கமலமுகைகுலாந்தனத்தியர்மொய்ம்மைக், கயனுலாங்குவளைவிழிச்சியராடுங்களமெலாங்காளையரீட்டம். 1

வேறு

தெண்ணீர்ப்பழனத்திடைக்கிடங்கரெங்குமெங்குஞ்செங்கழுநீர், மண்ணீர்த்திடர்களெங்கெங்கும்வளர்பைந்தாழைமஞ்சளிஞ்சி, பண்ணேற்புறுநான்மறுகெங்கும்பாடலாடல்பயின்முழவம், வெண்ணீற்றழகார்மனையெங்கும்விருந்துந்திருநாளும்விவாகமுமே. 2

கன்னற்பயிரொத்திடுஞ்செந்நெற்கன்னற்கமுகொத்திடுங்கமுகு, மன்னூற்றுயர்தெங்கினையொக்குவளர்தெங்கமமரர்தருவொக்கும், பன்னூற்றிடுமஞ்சளைநிகர்க்குமிஞ்சிமஞ்சள்ப்பயிர்வாழை, யென்னத்தழைகொண்டெழுந்திடுமவ்வாழையிமையோர்தருவேய்க்கும். 3

செய்யகுவளைநறுமலர்தான்செங்கேழொக்குஞ்செங்கேழ்ப்போ, தையாணிபூங்கமலமலர்க்கொங்குஞ்செக்கர்க்கமலம், வையநடுமேருவின்றென்பான்மணிநீர்நெடுமானதவாவித், தெய்வமலராமளவிலிதழ்ச்செம்பொற்பதுமமொத்திடுமால் 4

தழையார்பொழிலின்முகில்கிடந்துதண்ணார்துளிவிண்ணிடைபிலிற்றக், கழைதெங்காலைபாய்ந்திடவக்கழைச்சாறெதிர்விண்ணெடுத்தேற்று, முழைவாய்மழக்கன்றினுக்கிரங்கியூறுநீர்வாவிபடிமேதி, பொழிதீம்பாலின்பெருக்குடனேபொன்னிப்பெருக்குமண்ணூறுமால். 5

முல்லைத்துடிநேரிடைமாதர்முன்றிறோறும்வளர்முல்லை, கொல்லைகளவோடிகழ்மறையோரகங்கடோறுஞ்செண்பகக்கொல்லை, வில்லைக்கடியுறுநுதன்மடவார்மின்னுக்கொடிபோன்றளயில்லை, யெல்லைப்பொருவுமணிமாடத்தெழிலாரவ்வூரிடத்தெல்லை.

வேறு

சந்தனம்விடுப்பவந்தவாடவருந்தையலுமிறைத்தசந்தனமே, நந்தனவனத்துநவையறுங்கழனிநன்னிலமெங்குநந்தனமே, வந்தனமெனத்தேவினைமறையோரைவந்தவர்புரிதல்வந்தனமே, தந்தனமெனக்கேட்டிடுமுனங்கொடுத்தல்தருமத்திற்றேடுந்தந்தனமே. 7

தானத்தனிப்போரகங்களிப்பார்தானத்தளிப்போரகங்களிப்பா, மீனத்துயருங்கொடிகாப்பாமீனத்துயருங்கொடிகாப்பாங், கானத்தரிகொள்காவிரிவாய்கானத்தரிகொள்காவிரிவாய், வானத்துறையுந்தவத்துறையேவானத்துறையுந்தவத்துறையே. 8



திருத்தவத்துறையுந்திருநகர்முனிவோர்தேவர்களனுதினம்போற்றுந், திருத்தவத்துறையைச்செபித்திடவெனவேசெய்யவன்மைகுமானதரந், திருத்தவத்துறையினீர்ச்சிவகங்கைதேவெனச்செகத்தவர்போற்றுந், திருத்தவத்துறையின்பெருமையையவர்க்காற்செப்பவோர்கற்பமேசெல்லும். 9

வாளைபாய்தெங்கிள்பாளைவாய்விண்டமலர்கள்செம்மாங்கனித்தேறல், தாளதாமரைச்செம்மலரிடைச்சொரிதல்தழங்கழலிற்பொரிநறுநெய், வேளைபார்த்தமரர்திருத்தவத்துறையில்வேள்விசெய்பலனறிந்தகல, நீளிடைநின்றங்கியற்றுதல்போலுநிலத்தடியுறுமையை நினைந்தே. 10

குடவளைக்குவளைமடைமதகிடையின்குளிர்மணியினைச்சினைத்தெனவே, யடைகிடந்தெகினமவணவனுறைதலன்னகர்ப்பொன்னனாழகு, நடையினுக்கிடைந்துமடமைகொண்டிந்தநற்கருவுயிர்த்ததினடையாற், கொடியிடைமடவார்நடையினைவெல்வான்குறித்தெனக்குலவுமெங்கெங்கும். 11

கவிழ்குலையரம்பைகுவிமுகப்புறக்கூன்கனிகனிந்தொழுகுறுந்தேறல், துவரிதட்கனிவாய்த்துடியிடைமடவார்சூடகச்செங்கரத்தேந்து, மவிரொளிவீணைதந்திரிகாட்டுமஞ்சுகக்கிஞ்சுகவாயார், வவியுணல்பாகத்தைவிரல்காட்டும்வனரிசைமலரளிமூட்டும். 12

திங்கண்முன்னிலவின்மங்கையராடுஞ்செய்கைகண்டஞ்சுறுமஞ்ஞை, யங்கவரளகமங்குலென்றெண்ணியச்சதியிலாடிநாணுறுமாற், பங்கையமுகச்செங்கொங்கையர்வதனம்பனிமதியெனப்பட்டர்சகோர, மிங்கிவரறிந்துநகைத்திடவெழுந்தவிளநிலாமுக்கியேயேகும். 13

பஞ்சின்மெல்லடியார்படைவிழிக்குடைவார்பகைஞர்களிகல்படைக்குடையா, ரஞ்சுவர்மாதரலர்முலையானைக்கடன்மதயானைகட்கஞ்சார், குஞ்சிசேர்முடியினவரடிப்பஞ்சின்குழம்புறுங்குறிகொடுகுலாவு, மஞ்சுசேர்கொண்டையினுடைவர்தொடைக்கிவளர்கிளிவிடுவர்மானனையார். 14

ஊடல்கொண்டுயர்ந்தமாடமாளிகைமேலோவியம்போன்
றுறைபவள்முன், ஊடல்கொள்தடந்தோளாடவனூடலகற்று
வான்விரகினனைந்து, நாடியேகறைப்பல்லாடியிற்காட்டநயந்து
பற்காட்டினனென்ன, வாடிடைநகைப்பலூடல்தீர்ந்துவக்குமா
டங்கள்மலிந்தமாநகரம். 15

வாங்குநுண்மருங்குலேங்கநீங்குறுதமகண்முலைக்குவட்டை
யோர்வளைக்கை, தாங்கியேபந்தாங்கோங்கியேயடிப்போர்தமது
குங்குமத்தனத்திணையா, யீங்குணைப்பகர்வரெனவுருத்தடித்தே
பேற்றிடநாற்றெருமருங்கிற், றேங்கமழ்தென்றல்முன்றில்கள்
தெற்றிமுற்றவுந்துத்தியேதிரிவார். 16

மரகதமணியுமாணிக்கமணியும்வளரொளிப்புதியநித்திலமு
ம், விரவுறவெனக்காய்பழம்பசும்பாளைவிரிந்தபூநிரைத்தபைங்
கமுகந், தருவுறுமூசல்வீசிவாளுடத்தையலார்மின்னொளிவீச்செ
ன், றருமுகிற்றுளியிப்பியின்மணியாக்குமளப்பில்பன்மரங்களுந்
தழைக்கும். 17

மாடகமுறுக்கித்தந்திரிதிருத்திமந்தரமுதல்வருமிசையிற்,
பாடிடும்வீணைமாதர்தமிடறேபரித்திடும்வீணையோதெரிதல், கூ
டுறுதென்னவிளரிசையெழாலுங்குழைந்திடக்கற்கள்சாந்தரைப்
பேர், பாடல்விட்டிடும்போதரிஞ்சுவரிசைக்கிற்பாவையோதிம
மெனப்பதிவார். 18

கூந்தலங்கமுகோபூந்துணர்மாந்தர்கூந்தலோவென்றிவை
தெரிக்க, மாந்தர்களளகமவிழ்த்துநீராடுமகளிர்கள்வனமுலைவத
னஞ்சேந்தவாய், விழிகள்முகைமலர்க்கமலங்குமுதஞ்செங்குவ
ளைகளென்ன, வாய்ந்தெழுமளிகள்சூழ்ந்திடுமாடில்மயங்குறு
மெழில்வயங்குறுமால். 19

கருநிறநீலங்கமலஞ்செய்குவளைகயிரவஞ்செண்பகந்தளவ,
மருவளர்கோங்குகுழல்முகமதரங்கண்மொழி னாசிவாயெயிறே
ங், கிருதனமேய்க்கும்மலரென்னுவேந்திழையாரெறிந்தாட, வ
ரியினமறியாதவையவைமலர்களவணிவனேடிமீண்டயரும். 20



தம்மனைமாடத்தம்மனைகழங்குதையலார்கையுநுண்மருங்
கு, லிம்மெனவிறுமென்றென்றறிந்தொன்றையேற்றிடல்போல
வாட்டயரச், செம்மைகொள்பனத்துக்காளையர்திரண்டுசேணெ
ழுநோக்குவாரண்ணாந், தம்மவோவாசையலரிமேற்கண்வைத்
தருந்தவமாற்றுவார்போலும்.

நல்விசேர்விழியார்செவ்வியவதரங்கொல்வையங்கனியென
நயந்து, கவ்வுமாகாப்பைங்கிள்ளையுள்ளுறலுங்கண்டுமுன்கொ
ண்டிடும்வடுவை, வெவ்வமுற்றதுவென்றிகழ்ந்தவன்பயிற்றுமி
றைதிருமுகங்களிலியம்பு, மவ்வனைகேட்டபூவைகள்போக்கவரி
யகாரணமறைந்திடுமால். 22

சந்தனாடவியிற்றவழ்ந்துபூங்குவளைத்தண்பணையெங்கணுமு
லாவிக், கொந்தலர்ந்துணர்ப்பூநந்தனவனத்துக்குலவியேகுளிர்
மணங்கெழுமி, மந்தமாருதம்வந்தசைதிருவீதிமருங்கெலாமாதர்
நுண்மருங்குற், செந்திருவனேகர்முன்றிருப்பெறுதல்தெரிந்த
வண்செறிதல்போற்செறிவார். 23

மாங்குயிலேங்கவாங்குரைபகர்நுண்மருங்கினார்நெருங்கு
பன்மாடத், தாங்குறவமரர்தாங்குருவவாவுற்றடிநிலனுறுமையா
லயர்வார், பாங்கினந்தணர்களருமறைவிதியிற்பரிந்திடுவேள்வி
யிலவிகள், வாங்குறவருங்காலினைகரத்தேவதிந்திடப்பிறந்தி
லேமென்பார் 24

இருக்கெடுத்தோதியருக்கியங்கொடுக்குமிருபிறப்பாளரு
ளியாகம், பெருக்கியவோங்கும்யூபங்கண்ணாட்டிப்பிறங்குவவ
றங்கொளுஞ்சுருதி, வருக்கமூவாறுபுராணமோராறுசாத்திரமிரு
திகளனைத்துந், தருக்கமிட்டறிந்தோஞ்சிவன்பொருளென்னத்
தாபித்தசயத்தம்பம்போலும். 25

ஞானமாமறையோர்முனிவருக்கூட்டுநாற்றிசைச்சாலைக
டோறுஞ், சேனமாம்பறவைபடுத்தவைவிளங்குந்திருத்தவத்து
றைசிவனுமைவாழ், தானமாமிதன்மேற்பறந்திடனீதித்தருமமன்
றெண்ணியத்தலத்தை, மானமார்பறவைபடிந்தநாற்றிசையும்வ
ணங்கல்போற்றனித்தனிவயங்கும். 26

வேறு

பாரெலாம்பூவின் வாசநீரெலாம்பதுமநீலங், காருலாஞ்சோ
லையெல்லாங்கருங்குயில்மயில்களன்னம்,பேரெலாமுடையானும
ம்பேச்செலாமாணூர்கீர்த்தி, யூரெலாஞ்சைவச்சேர்வையுமாபதி
யொருவன்றெய்வம். 27

மங்கலமுழக்கமெங்கும்வைதிகரிருக்கையெங்குந், தங்குறு
ந்தருமமெங்குஞ்சைவர்கள்மடங்களெங்குங், கொங்கலர்தொங்
கலெங்குங்கோடியகிடங்களெங்குந், தொங்கலுங்கொடியுமெங்
குந்தோரணவாயிலெங்கும். 28

பூரணகும்பமெங்கும்பொலிந்திடுமாடமெங்குந், தாரணிவி
தானமெங்குஞ்சத்திரச்சாலையெங்குங், காரணீதியெங்குங்கல்
விகேள்விகளெங்கெங்குஞ், சீரணிமுனிவர்தேவர் திரண்டிடுங்
கோயிலெங்கும். 29

வேறு

அங்கத்திருநகர்தங்குற்றிடும்வளமம்மொற்பதுமனேயறை
கிற்பான், சங்கத்தமிழொலியங்கத்தொடுமறைசந்தத்தெழுமொ
லிமலிவாகித், துங்கத்தவரொடுமின்பப்பனவர்கள்துன்பற்றிடமி
குமனுவோதிக், கங்குற்பகலொடுதங்குற்றனர்சிவகங்கைத்தடவ
ளனளவேதே. 30

பண்டைக்கொடுவினைவிண்டற்றதுபசைப்படிறற்றது முழு
நோய்க, ளண்டுற்றில்மலமவலத்தொகுதிகள்படியத்திவலைகளது
பட்டே, மண்டுற்றதுதிருவளனுற்றதுமனைமலிவுற்றதுகவிதைக
ளென்றே, கண்டற்புதமொடுமிசைவார்மிகுசிவகங்கைத்திருநகர்
கண்ணுற்றான். 31

வேறு

நறுந்துணர்ச்சுகந்தந்தழைதருநாட்டைநாட்டத்தால்நோ
க்கினனமது, பெறும்பொருணிதியத்தளகையுங்கண்டோம்பின்
னுளநன்னகரெல்லா, முறுந்திருக்கண்ணானோக்கினேமிந்தவூர்ப்
பெருவளனுமிங்குறைவோ, மறந்திகழ்தருமநிதியும்நமக்கேயதிச
யங்கொடுத்ததென்றிசைத்தான் 32



வேறு

காண்டொறுங்காண்டொறுங்கண்களிப்போடுந், தூண்டிட
வுளமகிழ்வித்துச்சோதியா, யாண்டவனுமையொடிங்கிருக்குமா
தலாற், சேண்டிகழ்வளனெலாற்செறிந்ததாமென்றான், 33

வேறு

அருந்தவச்சூதன் முனிவருக்குரைப்பானளகையாளரசனு
ங்கெய்தி, பெருந்தவத்துறையும்வயிரவிவனத்திற்பெருகியபெறு
ஞ்சினகரமு, மிருந்தவத்தோர்களிருக்கையும்பாந்தளெலியொடு
ங்கூடிவாழ்வதுவுந், திருந்தலர்கண்ணுற்கண்டனன்றெய்வத்தட
மெனச்சிந்தனைசெய்தான். 34

நுணங்கியகேழ்வி முனிவிர்காளிந்த நவலருந்தவத்துறையு
றைவோர், வணங்கியகுணனுமிணங்கியதயவும்வாய்மையும்நேய
முமுடையோர்; கணங்கம்ளாடுறையுங்கண்ணுதற்பூசைகடவுள
ராற்றிமாற்றலரைப்,பிணங்கிடவென்றார்பெருந்திருவாளன்பேர
ருட்பூசனைப்பேற்றால். 35

தண்டலையுடுத்தவத்துறைகண்டோர்சன்னதிமுன்னர்வந்
துற்றோர், கண்கவர்சுயம்புக்கடவுளைப்பூசைகருதினர்யாவரே
யெனினு,மண்டர்கள்சூழவணிவிடைமீதேயம்மையோடப்பனைக்
காண்பார், பண்டையதாபத்திறையமுமிலையப்பதியன்றிமன
மொன்றிற்பதியா. 36

நறைகொள்செங்கமலத்துறைமறைமுதல்வனல்கியசனக
னேமுதலோர், முறைபிறழாதமுனிவர்களெழுவர்முத்திபெற்ற
த்தலநீங்கா, இறைவனுந்தயவினிருப்பதத்தலமேஇரும்பொருள
ணுவளவீந்தால், நிறைபொருண்மேருநிகர்க்குமத்தலத்தினிலை
மையைநிகழ்த்துவாரெவரே. 37

நீற்றொளிதழைத்துநிலவியமேனிநிருமலவேதியனொருவ,
னேற்றிடவன்னமத்தலத்தளிக்கிலெண்ணிலார்க்களித்திடும்பல
முஞ்,சாற்றுதலரிதத்தவத்துறைநகரைச்சார்ந்தனன்புட்பகத்தி
ழிந்தே, யேற்றுயர்கொடியெம்மிறைசினகரங்கண்டிறைஞ்சினு
ணிறைந்தவுண்மகிழ்வால். 38

அன்னநகர்விலமாய்வருதலும்வேதமடைவுறப்பிறித்தவர்ப்
பயந்தோன், முன்னுறக்கண்டுபணிதலுமுனிவன்மொழிகுவானி
வ்விடைபோந்த, தென்னெனவினவியாசனமுதவிலங்குமாச்
சிரமத்திலிருந்து, பன்னருந்தலங்கன்கண்டுவந்தமையும்பணிவி
சும்பெழுமொழிப்பண்பும். 39

அடைவிலாங்குரைப்பப்பராசரன்வினவியளங்ககாவலன்
சிவபூசை, யுடையவனாகியுயர்ந்தனைநினக்காரொப்பிந்தப்பொற்
பதிப்பெருமை, படிமிசையாவர்பகருவரம்மபரம்பொருணிரந்
தரமுறையு, மிடமிவையல்லால்வேறுமொன்றுளவோவெமக்கு
நித்தியமளித்ததுவே. 40

மதுரமாமமுதம்வானவரொடுநான்வைத்திடவிலிங்கமாய்வ
ளர்ந்த, ததிசயமிந்தத்தலமிதிற்சுயம்புவாகியயேகநாயகனை, விதி
முறைபூசையாற்றினீவேண்டுமெய்வரம்பெறுகெனவிளம்ப, மு
துமறைமுனிவன்மொழிப்படிபூசைமொழிமனமடக்கியேமுயல்
வான் 41

நாடினனவ்வூர்நலனெலாந்திருமுன்னண்ணினன்சிவகங்
கைநீரினீ, ராடினன்பூதியணிந்தனன்னனமாற்றினன்சுயம்பு
வைக்கண்டான், ஓடினன்பாடியடிக்கடிபணிந்தானமைத்துவாழ்
வித்தவெம்மையா, தேடிநீயாண்டாயென்றவன்பூசைசெய்திட
வெய்தினன்சிறந்தே. 42

கங்கையாற்றிகழ்நன்னீரினிலாட்டிக்கந்தமுஞ்சுகந்தனன்
மலரு, மங்கையாற்சாத்தியாடையாபரணமணிமணிமகுடமுத்
தார, மெங்கணுயகனேயெனவணிந்தமுதோடீரம்புனல்பலாதிக
ணிவேதித், திங்கெமையாளென்றினியதாம்பூலமேற்றினனியக்க
ர்கள் கோமான் 43

இயக்கர்கந்திருவர்முனிவராமரர்ருங்கணமுரகர்நின்றேத்
த, நயக்குறநிருத்தகீதவாத்தியங்கள் நாற்றிசையினுந் தழைத்
தோங்க, மயக்குறுவமர வரம்பையர் நடிப்பமலர் மழைமாரியும்
பொழிய, வியக்குமுன்வருணன்றனக்கருள்சுபைவிளங்கொளிம
ணியினை விருப்பால், 44



தேசொளிவிடங்கச்சோதியாமிலிங்கத்தேவர்கடேவனுக்க
ணிந்தான், வீசிடக்கவரிகவிகைநின்றோங்கமேம்படுகொடிகளுமி
டையப், பூசுரருக்குபுகன்றிடதூபதீபங்களேற்றியேசூழ்ந்தெம
மீசனைப்பணிந்தா, னுமையொருபாகாவென்னையாட்கொண்டரு
ளென்றான். 45

ஆண்டகைதிருமுனிவேதனமெல்லா மடியருக்கதிதியர்க்க
ளித்துத், தூண்டுசெங்கதிருமெதிருறக்கூசுங்சுணபந்தன்பிராண
னெப்பதனைப், பூண்டநாயகனைத்தவத்துறைப்பொருளைப்புரிகு
மழுமையொடும்புகழ்ந்தே, தாண்டவாவென்றாசூழ்ந்தடிபணி
யத்தரித்திலன்றவத்துறைநாதன். 46

இறைக்கிநித்தியமேகாட்டியோர்கலையேயென்றுமாங்கொ
ன்றைநீண்முடியும், விறற்கதிர்நயனமூன்றுமோர்பாகமின்னொடு
ந்தன்னிகரில்லான், திறற்சதானந்தந்திகழொளிமதியச்செய்
கையாந்தண்ணளிசிறப்ப, விறற்பெரும்பள்ளிமால்விடைமீதே
விபுதர்பூத்தூவவந்தனனால். 47

அச்சுதன்முதலோர்க்காருயிரளித்தவணிமணிகண்டனைங்
கரத்தோ, னச்சடல்வேலோன்நந்தியெம்பெருமானாரணனதியர்
சூழ, முச்சகம்பரவவருதலுங்கண்டான்முண்டகச்செங்கரங்கு
வித்தா,னிங்கையினடிப்பாடினனெதிர்வீழ்ந்திறைஞ்சியேபோற்
றன்மேயினனால். 48

வேறு

பவமகேசகிருபாகரசங்கரபக்தர்க்
கவமகத்துசெஞ்சூலவெண்கபாலவாதார
சிவசிதம்பரதிகம்பரகேசவபரதெய்வத்
தவதயாபரதவத்துறைநாயகசரணம், 49

பாலலோசனபாருதிகோடிப்பிரகாச
காலகாலமுற்காணகாரணகரண
மேலவாலவெண்பூதிபூஷணநிறுவிகார
தாலமேழ்புகழ்தவத்துறைநாயகசரணம் 50

வினைக்கமுத்திதந்தருளியநிருமலவிமல
வனைத்துமாகியதிவ்வியானந்தமுக்கண்ணா
வினைத்தகொன்றையவிச்சுவநாதமாதேவ
தனக்குநேரிலாத்தவத்துறைநாயகசரணம். 51

வேறு

சரணமென்றிவ்வாறேத்தலுஞ்செல்வத்தவத்துறைநாதனி
ன்னருளால், வரமெவைகேட்டிதருகுவல்குபேரமணிச்சுனைபத்
தொருமகுடந், திருவணியன்பாற்சாத்தினையென்றுதிருவுளஞ்
செய்தலுமளவைப், புரவலனுடலங்கம்பிதம்புளகம்போர்த்திடப்
புந்தியுங்குழைந்தே. 52

அடங்குறுவன்பாலடிமிசைப்பணிந்தேயறைகுவானார்வமீ
தூர, விடந்தடுத்தாட்கொண்டருளியதேசவிடங்கனேவேதநார
ணனா, நடங்கொளுந்தெய்வத்தாமரைச்சரணநாடுறக்கூசுவரென்
றால், முடங்குளமுடையேனெவ்வணந்துதிப்பேனென்றனுமெழு
கெனமொழிந்தான். 53

எழுந்தனனழுந்துமுள்ளமோடாடியெழுத்தினனீத்தநீள்
விழிகள், வழிந்திடமலர்தூய்வாழ்த்தினனையாமலரடிக்கன்பரு
ளென்னப், பொழிந்திடுங்கருணைப்பூந்தவத்துறையின்புகளள
காபுரியெனும்பேர், மொழிந்திடலின்றமுதலிந்தநகர்க்கு முதல்
வவென்றெபெயர்மொழிக. 54

நம்மடித்தொழவுநினக்கிருநிதியுநலத்தகுதிருத்தகுசெல்
வ, மெம்மடிக்கன்போடுந்தனமென்றேயீந்துபோந்தனன்சுயம்
பிலிங்கத், தம்மதிச்சடையோர்போற்றியங்கமர்ந்தவமுதலிங்
கத்தையுமர்ச்சித், தம்மணிமிடற்றோன்கரதலேசுரமாமிருகை
யால்முனியியற்றுதலால். 55

என்னநின்றேத்தியிடையறுவளங்கோனிரும்பதியோ
ருக்குமிறைக்கு, மன்னிடவளித்துவணங்கியதலத்தில்வாழ்ந்த
வனருளினாற்போந்து, பொன்னிருநிதியமளவிலாச்செல்வம்பொ
ருந்தியேயளகையிற்போந்தான், தன்னைநேரில்லாத்தவத்துறை
செல்வந்தருநகரெந்தஞான்றினுமே. 56



உச்சிநீண்டகன்றபச்சிலைப்பரசினுயர்வினைச்சிறைபிருந்தத
னா, லச்சிவபுரயச்சவத்தவாரணியமெனச்சனக்குமாரனுக்கன்
பி, னிச்சையிற்சிலாதனருளியனந்தியிறையவனருளினனென்
னச், சொச்சமாம்பொருளிற்றோய்ந்திடுஞ்சூதன்சூழ்ந்திடுமுனிவ
ருக்குரைப்பான். 57

குபேரன் சிவபூசினை வத்தியாயம் முற்றும்.

ஆகச்செய்யுள் 625.

---

## பதினைந்தாவது அமுதலிங்கந் தோன்றிய வத்தியாயம்.

எங்குலத்தேவர்நந்தியெம்பெருமானியம்பியதனைத்துங்கே
ட்டிறைஞ்சித், தங்குறுமன்பிற்சனற்குமாரவென்றலைவனையமு
தமாமிலிங்க, மங்குவந்ததுவும்பாராசரன்பூசையாற்றியவாறதே
தென்னச், செங்கனிவாயாற்பகர்ந்தனனந்திதேவெனச்சூதன்
செப்புவனால். 1

பைந்துளாய்ப்படலைச்செந்திருமணாளன்பண்ணவர்முனிவ
ரர்பரிந்து, நந்துலாநாலைப்பாற்கடல்கடையநண்ணியதின்னமுத
ன்னா, ளந்தநல்லமுதைநான்குகூறாக்கியமரர்கள்தங்கள்பங்கன்
றிப், பந்தமாரசுரர்தமையும்வஞ்சித்தபங்கையுநுங்கினார்பகை
யால். 2

மற்றொருகூறுதென்புலவானர்மகிழ்ந்திடவழங்கினார்முனி
வர், உற்றிடுபாகம்பாராசரன்வாங்கியுத்தமதலமெதென்றுன்னிப்,
பற்றொடுவிளங்குமடியவரோடும்பரிவினாற்போந்தனன்பழனஞ்,
சுற்றிடுந்துட்டவையிடனெலாந்தாளஞ்சுடர்விடுந்திருத்தவத்து
றையில். 3

ஆரணன்றேவர்காரணன்முதலோரானுதினம்போற்றுமி
ன்னகரிற், பாருளோர்யாவராயினுங்கணத்திற்பாதியிலாங்கம
ர்ந்துறினும், பூரணன்கயிலைபொருந்துவரிவ்வூர்ப்புராணங்கள்
கேட்டவர்பாவ, மாரணமாகும்புண்ணியம்வளருவாழுநாண்மிகு
ந்துவாழ்ந்திடுவார். 4

திவ்வியஞானத்தலமிதென்றெண்ணிச்சிவகங்கையாடி நீறணிந்து, கொவ்வைவஞ்செவ்வாய்ப்பெருந்திருவாட்டிகொழுநனை மழுவலனேந்து, நவ்வியஞ்செங்கைநாதனைச்சுருதிநன்முறையாற்பணிந்தமர்ந்தே, வெவ்வினையோர்களடையினும்பாவமெறிந்திடுந்திருத்தவத்துறையில். 5

மூவுலகத்துமுனிவர்கடமையுங்கொணர்மின்களென்றுமுன்னின்ற, வேலவர்தம்மைவிடைகொடுத்திடுமியாறையுமழைத்துவந்தனராற், பாவடிபுழைக்கைமும்மதவேழம்படர்வுறும்படைமன்னர்மறுகிற் றாவியப்பனிநீர்ச்சந்தமெண்டிசையுந்துதைந்தெழுந்திருத்தவத்துறையில். 6

வந்தநன்முனிவர்வந்தனைபுரிந்தார்மகிழ்சிவகங்கைநீராடிச், சுந்தரநீறுதரித்தனர்சூழ்ந்தார்சுடர்மணிச்சுயம்புவின்கோயிற், கந்தனைக்களிற்றைப்பெற்றகன்னிகையைக்கடவுளைக்கண்களிததும்பப், புந்தியாற்றொழுதுபுகழ்ந்தபின்முனியாற்புகுந்தனர்பணிந்தவணிருந்தார். 7

ஆயகாலையினிலசுரர்கள்சுரையையச்சுதமோகினிமயக்கால், வாய்மடுத்துண்டபின்றெரிந்தசுரர்வஞ்சித்துமறைந்தனரென்றே, பாயலையுததிப்புவியெலாம்பார்த்துப்படைகொடுமேவினர் படைப்பகட், பீயுயர்கனகமணிநெடுமாடம்விளங்கியதிருத்தவத்துறையில். 8

கண்டனரசுரர்முனிவரமுதக்கடமொடுமிகுந்தவைகமலக், குண்டங்களுடுத்தமுதெயில்வளைந்துகொண்டனர்வாயில்களனைத்திற், றண்டர்களெண்ணாயிரரொடுந்தென்பாற்சார்ந்தனரவுணர்கள்தலைவன், மண்டினன்மேல்பாலாயிரப்பத்தாமாற்றலர்தம்மொடுமேல்பால், 9

வஞ்சகரெண்ணாயிரரொடுங்கீழ்பால்மன்னினனந்தகன் மதங்கொள், குஞ்சரமோர்பத்தாயிரம்பெலன்கொள்கைகயன்வடதிசைகுறுகி, யெஞ்சலிலெண்பத்தெண்ணாயிரரொடுமிறுத்தனனிவ்வணமசுர, ரஞ்சுரவார்த்துச்சூழ்ந்திடமுனிவரமுதினையவனிக்குளமைத்தே. 10



அருந்துதிபரவும்பெருந்திருவாட்டியழைத்துவாழ்வருநன் தவத்துறையான், திருந்துசன்னதிமுன்பராசரன்முதலாய்த்திரண்டனர்பணிந்தனர்கண்ணீர், சொரிந்திடச்சிவாயசுராதிபவரியசுயம்பிரகாசமகேசர, வருந்தியவன்பால்வணங்குசெஞ்சரணவானவர்ஞானநாயகனே. 11

எங்கணாயகனேயாலமுண்டமரரிடர்கெடுத்தாண்டவா நின்றாட், பங்கையமடைந்தோமையவென்றிறப்பப்பணிமதிக்கொழுந்தணிபரமர், மங்குலூர்தியனைவரவழைக்கிதனைமாற்றெனமுனிவரமகவான், றங்கமாமுகம்பார்த்தசுரர்கள்முதந்துய்த்திடிற்புவியெலாந்தலைப்பர். 12

ஆதலாலவரையட்டெமையளிப்பாயென்னவாகண்டலனகல்வான், மீதுலாமேகராசரையழைத்துவிடாதுநீகனமழையாகப், பாதகவசுரர்படைமிசைப்பொழிகதுபாற்றெனப்படர்ந்துகால்பொழியச், சாதலாயினர்களசுரர்களந்தத்தலைவர்கள்தணிந்தனரிருந்தார். 13

இன்னமுததனையீசற்குத்தென்பாலிரும்புவியுட்புதைத்திருந்தார், பொன்னவிர்சடிலப்பராசரன்முதலோர்பூந்தவத்துறைநடுப்பொலிந்த, தன்னிகரில்லானருளினாலந்தத்தலைவர்கடம்மையுந்தடிந்தே, யன்னநல்லமுதம்பராசரனெடுப்பவிறுகியதந்நவாமுதம். 14

கண்டனன்வேதக்கடற்கரைகண்டான்முனைதன்னையின்றெடுத்தோன், கொண்டனன்மகிழ்வுகுளிரமுதத்தைக்கோகனகக்கரங்களினு, லண்டநாயகனாரிலிங்கமாயமைத்தானாதலாற்கரலேச்சுரமாம், பண்டையெம்பரர்க்குத்தெக்கணத்தமர்ந்தபச்சிமத்துவாரமாய்ப்பரிதகே. 15

பஞ்சனமாட்டிச்சந்தணிந்தலர்கள்மறைகொள் மந்திரங்கொடுசாத்தி, நஞ்சமுதுண்டவினியநல்லமுதநாதற்குநல்லமுதூட்டிப், பஞ்சின்மெல்லடியாள்பங்கனேயென்றுபரிந்திந்தவமுதலிங்கத்தே, தஞ்சமதருளியமர்ந்திடவேண்டுந்தண்ணளிபரித்தெனத்தாழ்ந்தான. 16

எழுந்தனன முனிவர்தம்மொடுஞ்சயம்பாமிறைமுனமெம் மையாண்டவனே, மொழிந்தனின்னருளாலித்தலத்திலிங்கப் பிதிட்டையும்புரிவித்தாயென்று, மொழிந்தனனபுறம்போந்தத் தலத்திருந்தானமுனிக்குழாத்தோடும்பினகுபேரன், வழிந்த பேரனபோடாங்குநெங்கள்வரதனைப்பூசனைப்புரிந்தே. 17

எங்குளோர்களுமத்தலத்தையிச்சித்தேயிறைஞ்சினர்க்கன் றுமாறனைபழுவு, மலைகையினேந்திநாந்தகமநங்கிலாடகததுடை யிடைவிக்கித், துங்கமாமணிப்பொற்பிரம்பொடுமமர்ந்தோன் சுராசுரமுனிவரர்தொழுந்தாட், பங்கயனவேதாகமபுராணங்கள் பகர்குருநந்தியெம்பெருமான். 18

அமுதலிங்கந்தோன்றியவத்தியாயம் முற்றும்.

ஆகச் செய்யுள் (643)

---

## 16-வது பராசரன் பூசித்த வத்தியாயம்.

முண்டகத்தொருவன்றநுஞ்சனற்குமாரன்முதல்வனுநந் தியைவணங்கித், தண்டகன்முதலோர்தவக்ளைத்தடிந்ததெவ்வண ஞ்சாற்றிடல்வேண்டும, பண்டைநூல்வல்லபராசரர்க்கமலனபரி வுடனருளியதேது, புண்டரத்தழகுபொலியுநங்குரவவடைவெங் டும் புகலெனப்புகலவான். 1

அக்கதைகேட்போர்க்காயுளுந்திருவுமரனடிக்கன்பும் வா தெய்து, மிக்கசிந்தையினில்வேண்டியதடைவர்வேதபாரகர்மி டைந்தோங்குஞ், செக்கரஞ்சடையோன்றிநகராயதிநத்தவத் துறையினிவிமைப்போ, தொக்கலோடேனுந்தனித்தேனுமு றைவோரச்சுவமேதமேயுறுவார். 2

பெருந்திருவாட்டிபெருந்திருவாளன்பெய்கழற்றுமனை யொருகாற், பரிந்துளனேனுமறிகிலானேனும்பார்த்திடிற்றவத்து றைபணியி, லருந்தவமுனிவேயவனவன்குலத்தோரளப்பிலர்பா வங்களெல்லாம், பிரிந்தொருவிடத்துந்தங்கிடமின்றிப்போமற் பஞ்செனப்பிரியும். 3



அருந்தவராறியாமுத்திவீடளிக்குமயோத்திமாயாபுரிகாஞ் சி, திருந்தியவவந்திதுவாரகைமதுரைசிவனருட்காசியேழ்புரியு ம், வருந்தியகலியில்போகமுந்திருவுமனத்திடைநினைத்தவையெ ல்லாம், பொருந்திடவுதவிமுத்தியுமளிக்குஞ்சத்தியந்தவத்து றைப்புரியே. 4

ஆதலாலறமேமுதலியநான்குமளித்திடுந்திருத்தவத்துறை நே, ரோதுவதலலபொனனனுவேனுமத்தலத்துதனிமெற் றை, மாதலங்களினீர்கோடிபொனகொடுத்தபகிமையையார்க லியுகத்திற், பூதலத்தெந்தத்தலத்தினுந்தருமமபொருந்துமோ தவத்துறைபோல. 5

கவிழ்தலைபரம்பைகனிகனிந்துடைந்துகவிழ்தருமினிபதண் டேறல், அவிசொரிநெய்பொத்தங்கினர்கமலததகட்டுகுந்திரு த்தவத்துறையிற், புவியுளோர்கருமமுதலியநானகுமபுரிந்திட வெளிதினிறபொருநதுந், தவமிலாராகாதேதின்பம்வேட்டதவத் துறைப்பிறப்பினுந்தணவார். 6

வண்டிலாஞ்சோலைத்திருத்தவத்துறையிலமாகமாதத்தரவி சியிற், கொண்டுறங்கனகத்துலையுறுந்தானங்கொடுத்திடின்முத் திமனனவர்க்காம, பண்டையிலலனயால்வறியனனவனுமபசும் பொனனேரனுவளவிந்தால், மிண்டியவேந்தாதுலைப்பலமதனி வியனபலமடைகுவரனறே. 7

இனியபால்பொழியுமிபல்மடியுடைத்தாயேழையும்பால் கொளவிரங்கிப், புனிதமாம்புனிற்றுக்கன்றுளவாகிப்பொன்னி னுற்றுளபுகொம்பணிந்து, வனைதரும்வெண்பட்டணிந்தநறபசு வைவளர்தவத்துறையினிறணிந்து, கனிதரும்தும்பிமறையவாக் களிக்கில்கணக்கிலாப்பலம்பெறுதுவருல். 8

இரவலன்கேளாதிவண்பரிந்தழைந்தேயீந்திடிலன்னசொ ன்னங்கள், புரவலராகிப்புரிபுரந்தளிப்பனபுண்ணியதவத்துறை ப்பெருமை, பரவுமாரெவரேபத்தலத்துறையும பராசரன்காலை நேர்டி, விறைகொணீறணிந்தவசுரனரச்செறுப்பாண்விமலனைப்பூ சனைபுரிந்தே. 9

மூலமாமனுதிச்சோதிலிங்கத்தைமுகுந்தனுமறிவுறுப்பொருளைப், பாலலோசனனைப்பார்வதிபாகப்பரஞ்சுடர்விடங்கனைப்பதியை, யாலநீழலானையழைத்துவாழ்வித்தவப்பனையொப்பிலாமணியைத், தாலமேழ்பரவுந்தவத்துறைச்சத்தவிருடிகள்தலைவனைத் தாழ்ந்தான். 10

ஒருபரம்பொருளேபோற்றியுயர்பரமேருபோற்றி, யிருவர்காண்பரியசர்வவீசனேபோற்றிபோற்றி, யருவுருவகிலநாதவருமறைபந்தத்தோங்கும், விருமனல்விழியாய்த்தேசுவிடங்கனே சிவனேபோற்றி. 11

ஞானநாட்டக்கனல்குரும்பனேசுபர்க்கியென்று, வானமாஞ்சடிலர்போற்றிவளரொளியுருவாபோற்றி, யானமாலயனார்சென்னியலங்கலாய்போற்றிகொன்றைத், தேனலர்தொடையாய்த்தேசுவிடங்கனேசிவனேபோற்றி. 12

சம்புவேபோற்றிசூலத்தடக்கையாய்போற்றிதன்னை, நர்புவோர்க்கருள்வாய்போற்றிநன்றிகொள்விசையாபோற்றி, யம்புபமதனைச்சுட்டவடலைத்தரித்தாய்போற்றி, சிப்புளானவனேதேசுவிடங்கனேசிவனேபோற்றி. 13

ஆதியுருவுமீறுமன்றிநின்றவனேபோற்றி, பேதியாவுருவபோற்றிபெரியமுக்கொழிலாய்போற்றி, சாதியாம்வேதாந்தத்துத்தத்துவப்பொருளேபோற்றி, சீதவான்மதியாய்த்தேசுவிடங்கனேசிவனேபோற்றி. 14

திருவொழுக்கஞ்சிலுள்ளேதிகழ்காருமுருகாபோற்றி, பெருவடமோசவிற்கைப்பிஞ்ஞகாபோற்றிவேதா, வரிமுகலமார்போற்றுமதிபதிமுகல்வாபோற்றி, திருவளரளகைத்தேசுவிடங்கனேசிவனேபோற்றி. 15

மேலவர்மேலாபோற்றிமிகுவரமருள்வாய்போற்றி, சீலமார்மிடற்றாய்போற்றிபேனைப்பெற்றாய்போற்றி, பாலுறுமடியார்துன்பம்பற்றறத்துடைப்பாய்போற்றி, சீலநான்மறையாய்த்தேசுவிடங்கனேசிவனேபோற்றி. 16



முப்புரமெரித்தாய்போற்றிமுந்துற்புருடாபோற்றி, வைப்படைமழுவாபோற்றிவானவர்புராணபோற்றி, யிப்புவனங்களின்றுளிடத்துறையிறைவாபோற்றி, செப்புமுக்கிரனேதேசுவிடங்கனேசிவனேபோற்றி. 17

சாந்தமாமுருவபோற்றிதவத்துறைத்தலைவாபோற்றி, மாந்தளிருறைவாள்கண்ணல்வளைத்தவின்மாறற்செற்றே, வாய்ந்தநான்முனிவர்காத்தெம்மன்னையைமணந்தாய்போற்றி, சேந்தனுற்போற்றுந்தேசுவிடங்கனேசிவனேபோற்றி. 18

ஆற்றல்வாட்டடக்கைப்பொல்லாவசுரர்களமுதைவாங்க, நாற்றிசைவாயிலெங்குநண்ணினுரென்னில்மாயை, யேற்றவர்தேவர்யாருமேற்றெதிர்மலையமாட்டார், நீற்றொளியழகர்நின்றுணிமூலலாற்பிறிதொன்றுண்டோ. 19

பசுபதிநீயேமற்றைப்பங்கயன்மாயனெங்கட், கசுபம்வந்துற்றுற்றீர்ப்பதாரெமையாண்டகோவே, மிசிதசித்தாந்தவென்னநிறையருள்சுரந்தானீண்ட, திசையிசைபரவுஞ்செல்வத்திருத்தவத்துறையெந்தேவே. 20

அஞ்சல்மாமுனிவீர்பொல்லாவசுரராற்பயமொன்றில்லை, வஞ்சர்பால்நான்குசத்திவகுத்தடல்கொள்வோம்நீயே, பஞ்சவக்காஞ்செபித்துப்பற்றுடனிவணீவாழ்வாய், தஞ்சமாந்துதியினாலுந்தவத்துறைவாசத்தாலும். 21

வந்துனக்கருள்செய்கின்றேம்வாழுமித்தலத்துவாச, முந்தியபிறப்புத்தோறுமுற்றியதவத்தோர்க்கல்லாற், சிந்தையினினைக்கலாமோதிரிதினத்தசுரர்தம்மை, நந்திடர்செய்வோமிங்ஙனிறத்தலாற்கைலைசேர்வார். 22

பார்க்குபகரிக்குஞ்செவ்விப்பராசரபற்றுளோர்க்கும், வரைக்குறுமனமும்வாக்குவேறதாய்வாழும்மாந்த, ரிரக்கமுமன்புமுள்ளாரித்தலத்தியாவரேனுங், காக்குறுமுடலம்விட்டால்முத்தியிற்கலப்பர்தாமே. 23

வரைந்திடாதுவான்சோலைபோல்வழங்குவோன்வறியோ
ன், றெரிந்திடாமுழுமூடனுந்திருத்தவத்துறையி, லிருந்துளா
ரெனிற்கைலையம்பொருப்பினிலிருப்பார்; பரிந்துகாலமூன்றுணா
ர்ந்தவரப்பதிபதிவார். 24

மூதறிவுடையோர்பெரியர்தம்முறவேமுயன்றிடவேண்டுமே
ம்முயற்சி, பேதமைநீக்கும்பெருமையையாக்கும்பெரியதம்பகை
பெரிலதுவும், போதமேயுதவும்மெவ்விதத்தானும்புந்தியோர்து
டர்ச்சியேவேண்டுஞ், சாதியாஞ்சந்தமரிதருவாளுஞ்சாந்தனுரி
டும்பகைத்தானும். 25

அவ்வணம்போலநும்மொடும்பகைகொண்டார்ப்புறவந்தவி
வ்வசுர, ரிவ்வருங்காலத்திமையவர்தமக்குமெய்துறுத்திருத்தவ
த்துறையிற், கவ்வைசேருடலங்கழித்தலாற்கயிலைகாண்குவர்கா
லநீண்டிருந்தா, லவ்விடைநெடுநாள்மாள்குவரின்றேயத்தருள்
புரிவமென்றன்னான். 26

என்றிறையருளிவாமபாகத்திலிருந்தருள் பெருந்திருவாட்
டி, தன்றிருமுகம்பார்த்தருளவத்தாயுந்தறுகண்வெங்காளிநால்
வரையே, யன்றலனுக்கியவரொடுங்காளியளவிலார்தங்களையே
வி, வென்றிடவிடுப்பப்போந்தனர்கொடிகள்மிடைந்திடமுர
சொலிமிகைப்ப. 27

வாளொடுபலகையெழுமழுத்தண்டம்வச்சிறந்தச்சுறுங்க
ணைகள், நீளுறுங்கொடுவில்நேமிதோமரங்கள்நிரைத்தனர்நிரைத்
துமாற்றலர்மேற், றொளொடுங்கரங்கள்சிரமுரங்கண்டஞ்சந்துக
ள்சிந்தினாசுரர், காளிகள்பொருதாராங்கரித்துந்தக்கள்வர்கள்
கலங்குறக்கடிந்தே. 28

ஏகமாகாளிசயந்திமற்தனிசூரிருஞ்சண்டகாதினியென்ன,
வாகைகொள்பத்திநால்வருமகிழ்ந்துவானவர்வானின்மேற்காண
ப், பாகுறுங்கரியைப்பரியினைத்தேரைப்பதாதியையொன்றோ
டொன்றடித்துச், சிகரச்சிதக்கடல்கடைந்தென்னத்திகாந்தங்
கள்சிதறிடச்செறுத்தார் 29



கண்டனரந்தத்தண்டகன்முதலோர்காஷத்தைவெல்பவர்
யாரே, யுண்டிடுங்கருமமுண்டிடவேண்டுமொழிந்திடவரிதென
வோதிச், சண்டவெங்காளிபதாதிகள்செயலைத்தனித்தனிநோக்
கியுட்டளர்வு, கொண்டனர்பின்னும்நின்றிடுமசுரர்கொலைக்கள
த்தமர்செயக்குறித்தார். 30

பராசரன் பூசித்த வத்தியாயம்முற்றும்.

ஆகசெய்யுள் (686)

---

## 17-வது மகாகாளிதண்டகன் முதலசுரரைச் சம்கரித்த வத்தியாயம்.

இருவகைச்சேனையுமெதிர்ந்துபோர்செய,
வெருவினரசுரர்கள்மெய்கள்சிந்தினார்,
பெருமைகள்மிடைந்தனவிவைகள்கண்டனன்,
கருநிறத்தண்டகன்கடியவுள்ளத்தான். 1

குறிப்பொடுந்தண்டகாசுரன்கூறுங்கூற்றுவனிவ்வுருக்கொ
ண்டே, செறுத்திடவந்தசெயலெனநினைந்துசேனைகள்யாவையு
ங்கொன்ற, விறற்பெருங்காளிசெயற்சமரினையும்வினையத்தால்
வெல்குவமென்றே, கறுத்திடுமுளத்தன்றுருகற்செற்றகன்னி
யைநோக்கியீதுரைப்பான். 2

அடல்செய்மாகாளியுனையிமைப்பொழுதினட்டல்கொள்வ
னெனவவனுரைப்ப, படர்தருசேனைத்தண்டகன்முன்னர்ப்பகரு
வாள்பயங்கொளவுரைத்தாய், நடலைகொணெஞ்சைப்பிளந்துன
துயிரைநடுவனுற்பிணிப்புறநயந்துன், னுடலிடைக்குருதிக்கடலி
னென்கைவாளுரமுறத்தோய்குதுமென்றாள். 3

பின்னுமொன்றுரைப்பாளெள்ளளவாய்நின்பேருடல்சிரமு
ரங்கரங்கள், பன்னியகழுகுபருந்துணவிருந்தாய்வழங்குவனம
ரர்கள்காண்பா, ரென்னுடைவலியுநின்னுடைவலியுமென்றனளொ
ன்றலுமெதிர்த்தான், தன்னிகர்பதினாயிரமடற்றந்தித்தடவலியு
டைபதண்டகனே. 4

விண்டொடநிமிர்ந்ததண்டமொன்றடலின்வில்லுருவெடுத்
தெனவிளங்கிக், கண்டவர்நடுங்கக்கனகப்பூண்பிடித்துக்கணித்தி
டினூறெனும்பாரங், கொண்டதையுலகங்குலைந்திடச்சுற்றிக்கொ
ற்றமுங்கூறியேவிடுத்தா, ளண்டமுநடுங்கக்கனலுருவென்னவரு
தலுங்காளியாங்கரிந்தாள். 5

தன்றடக்கையிற்றற்சனிவிரலாற்றள்ளினணுண்டுகளாகிப்,
பொன்றினததனைத்தண்டகன்கண்டேபொருமையானூறுகிங்
கிணிகள், வென்றிகொண்டணிந்தவிறற்பெருஞ்சுவதம்விட்டன
ன்மந்திரவிதியாற், சென்றதுசூரவைகொண்டனனென்றுசெப்பு
வாணிப்பெருஞ்சூலம். 6

நளினமீதுறைவோனல்கியதிதனைநாடியேவிலக்குகவிலையே,
வெளிதினிலடர்க்குமென்றனனுண்மையியம்பினேனென்னவுமி
சைத்தான், றுளிவிடங்கனல்கான்றெதிர்வருஞ்சூலந்துண்ணெ
னக்காளிமார்புறலு, முனிவுறப்பிடித்திட்டெறிந்தெழுங்கோப
முயற்சியால்முடுகியேநடந்தாள். 7

நடந்திடுங்கங்கைசெங்கரமொன்றானணுகிய தண்டகன்மார்
பிற், குடைந்திடுங்குலிசங்கிரிமிசைவீழுங்கொள்கையிற்குத்த
லுங்குருதி, படர்ந்தெழவுடலம்பகுந்திடவிறந்தான்படிவம்விட்
டனன்பரயோகர், கடந்திடுமுலகைவிடுதல்போலுயிரைக்காலன்
வன்றூதர்கைக்கொண்டார். 8

மைக்கிரிவிழல்போலசுரன்வீழ்ந்திடலும்வானவர்காளிமேல்
மலர்க, டொக்குறவிறைத்தாரக்கணத்தசுரர்சுற்றுறுபடையொ
டுந்துவன்ற, மிக்கதோர்கங்கையாதியர்நன்னீர்மூடியவியலுலகெ
ன்னச், செக்கரையதிதிமுழக்கிடுஞ்சமரிர்தெளித்திடுமசுரரோ
டெதிர்ந்தாள். 9

பெருந்திருவாளன்பெருந்திருவாட்டிபிறங்கடியுளங்கொடு
சேர்ந்து, திருந்துதஞ்சேனைதன்னொடும்போந்துதிசைதிசைப்புற
முரசறைந்து, பருந்தொடுகாகம்பறந்தலைபோர்ப்பப்படைக்கல
விதமெலாம்பரித்தே, கருந்தலையசுரருராங்காமுருளக்கடையுகக்
கடலெனப்பொருதாள். 10



பேரமர்விளைப்பவாற்றலராகிப்பின்னிடத்தன்னடற்படைக
ள், வீரனங்கெதிர்ந்துவிச்சுவாகனன்முன்விதித்ததோர்பெருந்
தடிநூறு, பாரமதுருக்கினுருவுடையதனைப்பற்றியேநடந்தெதிர்
செயந்தீ, சீரினர்பட்டநெற்றியிலேற்றத்திகைத்திலளசைந்தில
ணகைத்தாள். 11

பெருங்கயத்துயர்ந்தமத்தகத்தெரிந்தபெரும்புலினங்குசப்
பெற்றி, தருங்கதைவீழத்தனதிருகண்ணுந்தழலெழச்சயந்தி
தன்கையிற், பொருந்திறஞ்சூலமிருந்ததைநோக்கிப்புலையனதுயி
ர்குடித்தேகென், றருந்திறலோடும்விடுத்திடவெழுந்ததாலமோட
ழலுமிழ்ந்தம்மா. 12

அங்கண்மாஞாலமுழுவதுமசைத்திட்டாழியுமவனியுமஞ்ச
மங்குல்வானிறைந்துவருதலும்வீரன்மற்றொருசூலமேற்றெறிய,
நங்கைசெஞ்சூலநாடியங்கதனைநாலிருதுண்டமாய்த்தடிந்து, சி
ங்கமாம்வீரன்றுங்கமார்புக்குச்செகுத்துயிர்குடித்தெழுந்தது
வே. 13

சோரியுமூனுமுயிரொடுமுண்டுசுடரெழுநெடியமூவிலைவே
ல், பேரிருளகற்றுமிரவிபோற்பிறங்கிப்பெருந்திசைமூழ்கியேமீ
ண்டு, சீரிவசெயந்திசெங்கரமலரிற்சேர்ந்ததுசெயசெயவென்றே,
மாரியின்மலர்கள்வானவர்சொரிந்துவாழ்த்தினர்வாகைகொண்
டவள்மேல். 14

இவ்வணம்பூசல்விளைந்ததுஞ்சூரிறந்துமேசமாகாளிசெவ்வி
யசெயந்திசெயங்கொண்டதிறனுஞ்சிந்தனைசெய்துவஞ்சகனும்,
வெவ்வலியுடைத்தேவாந்தகன்றானுமிகும்படைபின்னிடமுன்னி
ட், டவ்வடற்களத்திற்போந்தனர்முரசமறைந்தனரார்த்தன
ரெதிர்ந்தார். 15

இகப்பகையசுரரிறந்தனரின்றென்றியம்பியேசண்டகாதி
னியு, மிகுவிறலசுரமர்த்தனியோடும்வெங்கனல்கண்கள்கான்றே
சிப், பகைகள்பாறியதெனநமர்களுளைப்பப்பரிகரிபதாதியோ
டிரதஞ், சகமிசையுருளவடர்த்திருதகுவர்தலையையும்வாளினற்
றடிந்தார். 16

வேறு

வஞ்சகன்தேவாந்தகன்மடிந்துவான்களத்,
அஞ்சிலரிலையெனவுறத்துச்சீறியே,
பஞ்சசாலத்தினிற்பற்றுந்தீயெனத்,
அஞ்சிடவசுரரைத்தொலைத்திட்டார்களே. 17

எதிர்ந்தவரியாவருமிறந்துபின்செயத்,
திர்ந்தெழுகொக்கரையார்த்துக்காளிகள்,
பொருந்திடப்பெருங்களநீங்கிப்போந்தனர்,
முதிர்ந்தவேதாந்தத்துமுதல்விமுன்னரே. 18

வந்தனர்பெருந்திருமலர்ப்பதங்களிற்
கொந்தணர்மலர்கடூய்க்கும்பிட்டேத்தினர்,
சுந்தரியவர்முகநோக்கித்தோகைமீர்,
நந்திருநகரினுற்றிசையுநண்ணியே. 19

இருந்துறுங்காளிகளோடுமின்னகர்,
பரிந்துகாத்துமதடிபரவுவார்க்கெலாம்,
பொருந்திடநன்மைகள்புரியுமென்றவு,
மருந்துதிபுகன்றனரமலைமுன்னரே. 20

சூழ்ந்தனர்பணிந்தனர்சுயம்புவோடுறை,
யேந்திழைபதங்களையேத்தியன்னசர்,
வாழ்ந்தனரடியர்க்குவரங்கணல்கியே,
வீழ்ந்திடாதுலகெலாம்புறக்கும்வெற்றியார். 21

மாகாளி தண்டகன் முதலசுரரை சம்கரித்த வத்தியாயம்

சருக்கம் முற்றும். (ஆகச்செய்யுள் 707).

---



## 18-வது தருமன்மா முதலாயினோர் சாபந்தீர்த்த வத்தியாயம்.

எனச்சனற்குமாரன்வந்திறைஞ்சியெந்தையை,
மனத்தினிற்றரித்துமுன்வகுத்தகாதையொன்றுநீ,
முனற்புதத்தொடுஞ்சொனுப்முறமையாதுயாவரே,
நினைப்பவத்தலத்தைமுன்னிகழ்த்தினர்கள்யாவரே. 1

என்னநந்திநாயகனியம்புவான்மயங்கிடா,
தன்னநீடுவாவிசூழ்ந்தமர்ந்தகொங்கர்தேசமாம்,
பொன்னிநாடதன்கணேபொருந்துதன்மசாலையா,
நன்னர்கண்வேதநாதநாலுநாலுமல்குமால். 2

இயமமுநியமமுமிலங்கியாகுநீதியு,
நயமுமுள்ளபூசுரர்கள்நயந்துவாழுநன்னகர்,
செயமுறுங்குராசநீதிசீரின்மல்குசெல்வமாய்,
பயமதின்றிவாழுமப்பதிக்கணீதிபற்றினோன். 3

வேறு

இச்சையின்மேவியவெச்சன்மாவெனுமிற்பயில்மாமறையோன்,
முச்சகமாதியமெச்சிடவாழ்பவன்முப்பொழுதாயகட,
னிச்சயமாகவியற்றிடுவேதநிதிக்குலசேகரன்வா,
னச்சுரனோர்பவனுக்கொருசேயுளனற்புதரூபமுளான். 4

தருமசன்மாவெனுமொருவன்முன்னூல் வினைதழுவினநாவாரச்,
சுருதிகளோதினன்மிருதிகளாதியதுகளறவேயறிவான்,
குரவனைமாமகிழ்வுறநிதியாகியகுறைவறவேயுதவி,
பருமாலால்முனமுதவினர்தாண்மலர்மனமுறவேபணியா 5

வேறு

நின்றவன்றனையன்றுதந்தைநிரம்புரூபமெலா,
மொன்றநாடினன்மன்றல்காலமிதென்றேயோர்வுறுவான்,
சென்றுகானிடைத்துன்றினோரொடுஞ்செந்நியுந்துசமித்தைக,
வின்றுதாவெனவன்றுபோயினனின்பரண்பரோடேகியே 6

மண்டுநீருணமா னுதானென வளர்ந்தசெஞ்சடையான்,
கொண்டவைகண்சந்துமாமுனிகுண்டிகைக்கரமோ,
டண்டுராதவனத்தெதிர்ந்தனன்கயன்றன்னையே,
கண்டுளாரொடுநின்றதன்மகன்மாநகைத்தனனே. 7

உடலமெங்கணுநிறைகொள்ரோமமுமுகிர்வளர்ந்தகையோ
டடவியின்கணேயெதிர்வரும்பொழுதில்லகையிங்கிதெனு,
விடலைநண்பினரொடுமகிழ்ந்தனன்மிகவுநிந்தைசெயா,
படிசெறிந்திடுமுருள்கல்கொண்டெதிர்படவெறிந்தனனே. 8

எறிதருஞ்சிலைப்படவெதிர்ந்திடமுனியியம்பிவான்,
மறைவினங்குலமுதன்மைகொண்டுயர்மதலையானவரே,
செறிகருங்கலினெறியலென்றசொல்செவிநுழைந்திலராய்க்,
குறிகொடங்கவரெறியநின்றிடுமுனிகுலைந்தனனே. 9

வேறு

அம்முனிநகைத்துநம்மையிகழ்வுற்றீர்
வம்பினெனுபெற்றீர்மம்மர்மயலுற்றீர் 10

கற்கொடுபுடைத்தீர்மற்கடநிகர்த்தீர்
சொற்படிறகத்தீர்நற்கதிதுடைத்தீர். 11

வேறு

என்றிவையிதம்பலவிசைத்துமாமுனி
குன்றியவுளத்தொடுங்கல்லிற்றுக்கலாற்,
றுன்றியகற்களாஞ்சொரூபஞ்சூழ்ந்திவ,
ணின்றிடுவீரெனநிகழ்த்தநின்றிலார். 12

வீழ்ந்தனரடிமிசைமெய்நடுங்கின,
ராழ்ந்தனர்துன்பிடையஞ்சியஞ்சியே,
சூழ்ந்திடுவினையினேஞ்சுருதியந்தண,
வாழ்த்திநின்பெருமையாற்சிறுமைமாற்றுவாய். 13



வேறு

வெளிற்றறிவுடையசிறியரேமிழைபிழையைவேராறுத்தாட்
கொளவேண்டுங், களிற்றினைவிடத்தைக்கடக்கலாயபிரமக்கருத்
தினைருவாத்திடுஞ்சாப, வளற்றினிலழுந்தலன்றியார்கடப்பாருஞ்
சினமஞ்சலெனறருள்வாய், துளித்திடுகருணைமேகமேயென
றுதுதித்தனர்வினைவழிதொடர்பால. 14

விஞ்சுகல்லறிவிரங்கிவேட்டுயர்ந்தவெண்டிருநீறணிவேதப்,
புஞ்சமாமறையோர்தமைப்புராந்தகனைப்புகழ்ந்தியானிந்தனைபுரி
வோர், துஞ்சுவர்கடிதுநிரயமாங்கலத்தேசூழ்ந்திடுமோதலாற்றா
யோர், நெஞ்சினினினையார்சிவனையந்தணரைநிந்தனைநினைத்தவர்
தமையே. 15

ஒருபொருட்பரமுமுருத்திரக்கடவுளுருவமோதந்தணரெ
ன்னத், திருமறைபுகலுந்தெய்வமாமறையோர்சிவனென்றமிவை
யுறிந்தோர்கள், பெருமைபாரறிவார்மாலவன்பிறப்புதோறுமந்த-
ணறையேபேணுங், குருமதிச்சடிலக்கூத்தனதுருவாய்க்கூறிடுமே
றைபெனக்குறித்தே. 16

இயமநியமவியல்புமற்றவர்க்கேசுயிபற்கையதாகுமாங்கதனு
ற், றயவினர்வெண்ணீற்றந்தணர்தேவர்தமுனிவோர்களென்
புலத்தோர், நயமொடுமுவப்பவருக்கியமங்கணல்கிமேமறைநெறி
நடாத்திப், பயமுமெய்யனபும்படைத்துயர்நதோர்கள்பணவரே
யன்றிமற்றெவரே. 17

மாற்றருங்காமவெகுளிபொய்மயக்கவலைகடந்தவருமந்தண
ரே, சாற்றருந்தெய்வஞ்சதுர்மறையிருக்குஞ்சரக்கறையவருளம
ம்மா, போற்றரும்பெருமையந்தணர்பெருமையென்றனன்புண்
டரிகத்தோ, னூற்றிருமுகத்துமென்றனன்கைலைநாதனேபரமெ
னுஞ்சுருதன். 18

பின்னுமீதுரைப்பானந்தனன்மறையோர்பிள்ளைகளுள்ள
மேற்பதைப்பும், வன்னிநேர்கோபந்தன்னுளத்தெழுந்தவன்மை
யுங்கண்டுமாலுற்றான், பன்னுவானந்தோபழிகிறுங்கடியபற்றி
னுமெற்றினுமறயின, மன்னியகுலத்தோரெனறெணுதெழுந்
தகோபத்தாற்சாபத்தைவகுத்தோம். 19

இன்றளவேற்றதவமெலாமிழந்தோமிளைஞருபலமியற்று தலாற், றுன்றினர்பவத்திலெனவுளத்தெண்ணிச்சொல்லுவாள சுருதியந்தணரே, குன்றிடுஞ்சாபநின்றிடாதெங்குங்குறுகுமின் குவலயமிதனிற், தென்றலங்கன்றுமன்றல்கொண்டுலவுதெருத் திகழ்திருத்தவத்துறையில். 20

அத்திருநகரத்தலாப்பொன்னிடலையெறிவடகரைக்கமரு ஞ், சித்திநாடோறுந்தந்திடுஞ்செல்வச்சிவபுரத்திருநகரதுவே, ச திதியோடாலந்துறையினறைழுந்தனனிசரல பினின்பேல்பான், முத்திதானருளுந்திருநகர்மூன்றுசடிகையினளவெனமொழி வார். 21

ஐம்புலனடக்குநான்மறைநீதிப்பராசரசேத்திரமென்று, மிம்பரினிசைப்பராப்பராசரனரியற்றியவமுதலிங்கமுமப், பைம் பொனுலையத்துட்டெட்புறமருவும்பார்வதிகோவிலின்மேல்பா, அம்பர்மாமுனிவருரகர்மானிடர்வாழ்த்துயர்சிவகஙகையொன் றுளதால். 22

உள்ளமீதுள்ளுமவையெலாமுதவுமுவப்பிலாவாயுளுஞ்செ ல்வந், தெள்ளுறவாழ்வுமிம்மையேயுதவுமெப்பெரும்பாவமும் போக்குந், தெள்ளுநீர்த்திவலையொன்றதிற்பருகிற்றென்சடனு டுத்தபூவுலகிற், கொள்ளுநீர்த்தீர்த்தமியாவையுமாடிக்குலவிய பேறடைகுவரால். 23

அமரர்போற்றுந்தத்தபாநீர்த்தடத்திலாடுவீரன்னதான த்தை, நமரெனவறிவோர்க்கோர்பொழுதேனுநல்குவிர்நன்மையு ணண்மை, மெயர்களாலேத்தற்கிசையுமோவன்னதானத்தினியல் பந்தவிடத்திற், றிமிரநீர்க்கங்கிகாரியஞ்செபந்தென்புலத்தற்குச் செயவொன்றுகோடி. 24

அனுவளவளிக்கிற்கோடியேயிதற்குமாடகமுதலிய தான, பணிதிகழுதச்சிவகங்கையாடிமாற்றமிச்சாபததையெனலுந், தணிவுறப்பணிந்துபோயினர்பொன்னித்தடங்கரைவிடங்கர்தம் பாகந், தணையொடுமமரர்போற்றவீற்றிருக்குஞ்சுந்தரத்திரு த்தவத்துறையில். 25



இருட்பகையெறிந்துவிளங்குறுமிரவியிளங்கதிர்றுணைமுக லாதிருண்டு, முருக்கிதழ்க்கமலமுகத்திபராடுமுழுமணியூசல்வி சொளியாற், பெருக்குமவ்விருள்கள்பிறிவுறவிளககிப்பிரமரங்கி ள்ளைவெள்ளஇனம், வரிக்குயில்மயில்கள்நாகணங்கந்தமலர் கொழுஞ்சோலைவாய்வந்தார். 26

நறவுகொப்பளிக்குங்குவளையீதாடிநாகிளவண்டிசைபெருக் கச், சுறவுவானகடுதொழுமெழுந்துகளுந்தூயநீர்மாய்புனற்றடங் கள், ளறைதருபானுநீருமேபகிருமன்னமுமறனுமென்னுஞ், மு றைதலாலங்கணீர்வலருறலானுபாறச்சாலையொத்துளதே. 27

கன்னிபங்கற்பிற்பன்னிகொண்டோடிக்கன்னிதன் கணவ னுக்கருளு, மின்னகரென்றேதுன்னுசெஞ்சாலியிடையறுதினம் பயிர்முளைக, ளன்னமாகதிர்கள்முதிர்விளைவரிபோரடுக்கனேர் நெற்குவைபங்கங், கென்னென்றாளினுமன்னுவதம்மாயிறைபவ னுறைதவத்துறையில். 28

வருணமாச்சிரமமாமறையிவற்றால்வரும்பலன்வகைவகைநா ன்குற், றிருவநீர்வீதியுருவெனவுடையான்றிருநகர்க்குற்றதே தெரியில், லரிபநான்மறையுமங்கமோராறுமிருதியுமாகமபுராண, மொருமைகொள்தருமமுதலியநான்குமுலப்புறுதோங்குமவ் வூர்க்கே. 29

சுருதியாகமங்கள்புராணமாமிருதிசொல்லுவதன்றியன்னி லமை, மருவினோர்நாளும்வானவர்கூட்டுமகமகந்தோறும்வளர்த் திடுவா, ரிருவர்காண்பரியவொருவனைமெனறுமிறைஞ்சுவோரில ங்குவெண்ணீற்றுத், திரிவரிதுலங்குநெந்தியார்க்குகந்தமாமணி செறிவுறத்தரிப்போர். 30

இருபிறப்பாளர்முக்குலமறவொன்றிலாதவரிசபாமிலவி ன், மருவிமேவளர்ப்போர்வானவர்தேவர்மாலயர்நிலத்தடிவறலா ற், பெருகொளியுயர்ந்தபூசுரரென்னப்பிறங்குவோர்நேசருள் விடங்கன், றிருவிழாவன்றிற்றிரண்டுசங்கீதஞ்செப்புவோர்றிச வதன்னகரம். 81

மறைநெறிவளர்ப்போர்வாள்வலியுடையோர்மறைபவரிறை
யவர்க்கிடையூ, றுற்றவுந்தனிற்போற்றலர்பொருதோளரொரு
பொருள்சிவனெனவுணர்வார், பொறைமிகுநல்விதேசருள்விடங்
கற்போற்றிபெற்றுளோர்வெண்ணீ, றநுகமோடணிவோர்மறை
கழன்மன்னருங்குடிநெருங்குமந்நகரம். 32

நவமணிக்குவையுமிருநிதிபெருக்குநல்வழிமுறைமையாற்
றேடிச், சிவனடியவர்க்குந்திருமறையவர்க்குந்தினந்தொறுந்தெ
விட்டாவளிப்போர், தவமெலாந்தருநீறெனவணிவோர்சாந்த
முந்தருமமுமுடையோ, ருவமிலாவுபயகுலவிசுத்தர்களாமுய
ர்குலவணிகர்வாழ்நகரம், 33

முன்னவர்பணித்தநன்மொழிவழுவாமுறைமையோருழவி
னுள்முதிர்ந்தோர், சென்னலாற்றநமநிகழ்வுறவளர்ப்போர்சிவ
னடியாரடித்திறத்தோர், பன்னிருமதியும்பயிர்கொளும்பண்
போர்பரன்றிருநீற்றணிபரித்தோர், பின்னவர்கைலைமுன்னவர்
போற்றும்பெற்றியோர்துற்றுவானகரம். 34

நாற்பெருங்குடியினீதியும்பொறையுநன்மையுந்தருமமுந்தி
ருவு, மேற்படுவோர்நகரமிபற்றிநான்முகத்தோனிருந்தியதென்ன
வேயிலங்கு, மாற்பாற்கபரர்க்கருமுனிவோர்க்குமல்வினைக்கி
டைந்துவந்தோர்க்கும், பார்ப்பதியோடிப்பரமர்வீற்றிருந்துபரிந்
தருள்பரிவதப்பதியே. 35

பங்கயமலரிற்கண்படுப்பணிலப்பள்ளநீர்ப்பழனங்களோடு,
மங்குறைமாந்தருங்கொடைக்கஞ்சிபழைத்துவாழ்வித்தவா
போற்றிப், பொங்குநீரிடந்தோர்தாள்மிசைப்பதுமநிதிதவம்புரி
ந்திடல்போலுஞ், சங்கமாநிதியப்பங்கயத்தழலிறவம்புரிந்து
றைவபோற்றயங்கும். 36

வேறு

திருவளர்சுருதியுந்தெய்வமங்கல
மருமகத்தமரரையழைக்குமார்ப்புமு,
விருவகைச்சாத்திரமிபர்புமோதையு
ரைநருமந்தவைரிருக்கையெங்குமே. 37



ஒருவனுலபரித்திபத்திருவிழாவொலியும்
பொருவின்மங்கலமெங்கணும்பொருந்திடுமொலியும்,
வரிவிழிநகிருபங்கையராடத்தொலியும்
பெருகுமின்னிசையொலியொடுமலிவுறப்பெருகும் 38

ஆறிலொன்றரசருக்களித்திட்டைந்தையு
நீறணிதேவுக்குநிலவுதென்புலத்,
தேறிபயிர்கட்கும்விருந்துக்கொக்கற்கும்
பேறுதற்காக்குறுங்குடிபிறங்குமால். 39

சோதியாலயநவமணிவிளக்கமுஞ்சுருதி
யாதியந்தணருஞ்சுசிவிளக்கமும்மரங்கின்,
மீதுகுலிகைவியன்மணிவிளக்கமும்விரவிப்
பாதிஞளிரவெண்பதங்கிலலைபப்பதிக்கே. 40

வேறு

தயவுமன்புமிகுநண்புமிசைபந்தோர்சந்ததம்பயிலுமிந்தந
கர்க்கண், ணிபமுழங்குதிருவீதிகள்கண்டாரிந்தயானகரமெங்
கைதபிரானுர், கபமுகாசூரனைவென்றிடுதந்திகந்தனந்திகணமேமா
டமர்கின்ற, செயமுறுங்கனகவாலையமுன்னர்ச்சிந்தையன்பினொ
டுசென்றுபணிந்தார். 41

தேவிபாகசிவதேசவிடங்கதேவதேவதிருவாளசுகந்தப்,
பூவினேரிதழிமார்பபுபங்காபரனைக்கலைபாரணவென்றே, நாவினு
லமரர்மாமுனிவோர்கணப்புதொண்டர்துதிப்பம்பியவாகி, மாவிரு
ந்துவிளையாடியவாசற்கோபுரத்தினிடைவந்துபணிந்தார். 42

மங்கைபாகர்மதிசூடியவேதயாலயற்குமறியார்மகிழ்கோயி,
லங்கோர்சார்பினமருஞ்சிவகங்கையமரர்மாமுனிவர்தமரமிகுந்
தே, பொங்குமன்பினோடுவகண்டப்பொற்றடத்தைநனுகிப்
பணிவுற்றே, பெங்கணோப்பினைகளிக்ககல்வித்தோபென்றுபாடி
னரகளாடினரின்பால். 43

அம்பொனுருலகமிப்பருமங்கேயாடி வல்வினைகளோடிடநீ
டுஞ், செம்பொனுருநவுகொண்டுமிடைந்தேதிரமெங்கணினு
மார்வனகண்டார், கம்பமோடுபுளகங்கொளவங்கங்கண்கணீர்
பொழியவன்பொடுசென்றே, யும்பர்நாடுசிவகங்கையிலாடவோ
டிவிடினதுசாபமுடைந்தே. 44

மலைக்குமாரனும்வல்வினைகொடுநோயெலாம்வரன்றி,
யலைக்கையாலடித்தகற்றிடுமருட்சிவகங்கை.
யிலைக்குமாறரிதாகியநீரினுட்படிந்தோர்,
புலைக்கொடும்பவப்புன்மையும்போயினவன்றே. 45

அங்கருட்சிவகங்கையிற்படிதனுஞ்சாபத்,
தங்குல்விட்டுமெய்யன்பெனுங்கதிருதித்தனவாற்,
றுங்கநீறணிந்தஞ்செழுத்தோதினர்தானந்,
தங்கையாற்கொடுத்தேகினர்சன்னிதிமுன்னர். 46

அங்கமெட்டைந்துமூன்றெனுமாகமப்படியே,
யெங்கணுதன்முன்னிறைஞ்சினான்பொடுமைங்கால்,
துங்கமூவலஞ்செய்தனர்முன்புபோற்றெழுந்தே,
மங்கைபாகனர்சன்னிதிமுன்புதென்பாலில். 47

வாழ்ந்திடுந்திருவாளவாரணமுகன்றாள்கள்,
தாழ்ந்துபோற்றினர்சங்கரன்தென்கைலாயன்,
சூழ்ந்துவானவர்போற்றியசுயம்பிரகாச,
னாழ்ந்தவன்பினர்க்கருள்திருவடிகள்கண்டார்த்தார், 48

பண்களாரவேபாடினராடினர்பணிந்தார்,
விண்களாதிக்குநாயகவேதவேதாந்தர்,
தண்கதிர்ப்பிறைபணிந்தசெஞ்சடைமுடித்தலைவ,
மண்களாருயிர்க்கருள்புரித்தலத்துறைவாழ்வே 49

திருவுக்கருளியபெருமைத்திருவோடுசெம்பாகத்,
துருவத்திருவழகொடுதற்பரசிவவுய்ந்தோமென்,
றருமைத்துதிகொடுபரவிக்குலமவையவைபோதி,
யிருவர்க்கரியவனருள்பெற்றுமைசினகரமுற்றார். 50



மனமற்றவருளமலமற்றலர்மிடைதவர்வாய்தல்,
புனலக்குலவர்கள்பணிவுற்றியல்மறைபரவுற்றே,
வனையற்புதவருளடியைப்பரவியகன்றப்பாற்,
றனையொப்பருமொருமுருகற்றொழுகனர்தவமுற்றார். 51

தண்டிப்பெருமான்றன்னடைச்சரணந்தாழ்வுற்றே
யண்டர்க்கரியானமன்றற்கோயிலகத்துள்ள,
தொண்டத்தொகையோர்கண்டுற்றிடவேசூழ்வுற்றப்,
பண்டைப்படியோர்சென்றப்புறம்வாழ்பதியுற்றார். 52

அம்பிகாபதியயாருக்கதிகமுற்றதபோற்,
செம்பொனார்திருத்தவத்துறைசெகதலதிலக,
நம்பினர்க்கருள்சிவகங்கைத்தீர்த்தநாயகமாஞ்,
சம்புவாழ்கதித்தலத்தன்னதானமேதானம். 53

திகடருங்கெயையிலச்செல்லுங்காசியில்,
மிருபலமன்னதானத்துகேவிலைச்,
சகமகிழ்கெயவடவிருக்கச்சாலையிலக்,
தொகுமன்னதானமேவில்லை சொல்லவே. 54

இவையலாற்கரையெறிந்தெற்றிச்சந்நிதிற்,
குவைவெலாமொழுகுபொன்முகரிக்கோட்டின்மேற்,
சிவமெலாமுடையவன்சிவனையர்ந்தரு.
ளுவமிலாத்தென்கைலாயத்தோங்கலில். 55

வேறு

ஏகம்பத்திறைவனருளுமையோடிருந்தாசியற்றசீர்க்கா
ஞ்சி, பாகம்பெற்றவளோடிருந்தருள்ருணைப்பருப்பதம்பழமலை
தில்லை, மாகும்பகோணம்வெதிரிகாச்சிரமம்பஞ்சமானதிவையை
மதுரை, நாகபொற்பணியாடணிந்தவனுடனயந்தருள்வடவன
நண்ணி. 56

ஞானவேதியர்கள்கோடிபேர்க்கன்னநல்கியபலனினுமதி
கம், கூனல்வெண்மதியந்தவழ்ந்தநீர்ச்சடிலக்கூத்தனையபிகை
யொடுங்குலவும், பானல்வாய்விட்டவஞ்சிறைத்தும்பிபடர்ந்தி
சைதிருத்தவத்துறையிற், றனமாமொருவர்க்கன்னமிட்டதற்கு
ச்சமனுறுததிகமாந்தவத்தீர். 57

தெளிசிவகங்கைதீரத்தினல்லாற்றிரைகொள் காயத்திரி தீர்த், தளிகொள்பேபிதையாள திருமுனத்தந்தவயிரவியபரிட்த் தன்பா, வெளியராய்வந்தவந்தணர்க்கனைமிடுபவர்யானையுமடைவார், களிகொளக்காயத்திரிநதிக்கரையிற்காரியங்கடவுள் முன்னுக. 58

அப்பெருஞ்சாத்தனடற்சனத்தோடொருளோடென்னவர்க் குறைவார், னெட்பிலாக்கடவுளிமையேவேண்டனுதவிடுநின்னைத்தனவைபெலாந், தப்பிலாதுறைத்தோமறைச்சதுமுகத்தோன்றந்தகாயத்திரிநதியி, னப்பினிலாடியையனைவணங்கியவன்முனமனவகொடுத்திருக. 59

சச்சிதானந்தத்தச்சிவகங்கைத்தடங்கரையிடத்தன்னதர, முச்சகமுழுதுமொருகுடைநிழற்றமுழுமணிதுயிற்றியமகுட, மிச்சையிற்றங்கியேற்றடலரியேறேறக்தினப்பூந்தவிசேறி, யச்சிரத்தேகத்தொடுபுவிபுரக்கவைத்திடுநிச்சயமாமால். 60

புனிதநீர்சிவகங்கையங்கரையிலிட்புராண, மினிதின்ஞேநிடக்கேட்பவர்க்கப்பலனிவையும், வனிதைபாகனுக்கன்பனுயமண்டலாதிபனுப்த், தனதனுமெனவிருந்துபின்சிவபதஞ்சார்வான். 61

திருமசம்பர்வேதலோர் சாபந்தீர்த்த சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் 18க்கு செய்யுள் 768.

85720
Q23:32.2119GTV
N12

முற்றிற்று.

Printed at the Wednesday Review Press, Trichinopoly.